
தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



மார்கழி - 2025

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

மார்கழி - 2025

படைப்புக்கள் அனுப்ப :

Mullaiamuthan1954@hotmail.com

mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஓவியங்கள்: நன்றி- இணையம்

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


யாவரும் நலமா?

காற்றுவெளி மின்னிதழின் மார்கழி இதழ் (2025) தங்கள் பார்வைக்கு வருகிறது.

அனைத்துப் படைப்பாளர்களுக்கும் எமது நன்றிகள்.

படைப்புக்கள் அனுப்புவோர்கள் எழுத்துப் பிழைகளின்றி அனுப்புங்கள்.இதழ் வெளிவருவதில் தாமதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

மேலும்,வடிவமைப்பிற்கு அனுப்பிய பின்னர் வரும் படைப்புக்கள் அடுத்த இதழில் வெளிவரும் எனும் நம்பிக்கையை பலமுறை சொல்லியும் சிலரின் கோபம் வருந்தக்கது.நாம் ஒன்றும் பெரிய இதழாளர்கள் இல்லை. நமது சக்திக்கேற்ப (சந்தா/அன்பளிப்பின்றி,விளம்பரங்கள் இன்றி வெளிவரும் இதழ் இது).ஒவ்வொரு இதழுக்காகவும் நாம்/தனி நபராய் உழைக்கவேண்டியிருக்கிறது.

குறைந்த பட்சம் இதழ் பற்றிய கருத்துக்களை/இதழ் கிடைத்தது பற்றிய தகவலையாவது பதிவிடும் பழக்கத்தை எனிவரும் காலங்களில் ஏற்படுத்துங்கள்.

காற்றுவெளி இதழ்களை முன் வைத்து பற்றிய சிலர் ஆய்வுகளை மேற்கொள்வதாக அறியமுடிகிறது.அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காற்றுவெளி இதழ்களின் தொகுப்பை நூலகம் இணையத்திலும் பார்வையிடலாம்.நூலகத்தில் இல்லாத காற்றுவெளி இதழ்கள் தங்களிடம் இருப்பின் அவற்றின் பிரதிகளை அவர்களுக்கும் தந்துவலாமே.

காற்றுவெளி இதழின் சிறப்பிதழ் வரிசையில் இங்கிலாந்து வாழ் படைப்பாளர்களின் சிறுகதைகளைத் தாங்கி மாசி இதழாக அச்சில் வெளிவரும்.அச்சிதழ் தேவைப்படுவோர் பதிவு செய்துகொள்ளுங்கள்.நங்கல் தரும் ஆதரவே 2026இல் காற்றுவெளியில் வெளிவரும் சிறுகதைகளைத் தொகுத்து நூலாக்க ஏதுவாகும்.

கார்த்திகை மாதம் கனத்த மாதமாக கழிகிறது.மாவீரர்கள் நினைவேந்தல்கள் ஈழம் உட்பட அனைத்து நாடுகளிலும் நடைபெற்றிருந்ததன,

அந்த வலிகளின் மாதம் நிறைவுற முன்னரே புயல்,மழை,வெள்ளம் மக்களை வாட்டி வதைக்கிறது. இதற்கிடையில் நோயின் அச்சுறுத்தல்,யுத்தம்,நாடுகளைப் பந்தாடும் வல்லாதிக்கங்கள்,பிராந்திய அச்சுறுத்தல்..என மக்களின் அவலம்/மரணம்,இடப்பெயர்வு/அகதி வாழ்க்கை தொடர்கிறது.

முடிவுறாது தொடரும் இச் சூழலில் விடுதலைக்காக/ சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரக் கனவுடம் இன்னும் போராடும் இனங்களுக்காக எந்தக் கதவும் திறக்கும் சாத்தியங்களைக் காணவில்லை.

யாவற்றுக்குமாக பிரார்த்திப்போம்.

அன்புடன்,
சோபா
*01/012/2025*

# படைப்பாளர்கள்

## கவிதைகள்

1. மாரிமுத்து சிவகுமார்
2. கதிர் லோகன்
3. சேஹு மொஹம்மது பெனாஸிரா
4. பெ.வெங்கட லட்சுமி காந்தன்
5. நெல்லை அன்புடன் ஆனந்தி
6. கு.பிரபு(கனடா)
7. அ.சீனிவாசன்
8. மதுஷன் சிவன்
9. S.பிரசாந்த்
10. த. ரவீந்திரன்
11. பெ.வெங்கட லட்சுமி காந்தன்
12. ஸ்ரீவாரிமஞ்சு
13. A.S சுந்தரராஜன்
14. மீ.யூசுப் ஜாகிர்
15. ச. இராஜ்குமார்
16. மு.ஆறுமுகவிக்னேஷ்
17. பானு ஜிப்ரி
18. சாய்சக்தி சர்வி
19. ரகுநாத் வ
20. நேசன் மகதி
21. கவிஜி
22. DR ஜலீலா முஸம்மில்
23. அலெக்ஸ்பரந்தாமன்
24. மு.ஆறுமுகவிக்னேஷ்
25. பாவலர் கருமலைத்தமிழாழன்
26. துங்கன்
27. ஐ.தர்மசிங்
28. யோகராசா கவிதா

## சிறுகதைகள்

1. திவா இராஜேந்திரன்
2. குந்தவை
3. முனைவர் பீ. பெரியசாமி
4. மணிமாலா மதியழகன்
5. உஷாராணி சம்பந்தன்
6. A.S.கோவிந்தராஜன்

## கட்டுரைகள்

1. லி .நௌஷாத் கான்-
2. கமலினி கதிர்(சுவீஸ்)




# நீ உதிர்த்த சிறகின் பறவை

### லி .நௌஷாத் கான்

முகநூல் மூலமாக எனக்கு நட்பானவர் சகோதரர் வந்தை யூசுப் ஜாகிர் அவரது கவிதைகளை முகநூல் வாயிலாக நிறைய படித்து இருக்கிறேன் .கடந்த விடுமுறைக்கு இந்தியா செல்லும் போது அவரை சந்தித்தேன் .அவர் எழுதிய நீ உதிர்த்த சிறகின் பறவை என்னும் கவிதை நூலை எனக்கு அன்பளிப்பாக தந்தார்.

இந்த இயந்திரத்தனமான அயல்நாட்டு வாழ்க்கையில் படிப்பதற்கு நேரம் கிடைக்காத போதும் படிக்க வேண்டும் என்ற வேட்கையோடு அலாரம் வைத்து உறக்கத்தின் நேரத்தை குறைத்து நட்பின் பல நூல்களை படித்து விமர்சனமும் எழுதி இருக்கிறேன் .

பார்ப்பதற்கு எளிமையான தோற்றத்தில் வயது குறைந்த தம்பியாக இருக்கும் எழுத்தாளரிடம் காதல் ரசம் சொட்டும் யதார்த்த அழகியலான கவிதைகள் இருக்கும் என எண்ணியிருந்தேன் , இவரிடமிருந்து இப்படிப்பட்ட தத்துவார்ந்த படைப்பை சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை.

சகோதரர் யூசுப் ஜாஹிர் அவர்களின் கவிதைகளை சர்வ சாதாரணமாக கடக்க முடியவில்லை .ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு கருப்பொருளில் இருந்தது .காதல் கவிதைகளில் கூட ஏக்கமும் ,வாதையும் நிறைந்து காணப்பட்டது .சில கவிதைகள் வாழ்க்கை தத்துவத்தை யதார்த்தமாய் ஆத்மார்த்தமாய் சொன்னது .

*அவளோடு பேச*
*நேரம் தேடும் எனக்கும்*
*கிடைத்த நேரமெல்லாம்*
*என்னோடு பேசும்*
*அவளுக்கும்*
*மனதளவில்*
*சமுத்திரத்துக்கும்*
*சிறு துளிக்குமான*
*இடைவெளி!*

இதை விட காதலை எப்படி பெரிதாய் சொல்லி விட முடியும்.

*எல்லா மதத்தவருக்கும்*
*ஒரே பிராத்தனை அறை*
*நூலகம்*

நூலகத்தின் சிறப்பை மூன்று வரிகளில் முத்தாய்ப்பாய் சொன்ன விதம் ரொம்பவும் பிடித்து இருந்தது என சொல்லலாம்.

*கேட்கும் நண்பர்களுக்கு எல்லாம்*
*காதல் கவிதை*
*எழுதி கொடுத்திருக்கிறேன்*
*முதல் முறை*
*எழுதும் போது*
*அத்தனை தடுமாற்றம்*
*அனுபவித்து பார்த்தவர்களுக்கு*
*இந்த கவிதையின் இயல்பு புரியும்*

என முதல் முதலாய் காதலை சொல்லத் துடிப்பவர்களின் எண்ண ஓட்டத்தை தனது கவிதைகளில் யதார்த்தமாய் பதிவு செய்கிறார்.

*உனக்கு பிடித்த*
*கதாநாயகனின்*
*திரைப்படத்தை*
*திரையரங்கின்*
*இருக்கையில் அமர்ந்து*
*பார்த்து கொண்டிருக்கிறேன்*
*கைகோர்த்தப்படி*
*பக்கத்து இருக்கையில்*
*அமர்ந்திருக்கிறது*
*உன் நினைவுகள்!*

என காதலி இல்லாத துயரத்தை எவ்வளவு ஆழமாக ஒரு பெரும் துயரோடு பதிவு செய்து இருக்கிறார் .அந்த கவிதையை படிக்கும் போதே நம்மையும் வாதை தொற்றிக் கொள்கிறது .

போகிற போக்கில் புரட்டுகிற பக்கமெல்லாம் காதலும் ,தத்துவங்களும் நிறைந்திருக்கும் நூல் .

காதலை நேசிக்க கூடிய எல்லோருக்கும் நிச்சயம் நீ உதிர்த்த சிறகின் பறவை கவிதை நூலை நிச்சயம் பிடிக்கும்!

*நூலின் பெயர் : நீ உதிர்த்த சிறகின் பறவை*
*ஆசிரியர் : மீ .யூசுப் ஜாகிர்*
*விலை : ரூபாய் 150*
*பதிப்பகம் : மௌவல் பதிப்பகம்*
*21/9 வரதர் தெற்கு மட விளாகம் தெரு,*
*வலங்கை மான் -612-804*

மாரிமுத்து சிவகுமார்

# கடவுளின் நாடகம்

கடவுள் நாடகமொன்றை அரங்கேற்ற விரும்பினார்.
நடிப்பதற்காக மக்களிடத்தே
நடிகனை தேடினார்
எவருக்கும் கடவுள் முன் நடிக்க துணிவில்லை.
தன் படைப்பில்
நடிக்கும் ஆற்றல் பின்னடைவானதைக் கண்டு
புலம்பினார்.
பார்வையாளனாக அமர்ந்திருந்த நான்
கடவுளிடம் இது பற்றி கலந்துரையாடி தீர்வுக்கு
வந்தேன்.
நூற்றாண்டுகளாக எமக்கு வாக்குறுதிகள் தந்தவர்களை
அடிக்கோடிட்டு காண்பித்தேன்.
அவர்களை அழைத்து வரும்படி கடவுள்
கட்டளையிட்டார்.
தயார் நிலையில் இருந்த மேடைக்கு அவர்களை
அழைத்து வந்தேன்.
இனி கடவுளின் ஆட்டம் ஆரம்பமானது.

நன்றி:அநாமிகா ரிஷி



## தமீம்.அசாருதீன் கவிதை

*மறந்துவிட்டேன் என்பதெல்லாம்*
*கற்பனை..!!*

*நினைவுகள் பாதிப்பதில்லை*
*என்பதெல்லாம்*
*பொய்..!!*

*வாழ பழகிவிட்டேன்*
*என்பதெல்லாம், நம்மை நாமே ஏமாற்றும்*
*வித்தை..!!*

*கனவுகளை என்ன செய்வாய்..?*

*ஏதோ ஒரு பாடலில், ஒரு வாசனையில்*
*கடக்க முயல்கையில்,*
*விழுந்து எழுந்தவனாய்*
*திரும்பிப் பார்க்கையில்,*
*நீ மொத்த ஆயுளுக்குமாய்*
*ஆட்கொண்டுவிட்டாய்..!!*

*எது பொய்..??*
*நீ இல்லை என்பதா?*
*உன்னை மறந்துவிட்டேன் என்பதா?*

*துடுப்பை துறந்த பின் மிதக்காதா எந்தப் படகும்..?*

*“தனிமை”*
*மறப்பதற்கான*
*மறைப்பதற்கான*
*போர்வை..!!*



**கதிர் லோகன்**

# மாவீரர்களின் நினைவு

தாய்மண் ஏங்குது தனைக்காத்த தடயங்களைத் தேடி
போய்வந்த சுவடுகளில் பொறிகள் கண்டு பொருமி
தேய்பிறையின் நிழல்கூடத் தெரியாமல் நடந்த
தூயவுள்ள மாவீரர்கள் தோன்றிய தமிழீழம்!

பாவிகளின் சதியினிலே படுக்கின்றனர் கல்லறையில்
சாவிகள் இன்னும் சாமானியர்களிடம் சரித்திரத்தின்
வடிவில்
காவிகள் கனைத்தாலும் கல்லறையே பதிலாகும்
தாவியெவர் போனாலும் தமிழீழம் மலராது!

பூமி சுற்றலாம் சாமியும் சுற்றலாம்
ஆமி என்ற இராணுவமும் ஆங்காங்கே நிற்கலாம்
மில்லரும் அங்கயற்கண்ணியும்
மிடுக்கெடுத்துப் பாய்ந்த மண்ணில்
கடுகளவும் யாருக்கும் கைபிடிமண்ணில் ஆதிக்கம்
தொடுமளவிற்கு மண்காத்தோர்
அனுமதியினைத் தரவில்லை
கொடுநிலம் என்றே கொண்ட கொள்கைக்கு
விடியும் ஈழம் என்று விடியவிடியத் தூங்கும்
மாவீரர்களை நினைப்பவர்க்கே
புரியு மவர்கள் உயிரின் தியாகமே!



சேஹு மொஹம்மது பெனாஸிரா

# எது அறுவடை



சேற்றுக் குழிக்குள்
புதைந்து வேர்விட்ட
கால்கள்

விளைநிலம் சுற்றிய
விழிகளோடு
வலி உண்ட மெய்

காலைப் பனித்துளி
தொட்டுப் பச்சைப்
புல் வெளி தாண்டிய
நினைவுகள்

வெயில் மழை
அறியா
இடையன் அறிந்த
அந்த இயற்கை உலகின்
சஞ்சாரம் கொண்ட
ஆத்மா

சித்திரை வெயில்
குடித்து சினுங்கிய
மழைத்துளி பிடித்து
மண்புதைந்த
மண்வெட்டி தூக்கிய
அந்த அசையா உடல்

தேனீரை அறுசுவையாக்கி
அல்லும் பகலும்
உழைத்து வடுவாகிய
காய்ந்த கரங்கள்


கொக்குகளோடும்
குருவிகளோடும்
மயில்களோடும்
இரவு வாத்துகளோடும்
விளக்கேற்றிக் களைத்த
அத்தனை உழைப்புளோடும்

விதை நெல்
ஊற வைத்து
முளைதிறன்
நிறுத்து
விளைதிறன் ஊகித்த
அனுபவசாலி

நாற்று மேடை
நடை தொடங்கி
நெல்மணி
காணும்வரை
கசந்து போகாத
காத்திருப்பு

ஒவ்வொரு மனிதனும்
உண்ணும் உணவின்
பின்னால் காய்ந்து
கிடக்கும் விவசாயியின்
வியர்வைத்துளிகளே
உலகில் மேன்மை
மிக்க அறுவடை....

# பெ.வெங்கட லட்சுமி காந்தன் கவிதைகள்



**என்னவளே**

அன்பான என்னவளே
அருகினில் வாராயோ

ஆசைகள் துளிர்க்கிறதே
ஆனந்தம் பிறக்கிறதே

இறகுகள் விரித்தாடுதே
இதமாய் இருக்கிறதே

ஈர்த்திட்ட விழியாளே
ஈரப்பதம் இதயத்திலே

உணர்வுகள் சிலிர்ப்பானதே
உறவாகிட நினைக்கிறதே

ஊஞ்சலாடும் மனதில்
ஊதாப்பூ கண்சிமிட்டுதே

எழுதிய வார்த்தைகள்
எண்ணத்தில் கவிதையானதே

ஏந்திழையின் பார்வையில் ஏக்கமது தீர்ந்ததே

ஐக்கியமாகிடு என்னுள்
ஐயமது விலகிடவே

ஒன்றாகட்டும் மனங்கள் ஒன்றிணைந்து
வண்ணமாகட்டுமே

ஓராயிரம் நினைவுகளில்
ஓய்ந்திடாது கனவுமே

கன்னியின் முகவடிவில்
கனிவும் உண்டானதே

காத்திருந்த தருணமெல்லாம் காரிகையின்
எண்ணமே

கதிரவனின் ஒளியானாய் கீழ்திசை வானிலே

குறையில்லை குமரியுன்
குணத்தில் என்றுமே

சஞ்சலமில்லை சலனமில்லை
சகியே உன்னாலே

தணலானது உள்ளம்
தழுவிடத்தான் ஆவலானதே

இடையசைத்து இம்சித்து
இசைமீட்டிச் செல்கிறாயே

வசியமாக்கினாய் என்னையே வசமானேன்
உன்னிடமே

நளினமான நர்த்தகியே
நாணத்தில் வீழ்ந்தாயோ

யௌவன ராணியே
ரீங்காரத் தேனீயே

மயக்கும் மான்விழியாலே
மனதைத் துளைத்தாயே

மாற்றமது என்னிடமே
மங்கையிடம் தஞ்சமே

வாழ்ந்திடலாம் கண்ணே
வாழ்க்கையில் இணைந்தே...

◈

**உயிரே உனக்காக**

உணர்வான உறவே
உள்ளத்தில் உறைந்தாயே

உதிரத்தில் கலந்தே
உரிமை ஆனவளே

உன்னில் பாதியானேன்
உன்னையும் மறந்திடுவேனோ

உயிரே உனக்காக
உயிர்த்தேன் அன்பே

உண்மையான காதலால்
உறவாடிக் களிப்பேனே

உன்மத்தம் ஆனேனே
உன்னால் நானே

**நெல்லை அன்புடன் ஆனந்தி**
**மிச்சிகன், வட அமெரிக்கா**

# திருக்குறள் கவிதை

*குறள் 899:*
ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

**தலைப்பு: வேந்தனே ஆயினும்**

*ஆன்றோர் முன்னிலையில்*
*அடக்கம் பணிவு அவசியம்*
*அவரை ஆத்திரப்படுத்துதல்*
*அழிவை அழைப்பதற்குச் சமம்*

*சீரான கொள்கையுடன்*
*நேர்மையுடன் வாழ்வாரை*
*சீற்றப் படுத்துதல்*
*கேடிற்கு வழியாகும்*

*உயர்வான கொள்கைகளை*
*உறுதியாய் கடைபிடிப்பாரை*
*பகைக்க முயல்வார்*
*பழிக்கு ஆளாவர்*

*நல்ல குணங்களுடன்*
*நாளும் நடப்பவரை*
*சீண்டி விடுபவர்கள்*
*சிக்கலில் மாட்டுவார்*

*உயரிய பண்புடையாரை*
*உரசிப் பார்த்திடில்*
*வேந்தனே ஆயினும்*
*வேரோடு கெடுவான்.*



## கு.பிரபு (கனடா)

அடைத்து வைத்த குவளைக்குள்
ஆயிரம் ஆவிகள், முதியவர் உலகம்
அம்னீசியாவும் அழகிய வரம்தான்
அறைகளுக்குள் வாழ்க்கை அடங்கும்போது
பேசும் வார்த்தைகள் சுவாதீனத்தை இழக்கின்றன
கேட்பதற்கு காதுகள் இல்லாதபோது
தாத்தாவின் வாழ்க்கைப் பெட்டகத்தை
ஒற்றை விரலில் சுமந்தபடி நடக்கின்றது மழலை.
முதியோர் இல்லச் சுவற்றில் தொங்குகின்றன
பட்டங்களும் பாராட்டுகளும் மகனின் வரவிற்காய்
விடுமுறைக்காய் அவர்கள் விடுதலையானபோது
முதியோர் கூட்டில் அடைபட்டது எனது வாழ்க்கை
பட்டமரம் துளிர்க்கின்றது பட்டாம் பூச்சியின்
இருப்பில்
தாத்தா மடியில் குழந்தை
முதியோர் இல்லச் சுவர்கள் கரைகின்றன
வாழ்ந்தவர் கதைகளால்
அன்னையர் தந்தையர் தின அலங்காரங்கள்
அடுத்தநாள் கண்ணீரால் கழுவப்படுகின்றன



# ஜ.சீனிவாசன் கவிதைகள்

### எவர் கையும் தனக்குத் தேவையில்லை


ஒரு பட்டாம்பூச்சி,
ஒரு எறும்பு,
ஒரு செடி,
ஒரு பூ.

ஒரு தேனீ,
ஒரு குழந்தை,
ஒரு நட்சத்திரம்,
ஒரு குருவி,
ஒரு சுகமான நினைவு—

இவற்றில் ஏதோ ஒன்று
போதும்:

அழுகையைத் தொடங்கவிடாமல் தடுக்கவோ,
தொடங்கியதை நிறுத்தவோ.

மனதைப் புண்ணாக்கிய
கரங்களே மருந்திட
வேண்டும் என்பதில்லை.



### குற்றப்பத்திரிகை

காகிதம் செல்லரித்துவிட்டது.
ஈ மை மொய்த்துவிட்டது.
புழு பயிரைத் தின்றுவிட்டது.
களை நிலத்தை மூடிவிட்டது.
நாய் எலும்பைத் திருடிவிட்டது.
பூனை பாலைக் குடித்துவிட்டது.
குரங்கு கனியைப் பறித்துக் கொண்டது.

புலி கிராமத்தில் புகுந்துவிட்டது.
யானை வயலை நாசம் செய்துவிட்டது.
பறவை விமானத்தை மோதிவிட்டது.
காட்டெருமை ரயிலைத் தகர்த்துவிட்டது.
மரம் பாதையில் குறுக்கிட்டது.

நிலம் சரிந்து விழுந்துவிட்டது.
வெள்ளம் வீடுகளை அடித்துவிட்டது.
கடல் கரையை விழுங்கிவிட்டது.
ஏரி உடைந்து பாய்ந்துவிட்டது.
இடி மரங்களைத் தாக்கிவிட்டது.
ஆறு எல்லையை மீறிவிட்டது.
வானம் பொய்த்து நின்றுவிட்டது.
மழை நம்பிக்கை தகர்த்துவிட்டது.
இயற்கை கோபத்தில் எரிந்துவிட்டது.

மண்ணை மறந்தேன், மரத்தை வெட்டினேன்.
நீரை நஞ்சாக்கி, விண்ணைப் புகைத்தேன்.
ஆயினும்
இன்னும் நான் மட்டும்
நிரபராதி என்று
நம்புகிறேன்.

இப்படிக்கு,
மனிதன்.


**மதுஷன் சிவன்**

பிறந்து ஒரு சில நாட்களில்
ஒரு கனவு வந்திருந்தது
இறுதியாக அவர்களுடன் கடந்த பனிக்காலத்தில்
நீண்ட ஒரு மேயையில் ஒன்றாக இருந்து
உணவருந்தியிருக்கிறேன்
அப்பொழுது அவர்கள் எனக்கொரு பரிசு தந்தார்கள்
காக்காய் ஒன்றின் அட்டைப்படத்துடனான
ஒரு கையெழுத்துப் பிரதி
படித்துப்பார்க்கும் எந்த ஆசைகளும் எனக்குள்
இருந்திருக்கவில்லை
ஒருதடவைக்கு இருதடவை அட்டையை
முகர்ந்து பார்த்து
பின் அவர்களிடமே கொடுத்து விட்டேன்
அன்று இராப்போசனம் கடந்து தூங்கப்போகும்
முன் யன்னல் வழி வானத்தை எட்டிப்பார்க்கிறேன்
தொடர்ச்சியாக மின்னல்கள் வந்து வானத்தை பாகம்
பிரித்தபடி இருந்தது
குறித்த நட்சத்திரத்தை மாத்திரம் கண்கள்
குறி வைத்து பாத்திருந்தது
மெதுமெதுவாக அந்த நட்சத்திரம் என்னுள் வந்திறங்கி
உள்ளிறங்கி உள்ளிறங்கி
பயணித்தபடி இருக்கிறது,பின்
காலத்தின் சர்ப்பமென சுற்றிப்போட்டது
ஒளிச்சமிக்கையில் உரையாடுகிறது
என்னையே உற்று பார்த்படி இருக்கிறது
என்னை யான்னல் ஒன்றை உடைத்து பறந்து
போகும்படி கட்டளையிடுகிறது
கால்கள் தடுமாறுகிறது
கண்களுக்குள் இருந்து நீல வெளிச்சம் பீறிடுகிறது
யன்னலை உடைத்த கணத்தில்
பின் முதுகில் அமர்ந்து கொள்ளவென
காக்காய் ஒன்று என்னைக்கடந்து போனது

**S.பிரசாந்த், வந்தவாசி**

# தேநீர் கடை

பசித்த வயிறுக்கு
பத்து ரூபாயில் குறை தீர்வு!
ஆவி பறக்கும் சுடு தண்ணியில்
அடிக்கடி தாகம் தீர்த்துக் கொள்ளும்
கண்ணாடி குவளை!
வாழைப்பழ நுனியில்
விழா கூட்டம் போல சூழ்ந்திருக்கும்
கொசுக்களின் ஆட்டம்!
எச்சில் தேநீர் துளிகளை
தித்திக்கும் தீர்த்தம் என்று
பருக மொய்க்கும் ஈக்கள்!
ஈரத்தில் நனைந்து இருந்தாலும்
நாட்டு நிலவரத்தை எடுத்து
சொல்லும் செய்தித்தாள்!
"அரசியல் பேசாதீர்கள்" என்ற
வாசகத்தின் எதிரில்! அரசியலை
மட்டும் பேசும் மனிதர்கள்!
கடனுக்கு தேநீர் குடித்துவிட்டு
அதை கடைக்காரரிடம்
சொல்ல தயங்கும் ஒரு சிலர்!
பழக்கப்பட்டவர் புகைப்பிடிக்க
பழக்கமில்லாதவர்
பரிசாக வாங்கி வரும் புகை!
இப்படிப்பட்ட கடையில் கூட
"தேநீர் போதையை"
கைவிட முடியாமல் பலர்
பரிதவிப்பது உண்டு!
அதில் நானும் ஒருவன்...!!



# கவனிக்கப்பட வேண்டிய பதின்ம வயதினர்

கமலினிகதிர், சுவிற்சர்லாந்து

இலங்கையில் பதின்ம வயதுப் பருவத்தினர் குறிப்பாக ஆண் பிள்ளைகள் வெகுவாக கவனிக்கப்பட வேண்டியவர்களாகிறார்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட போரினால் அவர்கள் பட்ட இழப்புகளும் கொடுரமான வலிகளும் அவர்களை மிகவும் பாதித்திருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. தாயையோ தந்தையையோ சகோதரர்களையோ இழந்திருக்கும் வலி எதனாலும் ஈடுகட்ட முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.அந்த வலிகளிலிருந்து பெரியவர்களே இன்னும் வெளி வர முடியாமல் தவிக்கும்போது இந்தச் சிறுவர்கள் அதனைக் கடக்க முடியாமல் தவிப்பதில் ஒரு தவறுமில்லையே. அதுவும் அந்த வயதில் அவர்கள் மேல் மிகக் கொடுரமாக வலிந்து சுமத்தப்பட்ட சுமை அவர்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது குழந்தையாக இருந்து தற்போது பதின்ம வயதுக்குள் நுழைந்தவர்களும்;,அப்போது பாதிக்கப்பட்டவர்களால் பெற்று எடுக்கப்பட்ட குழந்தைகளும் கவனிக்கப்பட வேண்டியவர்களே. அவர்க ளைச் சரியான வழியில் கொண்டு செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு ஆசிரியர்களையும் சமூகத்தையுமே சார்ந்திருக்கிறது.

மேற்குலக நாடுகளில் ஆசிரியரிடம் பேசுவதற்கு எந்த மாணவனோ, மாணவியோ தயங்கித் தவிப்பதில்லை. தங்களுக்கேற்படும் எல்லா சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஆசிரியர்களிடம் மனந்திறந்து பேசக்கூடிய சூழல் இருக்கிறது.ஆனால் இலங்கையில் ஒரு சில ஆசிரியர் களிடம் மட்டுமே மாணவர்களால் மனந்திறந்து பேச முடிகிறது. பெரும் பாலான ஆசிரியர்கள் மாணவர்களால் நெருங்க முடியாதவர்களாகவே காணப்படுகிறார்கள்.ஆசிரியர்கள் மாணவர்களிடம் நெருங்கி வர வேண்டிய நிலையைக் கொண்டு வர வேண்டும்.சிறுவயதினர் அனேகமாக எல்லோ ரிடமும் ஒட்டிவிடுவார்கள்.ஆனால் பதின்ம வயதினர் நம்பிக்கையுள்ளவர் களிடம் மட்டுமே தம் கவலைகளையோ, தெளிவற்ற சிந்தனைகளையோ, பிரச்சனைகளையோ பேசத் தயாராக இருப்பார்கள்.

ஆசிரியர்கள் தம் நிலையிலிருந்து இறங்கி உங்களை வழிநடத்த நாங்கள் இருக்கிறோமென்ற நம்பிக்கையை பதின்ம வயதினருக்கு ஏற்படுத்த வேண்டும்.அவர்கள் வயதிலேற்படும் பாலினக் கவர்ச்சி;, ஆடம்பரப் பொருட்களின் மோகம்,மது,போதைப்பொருட்களின்பால் நாட்டம் போன்ற இன்னோரன்ன சந்தேகங்களுக்கு சரியான பதில் அளித்து அவர்களை அரவணைத்துப் போதல் ஆசிரியர்களின் பொறுப்பாகும். அழகாயிருக்க ஆசைப்படுவதும்,எதிர்ப்பாலினரைக் கவர்வதற்காக கூடிய நேரம் செலவழிப்பதும் இயல்பு.பாலியல் உணர்வுகள் ஏற்படும் காலமது. பாலினக் கவர்ச்சியை பெரும் குற்றமாகப் பார்க்காமல் இயல்பான ஒன்று தான் அது ஆனால் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்பதையும் அது வரைமுறை தாண்டியதாக இருக்கக் கூடாதென்பதுடன் முக்கியமாக அதற்கான வயதெல்லை இருப்பதையும் வலியுறுத்த வேண்டும். இவற்றைக் குற்றங்காணும் கண்களுடன் நோக்காது வெகு சாதாரணமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதை ஒரு பெரிய குற்றமாகத் தண்டிப்பதை விடுத்து பெண்சிறார்களை எவ்வாறு மதித்து நடந்து கொள்ள வேண்டு;ம் என்பதை இயல்பாகச் சொல்லித்தர வேண்டும். அப்போது பதின்மவயதுச் சிறுவர்கள் பெண்களை மதிக்கக் கற்றுக் கொள்வார்கள். அப்போதுதான் இந்தப் பாலியல் வன் கொடுமை, கூட்டாகச் சிறுமிகளைப் பலாத்காரம் செய்தல் போன்றன எம் நாட்டில் அழிந்தொழியும்.

முன்னர் வீடுகளிலே பெற்றோர்,உறவினர்களால் பெண்களை மதித்தல் இயல்பாகத் தானாகவே வந்திருந்தது.எப்போது இந்த நெறியற்ற பழக்கங்கள் ஊடுருவின என்பது தெரியவில்லை. இப்போது தாய் தந்தையரின் முறைகேடான வாழ்வியல், மனைவி,பிள்ளைகளை விட்டுவிட்டு தந்தைமார் வேறு உறவை நாடுதல்,மனைவிகளின் தகாத உறவு போன்ற ஒழுக்கக்கேடான விடயங்கள் அரங்கேறி வருவது கண்கூடு.இதைப் பார்த்து வளரும் சிறுவர்கள் அதையே தாமும் கைக்கொண்டு வாழப் பழகுகிறார்கள்.தந்தைமாரின் பொறுப்பற்ற செயலினால் குடும்பப் பாரத்தை தாம் ஏற்றுக் கொண்டு அல்லல்படும் எத்தனையோ சிறுபராயப்பெண்களைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இதை முற்றாக அழித்தொழிப்பது காலத்தின் கட்டாயம். பாடசாலைகளில் நல்வழி,கொன்றைவேந்தன், மூதுரை, திருக்குறள் போன்ற நீதிநூல்கள் சொல்லித்தர வேண்டிய தேவை இப்போது இருக்கிறது.ஆணைப்போல் பெண் ஒரு சக இனம் என்பதையும் அவர்கள் ஆண் என்ற இனத்தை மகிழ்விப்பதற்காகப் படைக்கப்பட்டவர்கள் அல்ல என்பதையும் உணர வைக்க வேண்டும். பெண் சிறார்களின் அசௌகரியங்கள், மற்றும் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் ஒவ்வொரு ஆண்பிள்ளைகளின் கடமையென்பது வீடுகளிலும் பாடசாலை மட்டத்திலும் உணர வைக்கப்பட வேண்டும்.

பதின்ம வயதினர் உணர்ச்சிகளுக்குள் விழுந்து விடாமலிருக்கும் அறிவைக் கற்பிக்க வேண்டியது பெற்றோர்,ஆசிரியர்களின் கடமை யாகும்.விரைவில் உணர்ச்சி வசப்படுதலே கொலை,தற்கொலை,

மற்றவர்கள் மீது வன்முறை,பாலியல் கொடுமை போன்ற பாரிய குற்றங்களைச் செய்ய வைக்கிறது.எல்லா விதமான உணர்ச்சிகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்க அவர்களைப் பழக்கப்படுத்தினால் பல அவலங்கள் நடைபெறாமல் செய்துவிடலாம். குடும்ப வன்முறைகள் பெரும்பாலும் கோபம் என்ற உணர்ச்சிக் கொந்தளிப்பாலேயே நடைபெறுகின்றன.தெரிந்தோ தெரியாமலோ தவறு இழைக்கும் இளையவர்களிடம் கைபிடித்து அணைத்துச் சென்று தவறை உணர்த்து வது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.அத்தோடு தவறு என்று உணரப் படும் போது அவர்களைக் குற்றஞ்சாட்டும் தொனியில் பேசுவதைத் தவிர்த்துவிட வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து தாய்நாட்டுக்குள் செல்லும் கூடுதலான பணமும் அவர்களை அழிவுப்பாதைக்கு எடுத்துச் செல்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கஷ்டப்படாமல் கிடைக்கும் பணத்தின் அருமை தெரியாமல் இந்தப் பதின்ம வயதுச் சிறார்கள் செலவழிக்கிறார்களோ என்று எண்ணக் கூடியதாக இருக்கிறது அவர்களின் சில செயல்கள். இங்கு குளிருக்குள் எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில்தான் பணம் அனுப்புகிறார்கள் என்பதைப் பெரியவர்கள் பிள்ளைகளுக்கு உணர்த்தத் தவறுகிறார்களோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

இவ்வயதினருக்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் அவற்றைச் சமாளித்துக் கொண்டு போகச் சொல்லாமல் அவற்றை எதிர்கொண்டு தீர்க்கச் சொல்லி தரவேண்டும்.பிரச்சனைகளைக் கண்டு ஓடுவது கோழைத்தனம் என்பது ஆண்,பெண் இருபாலாருக்கும் சொல்லித் தரப்பட வேண்டியவையாகும். மற்றவர்கள் துன்பத்தைக் கண்டு கொள்ளவும்,அது குறித்து தம்மால் முடிந்தவற்றைச் செய்யவும் ஊக்குவிக்க வேண்டும்.

பெற்றோர்- பிள்ளைகளிடையே உறவிலும்,உரையாடலிலும் மனக் காயங்கள் ஏற்படும்போது பிள்ளைகளின் மனதில் அன்பு மறைவதனால் தவறான உறவுகளிடம் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.இந்த நேரங்களில் பெற்றோர் விழிப்புடன் செயல்படுவது அவசியம்.தங்களால் முடியாத பட்சத்தில் ஆசிரியர்களிடமோ,புத்திசாலித்தன மாக செயல்படு பவர்களின் உதவியையோ நாடுவதில் தயக்கம் கொள்ளக் கூடாது.

பதின்மவயதினரிடம் உண்மையையும்,நேர்மையையும் மட்டும் விதைத்து விட்டால் தப்பான வழிக்குச் செல்லத் தயங்குவார்கள்.குறுக்கு வழியில் கிடைக்கும் வெற்றி நிரந்தரமானதோ,அறம் சார்ந்ததோ இல்லையென்பதை அடிக்கடி பேசும்போது வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இது பெரியவர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். மீண்டும் மீண்டும் சொல்வது இளையவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துமென்றாலும் தளர்ந்து போகாது சொல்லி வர வேண்டும்.

எம் நாட்டிலேற்பட்ட கடந்தகாலக் கசப்பான நிகழ்வுகளால் பெரும்பாலும் பெண்கள் அதாவது இளம் விதவைகளும்,சிறுவர் சிறுமிகளுமே பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.அவற்றைச் செப்பனிட வேண்டிய பொறுப்பு ஆசிரியர்க ளையும்,சமூக ஆர்வலர்களையுமே சார்ந்தது.பாலியல் உணர்வுகளைத் தூண்டும் படங்கள்,செய்திகள்,போதைப் பழக்கம் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற இந்தக்கால கட்டத்தில் இளையவர்களைக் காக்க யாவருமே முன்வர வேண்டும். பிள்ளைகளிடம் தொலைபேசிப்பாவனை முடக்கப்பட வேண்டியது அவசியம் என்பது பல சமூக ஆர்வலர்கள் கருத்து.அதில் தரமற்ற வீடியோக்களை தரவிறக்கி மற்றவர்களுக்கும் அனுப்பி கூட்டாக கெட்டுப் போகிறார்கள்.

மலேசிய எழுத்தாளரும் உளவியலாளருமான திரு. கே.ஏ.குணா தனது ‘கருவறையில் தொடங்கும் அறிவார்ந்த பெற்றோரியல்’ என்ற நூலில் அவர் எழுதியிருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.இந்நூலுக்காக அவர் மலேசியச் சிறையில் குற்றம் புரிந்த கைதிகள் மீது ஆய்வு செய்த போது வாசிக்க சிரமப்படும் பெயர்களைக் கொண்டவர்களாக இருப்பதை அறிந்து கேட்டபோது காரணத்தை அறிந்து தான் கவலை கொண்டதாக எழுதியுள்ளார். எண்கணித சாஸ்திரப்படி(எழுத்துக்களை நீட்டி,குறுக்கி) அர்த்தமில்லாமல் பெயர் வைத்திருந்ததாக எழுதியுள்ளார்.பெயர் வைப்ப தில் தீவிர கவனம் செலுத்தும் பெற்றோர் தரமான பிள்ளை வளர்ப்பில் ஏன் கவனம் செலுத்துவதில்லை என்று விசனப்பட்டு எழுதியிருக்கிறார். இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அத்துடன் இந்தக் காலகட்டத்தில் தாயகத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதும் வன்முறைக் கலாச்சாரமும், தற்கொலைகளும் அதிகரித்து வருவதைக் காண முடிகிறது. குடும்பங்களுக்குள்ளேயே விரோதமும் வன்முறைகளும் தலைதூக்குகின்றன.இரண்டுமே இளையவர்களின் வாழ்க்கையைக் காவு கொள்ளத் துடிப்பதை வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பதும் ஒரு குற்றமே. இந்தக்காலகட்டத்தில் ஆன்மீக உணர்வும்,யோகா,மனவளக்கலை என்பனவும் கைகொடுக்கும் என்பது எனது கருத்தாக இருக்கிறது. உடல் உள வளர்ச்சிக்கு இவை தூண்டு தலாக இருந்து அவர்களை நல்வழிக்கு இட்டுச் செல்லும். உடலையும், உள்ளத்தையும் செம்மைப் படுத்தினாலே யாவும் நல்லதாக அமையும். மனநலத்தில் ஆன்மீகம் முக்கிய பங்கு வகிக்கிறது.கடவுள் நம்பிக்கை எல்லாவற்றையும் அவர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும். இதனைக் கருத்தில் கொள்வது நன்மை பயக்குமென்று கருதுகிறேன். இன்றைய சமூகச் சீர் கேடுகளுக்குள்ளிருந்து நாளைய சந்ததியினரைக் மீட்டுக் காத்து அவர்களை நல்ல சிற்பங்களாகச் செதுக்க வேண்டியது எல்லோரினதும் கடப்பாடாகும்.



# பயணங்கள் பல பணயம் ஒன்றே

திவா இராஜேந்திரன்

**ஊ**ரெல்லாம் அதேப்பேச்சு. எங்கு திரும்பினாலும், கேட்குமிடம்மெல்லாம் அதே அவச்சொல். இத்தனை வருடத் திரைவாழ்வில் சந்தித்த முதல் பேரவமானம். மனமெல்லாம் ரணம் ரணமாய் கோவமும், ஆற்றாமையும் பொங்கிப் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. எத்தனை வெற்றிப்படங்கள், எத்தனை விருதுகள், எல்லாம் ஒரு அவச்சொல்லால் வெளியுலகம் பார்க்கக்கூசும் நிர்வாணியைப் போல மனம் கூனிக்குறுகிநிற்கிறது சந்திரபிரகாஷிற்கு.

தமிழ்த்திரைப்பட இயக்குனர்களில் சந்திரபிரகாஷ் தொட்டதெல்லாம் பொன்விழா, வெள்ளிவிழாத் திரைப்படங்கள். இப்பொழுது அனைத்தும் காயிலாங்கடைப் பழைய இரும்பாகிப்போனது. வீட்டின் வாசலில் எப்பொழுதும் தயாரிப்பாளர்களும், வாய்ப்புத்தேடும் நடிகர்களும் குவிந்திருக்குமிடம் இப்பொழுது செய்தியாளர்களால் நிறைந்திருக்கிறது.

இவையனைத்திற்கும் காரணம் சந்திரபிரகாஷால் அறிமுகம் செய்யப்பட்டக் கதாநாயகி க்ளாரா. முதல் படத்திலேயே தான் சிறந்தநடிகை என நிரூபித்திருந்தாள். அடுத்தடுத்து நடித்தப் படங்களனைத்தும் வெற்றிப்படங்கள். கடைசியாக சந்திரபிரகாஷின் இயக்கத்தில் க்ளாரா நடித்தப் படத்திற்குக் கடந்தவருடம் சிறந்த நடிகைக்கான மாநிலவிருதும், தேசியவிருதும் அறிவிக்கப்பட்டிருந்தது. நேற்றுத்தான் தேசியவிருது வழங்கும் விழா. விருதை வாங்கிவிட்டு சென்னையில் வந்திறங்கியதும் முதல் செய்தியாளர்கள் சந்திப்பில், தன்னுடைய முதல் பட வாய்ப்புக்காக இயக்குனர் சந்திரபிரகாஷ் ஏற்படுத்திய ‘நிர்பந்தத்தை’ பகிரங்கமாக தெரிவித்தாள்.

அப்பொழுதிருந்து இந்த நொடிவரை அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், சமூக ஊடகங்களிலும் சந்திரபிரகாஷ் பேசு பொருளானான். வெளியே செல்ல முடியாமல் வீட்டிலிருந்தபடியே “நான் எந்தத் தவறும் செய்யவில்லை. நடிகை க்ளாரா கூறுவது முழுக்க முழுக்கப் பொய்” என்று பேசி ஒரு வீடியோவை சமூகவலைத்தளத்தில் பகிர்ந்துவிட்டு வீட்டிற்குள்ளேயே அடங்கியிருந்தான்.

சிலர்க் கண்டனங்களைப் பகிர்ந்திருந்தாலும் அதிகப்படியாக சந்திரபிரகாஷிர்கே ஆதரவு தெரிவித்த வண்ணமிருந்தனர். “எவ்ளோ நல்ல நல்லக் குடும்பப்படங்களை எடுத்தவர். அவர் தப்புப் பண்ணிருக்க வாய்ப்பே இல்ல”, “அவர் நல்ல மனுசன். அவர் பேரக்கெடுக்க யாரோ பின்னாடி இருந்து பிளே பண்றாங்க”, “அவர்ப் படத்துலயே நடிச்சு விருத வாங்கிட்டு அவரையேக் குத்தம் சொல்ல எப்படித்தான் மனசு வருதோ?”, இப்படித் தனக்காக வரும் ஆதரவுக்குரல்களை சமூக வலைத்தளங்களில் பார்த்து ஆறுதலடைந்து கொண்டான் சந்திரபிரகாஷ்.

விருதை வாங்கிவிட்டு வீட்டிற்க்கு வந்ததும் க்ளாராவீடு அல்லோலப்பட்டிருந்தது. வெளியில் கிடைத்த சில ஆதரவுகள் கூட வீட்டிலில்லை. ஆரத்தி எடுத்து வரவேற்க வேண்டிய வீடு ஆக்கிரோசனத்தைக் கக்கி அவளை வரவேற்றது. உள்ளே நுழைந்ததும் சொந்தமாக தொழில் செய்யும் அண்ணன் குடும்பம், கல்லூரிப் படிப்பு படிக்கும் தம்பி, திருமணமான அக்கா, மாமா, ஹார்ட் பேஷண்ட் என்று பெருமையாக சொல்லிக்கொண்டு வீட்டிலிருக்கும் தந்தை, முழங்கால் வலியில் அமர்ந்தே இருக்கும் தாய் என எல்லோரும் மனக்கூச்சல்களை வெடியாக வெடிக்கத் தொடங்கினர்.

ஆனால் க்ளாராவைத் திட்டிய அனைவருமே சந்திரபிரகாஷைக் கடிந்தது போல் கூட தெரியவில்லை. “கெட்டுப்போய்த்தான் வாய்ப்ப வாங்கணுமா? இப்டித் தப்பு செஞ்சு எங்களுக்குச் சம்பாரிச்சுக் கொண்டுவந்து கொட்டுன்னு யாராவது சொன்னோமா?”, “சரி போனவரைக்கும் போகட்டும்னு விட்டுத் தொலைக்க வேண்டியது தான? இப்போ ஏன் பழசைக் கிளறணும்?”, “வெளிலத் தல காட்ட முடியல. சொல்றதுக்கு முன்னாடி எங்களப்பத்தி யோசிச்சியா?”, “அவார்ட் வாங்குனத் திமிருல பேசிட்டு வந்துட்ட, இனிமேல் அடுத்தப் படம் யாருக்குடுப்பா?” இப்படியாக ஒவ்வொருவரும் ஆதங்கத்தையும், கோவத்தையும் கொட்டித்தீர்த்தனர்.

வீட்டிலிருந்த க்ளாராவின் நாய் மட்டும் ஆறுதலாக அவளையும், அவள் கையிலிருந்த விருதையும் நாக்கால் ருசித்துக்கொண்டிருந்தது. அண்ணனுக்குத் தொழிலும், அக்காவுக்குப் பெரியஇடத்துச் சம்மந்தமும், தம்பிக்கு நினைச்சப் படிப்பும் கொடுத்தது எல்லாம் ஒருநிமிடம் மனதிற்குள் நினைத்துக்கொண்டு அனைவரிடமும் “இது என் வாழ்கை, யாரும் தலையிட வேண்டாம்” என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றாள்.

உள்ளே சென்றுத் தாளிட்டுவிட்டு நேராகக் குளியலறைக்குச் சென்று குழாயைத் திருகினாள். தண்ணீர் மழையாகக் கொட்டியது. அப்டியே அந்த இடத்திலேயே அமர்ந்து கொண்டாள். மேலேவிழும் தண்ணீரில் அவளின் கண்ணீர் சங்கமித்தது. குளித்துவிட்டு வெளியே வந்து உடைகளை மாற்றிவிட்டு அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள். அடுத்தநாள் காலை அவளது அறையின் வெளிமுகப்பிலிருந்து பார்க்கும்போது தூரத்தில் ஒரு விமானம் தரையிறங்குவதைக் கண்டாள்.

அந்த விமானத்தில் தடகள வீராங்கனை க்ரித்திகா வந்திறங்கினாள். விமானத்திலிருந்து வாடகைக் காரிலேறி நேராக வீட்டிற்குச் சென்றாள். வீட்டின் வாசலிலே நின்றிருந்தச் செய்தியாளர்களைக் கடந்து நேராக வீட்டின் நுழைவாயிலையடைந்து வேகமாக உள்ளே நுழைந்தாள். வீடு கலையிழந்திருந்தது. அம்மாவின் முகத்தில் தப்பு செஞ்சதுக்கு நல்லா வேணும் என்கிற ஏளனமும், சொந்த பந்தங்களின் ஏச்சுப் பேச்சுக்கு வாங்கிய அவமானமும், பொண்ணுக்குக் கல்யாணம் பண்ற வயசுல இந்தக் கெட்டப் பேர் அவசியமா என்கிற வேதனையும் ஒரு சேர முகத்தில் பிரதிபலித்தது.

க்ரித்திகா அம்மாவிடம் ஏதும் பேசாமல் நேராக தந்தையின் அறைக்குச் சென்று தாழிட்டாள். அறையில் தனியாக நேற்றிலிருந்து குடித்துக்கொண்டிருந்த சந்திரபிரகாஷ் தாழ்பாளிடும் சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தான். மகளை பார்த்ததும் மிகுந்தப் போதையிலும் தர்மசங்கடத்தில் தலையைத் திருப்பிக்கொண்டான். நேராகச் சென்று அவனிற்கு

எதிராகவே நாற்காலியிட்டு அமர்ந்துகொண்டாள் க்ரித்திகா.

“எப்போ வந்த?”

“இப்போதான்”

“ரெண்டு நாளைக்கு முன்னாடிதான் ஏதோ மேட்ச் இருக்குனு போன? அப்புறம் ஏன் திடிர்னு? நியூஸ் கேள்விப்பட்டு வந்தியா? எனக்கு ஒன்னும் பிரச்சனை இல்ல. சரி நீ போய்ச் சாப்டுட்டு ரெஸ்ட் எடு. போ. நான் கொஞ்சம் தனியா இருக்கனும்” என்று போதையிலும் தெளிவாகப் பேச முயற்சித்து உளறினான்.

“இல்லப்பா. உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும்.”

“என்ன?” என்று போதையில் அரைக்கண் மூடியபடியேக் கேட்டான்.

“ரெண்டு நாளைக்கு முன்னாடி நானும், க்ளாராவும் ஒண்ணாத்தான் ஃப்லைட்ல போனோம்”

க்ளாரா என்ற பெயரைக் கேட்டதும் கத்தத் தொடங்கினான் சந்திரபிரகாஷ் “அந்த நாயப் பத்திப்பேசாத. ஏதோ அஞ்சாறுப் படம் தொடர்ந்து ஓடவும் திமிரு வந்துருச்சு. பொட்டச்சி அவளுக்கே அவ்ளோத் திமிருன்னா எனக்கு எவ்ளோ இருக்கும்? பாப்போம் இனி அடுத்து எப்படிப் படம் நடிக்குறான்னு?” என்று உளறும் தந்தையை இதுவரைப் பார்க்காதத் தந்தையைப் பார்த்த வியப்பிலிருந்தாள் க்ரித்திகா. மனதிற்குள் எண்ணியது நடந்திருக்கக்கூடாது என்று பயத்திலேயே அமர்ந்திருந்தாள்.

மீண்டும் உளறல் தொடங்கியது “எல்லாம் இந்த மீடியாக்காரனுகளச் சொல்லணும். அவதான் வெக்கமில்லாம சொல்றான்னா இவனுகளும் அத அப்டியே எடுத்து போட்டுட்டு இருக்கானுக. அவ சொன்னதுக்கு அப்புறம் ஒருத்தனாவது திருப்பி நீ தெரிஞ்சுதான போன. ஒழுக்க சீலியா இருந்தா அப்போவே முடியாதுன்னு சொல்ல வேண்டியது தான? அப்போப் போய்ட்டு இப்போவந்து ஏன் ஒப்பாரி வைக்குறன்னு கேக்க வேண்டியது தான?” என்று இடைவிடாமல் உளறிவிட்டு வாய்க்குள் “ஏதோ ரேப் பண்ண மாதிரி சீன் போட்டுட்டு இருக்கா!” என்று சொன்னது அவள் காதில் விழுந்ததும் சட்டென்று எழுந்துவிட்டாள்.

அவள் எழுந்ததும்தான் தான் உளறிவிட்டோம் என்று உரைத்தது சந்திரபிரகாஷிற்கு. தலையைக் குனிந்தவாறே அமர்ந்திருந்தான். போதையில் அமர்ந்திருந்தத் தந்தையை முதல் முதலாக அருவருக்கதக்க மனிதராகப் பார்த்தாள். “இந்த மனுசன்கிட்டயா கைப்பிடித்து நடந்து, மேலே ஏறி, உருண்டுப் புரண்டு விளையாடுனது? இடி இடிக்கும்போது இறுக்கமாக் கட்டிப்புடிச்சு படுத்திருந்தது இந்த ஆள்கிட்டயா? எனக்குன்னு வரப்போறவன் கிட்டக்கூட இந்த மனுசன்கிட்டக் கிடைச்சப் பாதுகாப்பு உணர்வு இருந்தாப் போதும்ன்னு நினைச்சோமே? ச்ச” என்று மனதிற்குள் சலித்துக்கொண்டாள். உடனே அங்கிருந்துப் போகவேண்டும் போல என்றிருந்தது. ஆனால் மனதில் தோன்றியதைப் பேசிவிட்டு ஒரேயடியாக இந்த வீட்டை விட்டுப் போய்விடலாம் என்று முடிவு செய்தாள்.

“அப்படியெல்லாம் முடியாதுன்னு சொல்லிட்டுப் போயிற முடியாதுப்பா. பொம்பளைங்கப் பொறப்பு அப்டி. உங்களுக்குச் சொன்னா புரியாது. இருந்தாலும் சொல்றேன். அன்னிக்குக் க்ளாராக்கிட்ட ஃப்லைட்ல போகும்போது உங்ககிட்ட சொல்லி டைரக்ட் பண்ண ஒருகதை சொன்னேன். சொல்லி முடிச்சதும் இது உன்னோடக் கதையா? உனக்கு நடந்தக் கதையான்னு கேட்டாங்க? எனக்கு நடந்தது தான். ஆனா வேற யாருக்கும் இனிமேல் நடக்கக்கூடாது. அதே சமயம் இத என்னால நேரடியா அப்பாட்டச் சொல்ல முடியாது. அதுனால அப்பாட்டச் சொல்லி படமா எடுங்கன்னு சொன்னேன். ஆனா அவங்க உங்கப்பாக்கு இந்தக் கதையெல்லாம் புரியாது. எனக்கு ஒருநாள் வாய்ப்பு வரும். அப்போ நானே எடுக்குறேன்ன்னு சொன்னாங்க. அப்பானால ஏன் முடியாதுன்னு கேட்டேன். கொஞ்சம் யோசிச்சுட்டு ரெண்டுநாள் கழிச்சு உனக்கேத் தெரியும்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க. இப்போதான் புரியுது அவங்க ஏன் அப்டி சொன்னாங்கன்னு?”

“என்ன கதை? உனக்கு என்ன நடந்தது?” என்று அதிர்ச்சியில் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே எழ முற்பட்டார். போதையில் மீண்டும் சரிந்து நாற்காலியிலேயே விழுந்தார். “சொல்லு, என்ன கதை அது? உனக்கு என்ன நடந்துச்சு?” அப்டினு விடாமல் கேட்டான்.

“நான் ஸ்டேட் லெவெல்ல என்னதான் பெர்ஃபார்மன்ஸ் பண்ணிருந்தாலும் இன்டர்நேஷனல் மேட்ச்க்குச் செலக்ட் ஆகல. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ரீசன் சொல்லித் தட்டிக்கழிச்சுட்டே இருந்தாங்க. நான் செலக்ட் ஆகாம வந்தப்போ நீங்க என்ன சொன்னிங்கன்னு நியாபகம் இருக்கா?” சந்திரபிரகாஷ் யோசித்தான். “முடிஞ்சவர ட்ரைப் பண்ணு. எவ்ளோ செலவு ஆனாலும் பரவால்ல. பர்சனல் கோச் வேணும்னா கூட வச்சுக்கோ. ட்ரைனிங்க்கு ஃபாரின் போகணும்னா கூட போய்ட்டு வா. ஆனா ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணிக்காத. அப்டிக் கஷ்டப்பட்டு கலந்துக்கணும்ன்னு நமக்கு என்னத் தலயெழுத்தா? இல்ல நீ ஜெயிச்சுச் சம்பாரிச்சுப் போட்டுத்தான் நம்மக் குடும்பம் பொழைக்கணுமா? அதுனால சான்ஸ் கிடைக்கலன்னு ரொம்பப் ஃபீல் பண்ணாத. விடு பாத்துக்கலாம்.” அப்டின்னு தான சொன்னிங்க.

“அதுக்கு அடுத்த வருஷம் செலெக்ஷன் போகேல தான் தெரிஞ்சது, செலெக்ஷன் காமிட்டியோட ஹெட் திறமையைக் கிரௌண்ட்லக் காட்டி பிரயோஜனமில்லை. அவரோட

ரூம்லதான் காட்டணும்னு. எனக்கு வேறவழித் தெரில. ஒரு காட்டுக்குள்ள சிங்கத்துக்குப் பயந்து மரப்பொந்துல மறஞ்சுருக்கும் போது உடம்புல ஏதோ கம்பளிப் பூச்சியோ, பாம்போ ஊருச்சுன்னா எப்படிப் பல்லக் கடிச்சுட்டு, மூச்சப் புடிச்சுப் பொறுத்துட்டு இருப்பமோ அதுமாதிரி நினைச்சு ஒருநாள் 'இருந்துட்டு' வந்தேன். இன்டெர்னேஷனல் மேட்ச்லக் கலந்துக்கிட்டேன். இந்தியாவுக்கு மெடல் வாங்கிக் குடுத்தேன்."

சந்திரபிரகாஷிற்கு அடித்தப் போதையே இறங்கி அதிர்ச்சி அதிகமாகி தலை சுற்றியது. "என்ன சொல்ற? என்னக் காரியம் பண்ணிருக்க? அப்டி கெட்டுப்போய் விளையாடணும்னு என்ன அவசியம்? நான் சம்பாரிச்சதே மூணு தலைமுறைக்கு இருக்கு. இதுல நீ இப்டிப் போய் சம்பாரிச்சுட்டு வரலன்னு யாரு அழுதா? என்று கத்தினான்.

ஒரு அசட்டு சிரிப்பு சிரித்துவிட்டு "இதே வாய் நான் ஜெயிச்சு மெடல் வாங்கிட்டு வந்தப்போ என்ன சொல்லுச்சு? நான் சம்பாரிச்ச சொத்தெல்லாம் ஒண்ணுமே இல்ல. நீ வாங்கிக் கொடுத்தப் பேர்தான் பெரிய சொத்துன்னு சொன்ன அதே வாய் இப்போ ஏன்ப்பா இப்டி சொல்லுது?"

"ஹேய், நான் என்ன சொல்றேன்? நீ என்ன சொல்ற? இப்டிக் கெட்டுப் போய் சம்பாரிச்ச பேர் வாங்குனா என்ன? வாங்கலைன்னா என்ன?"

"க்ளாரா சொன்னதுதான்ப்பா. உங்களுக்குப் புரியாது. ஸ்கூல்லப் படிக்கும்போது எக்ஸாம் பேப்பர்ல வரவேண்டிய ரெண்டு மார்க்குக்கும், காலேஜ்ல பிராக்டிக்கல்ஸ்ல நியாமா கிடைக்க வேண்டிய மார்க்குக்கும், வேலைக்குப் போனா ப்ரோமோஷன்க்கும், இன்கிரிமெண்டுக்கும்ன்னு பல பயணங்கள் இருந்தாலும் பணயம் எங்க உடம்பாத்தான் இருக்கு. அவ்ளோ ஏன் பஸ்ல போகும்போது ஒரசுறவனுகளை சகிச்சுக்கிட்டு போனாதான் வெளிலபோய் நாங்க திறமைய வளத்துக்கவும், காட்டவும் முடியுது. அப்படித் நாங்க ஜெயிக்கிறது வெறும் காசுக்காக இல்ல. தன்னோட கனவுக்காக. லட்சியத்துக்காக. அதுக்காக ஜெயிச்சவங்க எல்லாரும் இப்டி போய்த்தான் ஜெயிச்சாங்கன்னு அர்த்தம் இல்ல. இப்டி போனவங்க எல்லாரும் போக வைக்கப்படுறாங்கன்னு தான் சொல்றேன்"

என்ன சொல்வதென்றேப் புரியாமல் விஸ்கிப் புட்டியை எடுத்து அப்படியே இரண்டு மடக்குக் குடித்துவிட்டு மீண்டும் தலைக் குனிந்தவாறே "மத்தவங்கள விடு. நீ என்கிட்ட முன்னாடியே சொல்லிருந்தா எவ்ளோ செலவானாலும் பரவால்லன்னு பெரிய லாயரா வச்சு அவன கம்பளைண்ட் பண்ணி உள்ள தூக்கி போட்ருப்பேனே."

"இந்த மாதிரிப் பலக்கம்பளைண்ட், பலபேர் பண்ணிருக்காங்க. அவங்கள ஒன்னும் பண்ண முடியாது. நாங்களேக் கம்பளைண்ட் பண்ணனும்னாக் கூட அவனுக்கு மேல இருக்குறவங்கக் கேக்குற அளவுக்கு எங்களுக்குத் தகுதி வேணும். அதுக்கு நாங்க ஜெயிச்சாத்தான் அந்தத் தகுதி வரும். அதான் அவன் ரூமுக்கு போனேன். செலக்ட் ஆனேன். ஜெயிச்சதுக்கு அப்புறம் ஜெயிச்ச எல்லாரும் சேர்ந்து அவன்மேல கம்பளைண்ட் பண்ணோம். அந்த ஆள சஸ்பெண்ட் பண்ணவச்சோம். ஆனா நாங்க இதவெளில சொன்னா நேஷனல் லெவல்ல இஸ்ஸு ஆயிரும்னு சொல்லக் கூடாதுனு எழுதி வாங்கிட்டாங்க. அதான் உங்ககிட்டச் சொல்லி படமா எடுக்க சொல்லலாம்ன்னு க்ளாராக் கிட்ட சொன்னேன். ஆனா அவங்களே பாதிக்கப்பட்டவங்கதான்னு நேத்துதான் தெரிஞ்சுது."

"ஹேய், நீயும் அவளும் ஒண்ணா? நீ நாட்டுக்காகப் பண்ணதும் அவ காசுக்காகப் பண்ணதும் ஒண்ணா?"

"ஹ்ம். இவ்ளோ சொல்லியும் உங்களுக்கு புரியலல்ல. அவங்க வெறும் காசுக்காகத்தான் உங்ககிட்ட வந்துருந்தாங்கன்னா இன்னைக்கு அவங்களுக்கு நேஷனல் அவார்ட் கிடைச்சுருக்காது. இப்டி ஒரு அவார்ட் கிடைக்குற அளவுக்கு திறமையிருக்குற பொண்ண பெட்ரூம்க்கு வந்தாதான் சான்ஸ்ன்னா அந்த உடம்ப ஒருநாள் நாய்க்கு இரையா குடுக்குறதுல தப்பு இல்லயே? அப்புறம் ஏன் வெளில சொன்னாங்கன்னா வேற யாரும் அந்த நாய்க்கு இறையாயிற கூடாதுன்னுதான். புரியுதா?"

வாய்பொத்தி அழ தொடங்கினான்.

"நீங்க ஏன்ப்பா அழறீங்க? நான் கூட இத வெளில சொன்னா மக்களுக்கு புரிதல் வரும்னு நினைச்சுத்தான் படமா எடுக்கணும்னு நினைச்சேன். ஆனா அவங்க நேத்து பிரஸ் மீட்ல சொன்னதுக்கு அப்புறம் சோசியல் மீடியால அவங்கள கேக்குற கேள்விகளும், வசைப்பேச்சுக்களையும் பாத்தா 'நீங்க அப்போ சொன்னமாதிரி இவ்ளோ நாளா ஏன் சொல்லல? விருப்பமில்லாம ஏன் போன? எல்லாத்துக்கும் ஒத்துக்கிட்டுதானே போன? அப்டினு போனவளத்தான் தப்பு சொல்றாங்களே தவிர கூப்டவன யாரும் தப்பு சொல்ற மாதிரி தெரில. ச்ச"

அழுதுகொண்டே "இப்போ என்னைய என்ன பண்ண சொல்ற?" என்றான்

"நான் என்னப்பா சொல்றது? இங்க வர்ற வர என் மனசுலக் கூட எங்கப்பாத் தப்புப் பண்ணிருக்க மாட்டார்னு ஒரு சின்ன நம்பிகை இருந்துச்சு. இதே மாதிரிதான ஒவ்வொரு பொண்ணும் தன் வீட்டு ஆளுகள நினைச்சுருப்பா. ஆனா தப்பு பண்ற ஒரு ஆம்பள கூட நம்ம வீட்டுப் பொண்ணுகளும் ஏதோ ஒரு ஆம்பள அவளத் தப்பா நடத்துவான்னு நினைக்குறது இல்லல?. இனிமேல் தப்புப் பண்றதுக்கு முன்னாடி அப்டி நினைக்க

முயற்சிப் பண்ணுங்க'' என்று சொல்லிவிட்டு வெளியேற திரும்பினாள்.

சட்டென்று அப்படியே க்ரித்திகாவின் காலில் விழுந்தார் சந்திரபிரகாஷ். ''என்ன மன்னிச்சுரும்மா. பெரியத் தப்புப் பண்ணிட்டேன். மன்னிச்சுரும்மா'' என்று கால்களை பிடித்துக்கொண்டு சொல்லி அழுதார்.

''நீங்க சாரிக் கேக்க வேண்டிய ஆள் நிறையபேர் இருகாங்க, அம்மா உட்பட. நான் இனிமேல் இங்க வரமாட்டேன். கிளம்புறேன். பை'' என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியே சென்றாள்.

கீழே சென்று வாடகைக் கார் புக் செய்துவிட்டு தன் அறையிலிருந்த அனைத்தையும் எடுத்துக்கொண்டு அம்மாவிடம் ''தப்பு அப்பா மேலதான்'' என்பதை கண்களாலேயே சொல்லிவிட்டு கண்ணீராலேயே விடைபெற்றுவிட்டு வெளியேறி வரும்போது செய்தியாளர்கள் சூழ்ந்துகொண்டனர். மைக்கை முன்னாள் நீட்டி பலதரப்பட்ட கேள்விகளை மாறி மாறித் தொடுத்தனர். சிறிதுநேரம் ஏதும் பேசாமல் அமைதியாக நின்றிருந்தாள். கேள்விகள் நின்றது. அனைவரும் க்ரித்திகாவின் பேச்சுக்காக காத்திருந்தனர். சமூக ஊடகம், செய்தி ஊடகம் அனைத்திலும் நேரலை சென்று கொண்டிருந்தது. ஒருவர் ''ஏதாவது சொல்லுங்க மேடம்'' என்றார்.

''ஒரு பத்து நிமிஷம் பேசாம இருக்குறதையே உங்களால பொறுத்துக்க முடியலையே. இந்த பெண் சமூகம் பல தலைமுறையா பேசாம இருக்கு. இப்போ தான் பேச ஆரம்பிச்சிருக்கு. நீங்க கேள்வி மேல கேள்வி கேட்டு அவங்கள மறுபடியும் ஊமை ஆக்கிரத்திங்க. கேள்வி மட்டுமே கேட்டுட்டு இருக்காம, அவங்க என்ன சொல்லவராங்கன்னு காது குடுத்து கேளுங்க. அப்போதான் எல்லாம் வெளிச்சத்துக்கு வரும்.''

''மேடம் அப்போ உங்க அப்பா மேலதான் தப்புன்னு சொல்றிங்களா?''

''பாதிக்கப்பட்டவங்க சொன்னாதான் தப்பு நடந்துச்சா, இல்லையான்னு தெரியும். தப்பு செஞ்சவங்க ஒத்துக்கிட்டு மனம் வருந்துனாத்தான் தப்பு கொறையும். இடைல நீங்களோ, நானோ விவாதம் பண்றது வெட்டிப் பேச்சுதான். நன்றி''

''கடைசியா ஒரு கேள்வி மேடம், நடிகை க்ளாராவோட கம்பளைண்ட்ட தொடர்ந்து நிறையா பேர் வேற வேற துறைல இருக்குறவங்க கூட 'மீ டூ' ன்னு ஹாஷ்டாக் போட்டு கம்பளைண்ட் பன்றாங்க. இத நீங்க எப்படி பாக்குறீங்க?''

''மீ டூ''

பானு ஜிப்ரி சாய்ந்தமருது

## துக்கம்

ஒய்வு எடுக்க வந்த இரவு
ஓயாமல் வந்து கொண்டு இருக்கிறது
தாயின் நினைவு

கருப்பாய் கருவான கருவறை
இருளாக இருந்தது நினைவில்லை
துடிப்பாக இருந்தாய் மனம்
மகிழ்வாக இருந்தது

மகவு நிகழ்ந்தது உயிர் பிரிந்தது
மழலை குரல் கேட்டதும்
வலியெல்லாம் மறந்தது உயிரும்
உடலில் மீண்டது

உணர்வின்றி உடல் உயிரோடு கலந்து
உறவாட புது வரவொன்று
கிடைத்ததும் மகிழ்ச்சியில்
மனமாழ்ந்தது
கண்களில் ஆனந்த வெள்ளம் பாய்ந்து
அன்று தாய்மைக்கு

இன்று செய்க்கு தாயின் மறைவு
மனதை வாட்டுது

திணறுகையில் திரும்பும்
திசை எல்லாம்
திடமாக நின்றவள்
இறையருளால் தரணியில் தூய
அன்பின் உறவானவள்


திரைக்கு அப்பால் மறைத்ததால் ஒளி
ஒலியின்றி மகவு உன்னையெண்ணி
வாடுது



த. ரவீந்திரன்..

# நத்தையின் பயணத்தில் சிந்திடும் நீர்..

எதுவும் சொல்லாமல் எவ்வித
தொந்தரவும் செய்யாமல்
நலம் உண்டாகட்டுமென விலகுவதெல்லாம்
தியாகத்தில் சேர்வதில்லை
மாறாக அது தன்னைத்
தானே கொல்லாமல் கொல்லும்
தற்கொலைக்கு சமமானது
புரிதல் எந்பதெல்லாம் புலம்பெயரும்
நத்தையின் பயணத்தில் சிந்திடும்
நீர் போன்றது நிரந்தரமற்ற வாழ்வில்
நிரந்தரமான பிரிவின் துயரம்..



ஸ்ரீவாரிமஞ்சு, திண்டுக்கல்

# பூனை அழகி....

நித்தம் ஏமாறுகிறேன்
கள்ளவிழியில் நுழையும்
மாயை புரியவில்லை
நுழையும் பாதையை
ஆராய்ந்து ஆராய்ந்து
ஆகிப் போனேன்
சின்ன பொறியாளராய்....
பாதையெல்லாம் அடைத்தாய்யிற்று.....
நக்கலாய் ஒரு பார்வை பார்த்து ஓடியது வெளியே
ஒரு பெரிய பூனை...
நிம்மதி மூச்சில்
வெற்றி களிப்பில்
உறங்கினேன்....

தேனீர் அழைத்திட சமையலறையை
நோக்கி
நொந்துப் போனேன்
நொடியில்...

மீந்துப் போயிருந்த பாலை
சுத்தமாய் நக்கி சுவைத்து
வயிறு முட்ட
களைப்பில் தூங்கும்
தூளி குழந்தையென
அடுப்படி மூலையில்
குட்டி பூனையொன்று சுருண்டு கிடக்க....
விடியும் வரை உறக்கமின்றி தவித்தேன்...

விடிந்ததும்
குட்டியை தேடினேன்
சிலிண்டர் பின்புறம் மயிலென
உறங்கிக்கொண்டிருந்தது...

அதன் உறக்கம் களைக்காமல்
பூனை நடையில்
வாயிற்கதவை திறக்க
கதவடியில்
ஏக்கப்பார்வையில்
நேத்து ஓடிய அம்மா பூனை

அமைதியாய் கதவை திறந்து
வழி விட்டு
ஒதுங்கி நின்றேன்.....



# A. S சுந்தரராஜன் கவிதைகள்

என்னைப்போல்....
பிடித்த உணவில்
செய்யும் முறையில்
பிடித்த விஷயங்களில்
உதிக்கும் எண்ணங்களில்
செயலாற்றும் முறையில்
முடிவுக்கு எதிர்வினையாற்றுவதில்
உதவி செய்யும் விதத்தில்
பிறரை புரிந்து கொள்வதில்
சமூக விஷயங்களில் காட்டும் அக்கறையில்

என்னைப்போல்
மற்றவரை காண்கையில்

எல்லையில்லா சந்தோஷம்
மட்டுமல்ல...

தான் சரியான திசையில்
பயணிக்கிறோம் என்ற நம்பிக்கையும் கூட...

◈

**சந்தோஷ விதி மீறல்கள்..**


வார நாட்களில்
தவிர்க்க இயலா விதிகளை பின்பற்றிய பிறகு

மணி கணக்கு வைத்து கொள்ளா உறக்கம்

முதல் பக்கம் முதல்
இறுதி பக்கம் வரை கண்கள் வாசிக்கும்
செய்திதாள்

விரும்பும் நேரத்தில்
உணவு/தேநீர்

நேரக்கணக்கு இல்லா
தோழைகளோடு அரட்டை
விரும்பும் நேரம் வரை
தொலைக்காட்சி
சமூக ஊடகத்தில் முழ்குதல்
இந்த மீறல்கள்
ஒரு நாள் மட்டுமே
என்பதால் தான்
சந்தோஷம்...



மீ.யூசுப் ஜாகிர்

# சுயசாசனம்

கசிந்து கொண்டிருக்கும்
பௌர்ணமி நிலவொளியில்
கடந்துப்போன என் வாழ்வின் பக்கங்களை
வாசித்துக்கொண்டிருக்கிறேன்..,

எத்தனை ஏமாற்றங்கள்
நம்பி மனதை, ரகசியத்தை
பகிர்ந்து கொண்ட எல்லோரும்
என் நம்பிக்கையை
கொன்று தின்றிருக்கிறார்கள்..,

காதல் போர்வையில் மனதை
சேதப்படுத்தி சென்றாள் ஒருத்தி.,
திருமணம் வரை நிச்சயித்துவிட்டு
பாதியிலேயே நிச்சயமற்று போனாள்
இன்னொருத்தி..,

குடும்பமாய் பழகி வேரறுத்து போனது ஒரு
குடும்பம், என் குடும்பத்திலிருந்தே என்னை தீவாய்
மாற்றிச்சென்றது இன்னொரு குடும்பம்..,

நட்பின் போர்வையில் நலம் கெடுத்தார்கள் சிலர்..,
ஆறுதலாய் தலை சாய்ந்தவர்களெல்லாம்
ஆனந்தமாய் என் கண்ணீரை
ரசித்தார்கள்..,

ஆசையுமில்லை,
பேராசையுமில்லை.,
என்னை நானே சுமந்து கொண்டிருக்கிறேன்...,

எல்லோருடைய கண்களுக்கும்
என் கோபம் தெரிந்தது.,
எனது திமிர் தெரிந்தது.,
என் அலட்சியம் தெரிந்தது.,

என்னை இறுதியாய் சுமந்து
செல்லும் நால்வருக்கு மட்டும்
நிச்சயமாய் தெரியும்
என் மனதின் கனம்..!!!



மு.ஆறுமுகவிக்னேஷ்

## உந்தீபற

தலைக்கு குளித்த பின்
துவட்டும்போது

அன்றொருநாள்
அழுக்கு எடுக்கிறேன் என்று
அம்மா ஊதினாள்
உந்திச்சுழியை

அன்றுதான் அலர்ந்தது
என்றோ அறுத்த
தொப்புள் கொடியில்
ஒரு நாபிக்கமலம்

அம்மாவின் முகமோ
அன்றலர்ந்த
செந்தாமரையையும்
வென்றதம்மா!

ச. இராஜ்குமார்

## சொல்வெளி

சொல்வெளியில் தொலைந்து போனேன்
பிறிதொரு சொல்லில்
என்னை கண்டடைந்தேன்.
கண்டடையாத ரகசியமாய்
தொலைவதும் தேடுவதுமாய் சொற்களின்
நீட்சி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.
பொந்திடையில் குஞ்சுகளை பாதுகாக்கும்
தாய் பறவையாய் சொற்களை
பாதுகாக்கிறேன்..

# மனிதத்துவம்

## குந்தவை

கவிந்து வந்த அந்தகாரத்தினால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட கடல் கன்னங்கரேலாய் அச்சுறுத்துகின்றது.

மடிந்து விழும் அலைகளின் இரைச்சல் ஒலி பூதாகாரமாகப் பெருகி, செவிப்பறைகளில் வந்து மோதுகின்றது.

கூட நின்ற பெண்கள் எல்லாரும் தம் கணவன்மார் கொண்டு வந்தவற்றை விற்கப் போய்விட்டனர். தங்கம்மா மட்டும் தன்னந்தனியளாய் கரையில் காத்து நிற்கின்றாள்.

கால்களுக்குக் கீழ் மணலை அரிக்கும் கடலலைகள், கால்களையே பறித்து இழுத்து கடலிற்குள் கவிழச் செய்வது போன்ற தடுமாற்றம்.



‘குப்’ என வந்து முகத்தில் அடிக்கும் கடல் காற்றின் உக்கிரத்தில் ஏற்படும் மூச்சுத் திணறல்.

கரையில் இழுத்துப்போட்ட வள்ளங்கள், தூரத்தில் மணல் மேட்டில் மினுங்கிடும் விளக்கின் சிதறல்கள் இரண்டிலும் அந்த வட்டாரத்தினரின் வழமையான இயக்கம் தெரிகிறது.

கடலுக்குப் போனவர்கள் மீண்டு விட்டனர். ஆனால் இன்னும் அவள் கணவன் கந்தையன் மட்டும்....

திகில் அவளுள் மகத்தானதாய் பெருகி, விசுவரூபம் எடுக்கின்றது. ஏன், ஏன் என்ற கேள்வி, அவள் நெஞ்சில் வந்து வந்து மோதுகின்றதேயன்றி, அதற்காக பதிலை அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

வதைக்கப்படும் நெஞ்சகத்தின் வேக்காட்டிலே – கரையில் வந்து சிக்கிய அலை நுரைபோல் அவள் பரிதவிக்கின்றாள்.

‘இப்படியே நின்றால்? மற்றவர்களிடம் சொல்லி அவர்களைத் தேடி வர அனுப்பியாவது...’ மனத்தைத் துண்டமாக்கும் இந்த எண்ணம் எழுந்த பொழுது....

“தார் அது இருட்டுக்குள்ளை?” அருகே ஒரு குரல். நிலைத்துவிட்ட அவள் திரும்பிப் பார்க்கின்றாள். அருகே கனகலிங்கம். அவன், கந்தையனுக்கு வேண்டாதவன்தான். ‘பெரிய இடத்தின் ஆள்’ என கந்தையன் அடிக்கடி சொல்வானே! ஆனால் அதுவெல்லாம் பார்க்க இதுவா நேரம்?

“அண்ணே! அண்ணே! கடலுக்குப்போன ‘இதை’ இன்னம் காணேல்ல. நான் இப்ப என்ன செய்ய?”அவளின் தவிப்பும் தாபமும் ‘சட்’ என தடைப்பட..

இருந்தாற் போல், மின்சாரத்தின் நீண்ட ஒளிக்கற்றை இருளில் பெரும் கோடு கிழித்தாற்போல் பாய்ந்து வருகின்றது. அது உப்புமாலில் இருக்கும் ‘கஸ்டம்ஸ்’ காரரின் ‘சேர்ச்லைட்’.

அதன் ஒளியில் சற்றுத் தூரத்தில் படகை கரைக்கு இழுத்து விடும் மூவர். அவன் தனியாகத்தானே போனான்? ஆனால் படகு அவனுடையததேதான். கனகண்ணனை மறந்து அவள் துடிப்பே நடையாய் அதனருகே பாய்கிறாள்.

கரும் இருட்டில் கணவன் உருவம் அருகே வருவது தெரிகிறது. “ஏன் இவ்வளவு நேரம்?” அவளிள் சொற்கள் களிப்பினால் குலுங்குவதுபோல வெளி வருகின்றன.

“பிறகு சொல்லுறன் இந்தா மீன் கொண்டுபோ”, அவன் பின்னால் இரு கரிய நிழல் உருவங்கள்.

“தார் இது’

“இரண்டு இந்தியாக்காறர் நீ போட்டு வா எண்டுறன்.” கந்தையனின் குரல் அவளருகே கிசுகிசுக்கின்றது.

◈ ◈ ◈

தன் குடிசையின் வெளி முற்றத்தில் சுற்றி அடைக்கப்பட்ட கிடுகு வேலிக்குப் பின்னால் அந்த இருவரோடும் கந்தையன் படுத்திருக்கின்றான்.

கடல் பிரயாணத்தினாலும் அப்பொழுது பெற்ற கொடூரமான அனுபவங்களினாலும் களைத்துச் சோர்ந்திருந்த அவ்விருவரும் பாயில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவன் மட்டும் - உடல் களைத்துத்தான் இருக்கின்றது.

ஆனால் நெஞ்சம் கழன்று அந்த நினைவுப் பரப்பிலேயே மிதந்து வர துவக்குகின்றது. அதை மீட்க முடியாத மனநிலை.

நீருள் நீந்தி வரும் வெண் குமிழியாய், விழுந்து எழும் கடலிடையே இரு உயிர்களைக் காப்பாற்ற அவன் நடத்திய போராட்டம், வருகிறது,

கூடவே, வள்ளத்தைக் கரையில் இழுத்துச் சேர்க்கும் பொழுது உடம்பை வந்து தாக்கும் அதன் கனம்போல் நெஞ்சை வந்து தாக்கும் அந்த நிகழ்ச்சியின் கனம்.

அவன் இன்று வழக்கத்தை விட அதிக தூரத்திற்கே போயிருந்தான். மற்ற மீனவர்களும்ஒரு முறையும் போகாத இடம் அது.

மூழ்கி, எழுந்து தெரிந்த அந்த இரு தலைக்கறுப்புகளை சட் என அவன் கண்கள் கண்டு கொண்ட விதம்.

நிலைமையை உணரவே அவனுக்கு அரிய சில வினாடிகள் தேவைப்பட்டன.

வள்ளத்தை அவற்றின் அருகே செலுத்தியபொழுது, ஏக்கப் பரிதவிப்புடன், நிராசையும் ஆசைத்துடிப்பும் போட்டியிட, வள்ளத்தைத் தொட்ட, வெடவெடத்த வெளிறிய அந்த ஒரு முகம்.

இது எல்லாவற்றையும் விட, தனியாளாய் இருவரையும் வள்ளத்தில் ஏற்றி, வேண்டிய சிகிச்சை அளித்து ஆசுவாசப்படுத்தியபின், அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவன் விளங்கிக்கொண்ட அந்தப் பயங்கரச் செய்தி.

அதை நினைக்கும் பொழுது, உடலெங்கும் ஓடி விறைக்கின்றது.

ஏமாற்றும் தரகர்களின் சூழ்ச்சியினால், தாயகத்தைவிட்டு, அயல் நாட்டைப் பொன் கொழிக்கும் நாடாக எண்ணி ஓடி வரும் அவர்கள் கூறிய கதைகள்.....

மன அடித்தளத்தில் சிக்கியிருக்கும் ஆசைகளுக்குத் தூபம் போடப்பட்டு, அவைகள் சுவாலையாக்கப்படும் நிலையில், இருக்கும் உடமை, சொத்துக்களை விற்று, தலைக்கு நூறு, இருநூறு என தரகுகாரர்களுக்கு கூலி கொடுத்து, இருள் போர்வையில், இந்தியக் கரையை உதறிவிட்டு, படகு ஏறிய பத்துப்பேரையும் அந்தக் குரூரமான படகுக்காரன்...

முக்கால் வழியில், ஏதோ ஒரு ஒளியைக் கண்டு பயந்த படகுக்காரன் அவர்களை இறக்கிக் கரைக்கு நீந்திப்போகுமாறு கட்டளையிடுகின்றான். நீந்தத் தெரியாதென, இறங்க மறுக்கும் இவ்விருவரும் கடலில் பலவந்தமாகத் தள்ளப்படுகின்றனர். திணறித் திக்குமுக்காடியவாறு இவர்கள், படகைப் பிடித்தவாறு கெஞ்சுகின்றார்கள். பதிலாக, துடுப்பின் வீச்சு, பலமாக நீரைப் பிளந்து கொண்டு, இவர்கள் மேல் விழுகின்றது. இதனால் பிடி தளர்ந்து நையும் இவர்களிடமிருந்து தப்பி அவசரமாகத் திரும்பிச் செல்கின்றது படகு. கை களைத்து, உடல் ஓய்ந்து, சாவிற்கும், உயிருக்கும் இடையில் அவர்கள் தத்தளித்த வேளையில்தான் அவன் அவர்களைப் பார்க்கின்றான்.

நம்பியவர்களை நடுக்கடலில் தூக்கி எறிந்து, அவர்களின் உயிர் முனையிலே தம் சௌகர்யத்தைத் தேடிக் கொள்ளும்அந்தப் பணத்தாசை பிடித்த அரக்கர்களின் நினைவில், அதிரும் கடலாய் உள்ளம் நடுங்குகின்றது.

நேரம் ஊர்கின்றது.

நினைவோட்டத்தினால் அலைக்கழிக்கப்படும் உணர்வுகள், நெடுநேரம் நெஞ்சலி நின்று விறுவிறுக்கின்றன.

பின் சிறிது சிறிதாய், உடலின் அசதியினால், அவை மழுங்கி உறக்கத்தில் கரைந்து நழுவுகின்றன.

◈ ◈ ◈

அவனின் நித்திரை கலைக்கப்படுகின்றது. படபடப்புடன் மோட்டார் படகு ஒன்று நீரைக் கிழித்துச் செல்லும் ஓசை.

மோட்டார் படகு.... கஸ்டம்ஸ்காரர்கள்... ஊரில் சில பிரமுகர்கள்... தர்மலிங்கத்தார்.

நினைவுகள் தூக்கமயக்கத்தில் தொய்ந்து தொடர்பற்ற பஞ்சுப் பொதிகளாய் மிதக்கின்றன.

ஒரே பாணியில் அடுக்கு அடுக்காக முளைக்கும் பெரிய வீடுகள்... 'விர்' எனப் பறக்கும் படகுபோன்ற கார்கள்.

அன்றொருநாள், எங்கிருந்தோ, அந்த கடற்கரையில் வள்ளம் வள்ளமாக வந்து இறங்கிய சாக்குகள், அவற்றைத் தூக்கி றோட்டு அருகே நின்ற லொறியில் அடைக்க போட்டியிட்டு உதவிய அந்தப் பகுதி மக்களுக்கு நோட்டு நோட்டாகக் கிடைத்த காசு.

கந்தையன் புரண்டு படுக்கின்றான்.

அருகே அவர்கள்...

இதயத்தில் இருந்தாற்போல் ஒரு நெருடல்

ஒரு பெரிய மனிதரின் உதவியை எதிர்பார்த்து வந்ததாக அவர்கள் கூறினார்களே...

ஒரு நாள் தர்மலிங்கத்தார் தன்னைக் கூப்பிட்டனுப்பிப் பட்டும் படாமலுமாய் சொன்ன தன் 'வியாபார' ரகசியம்.

நினைக்கும் பொழுதே, கறை பிடித்த இரும்பை, உப்புத்தாளால் உரசுவது போல நெஞ்சில் ஒரே அரிச்சல்.

"இஞ்சைபார் கந்தையா! உனக்கு என்ரை விஷயம் தெரியும்தானை. எனக்கு நல்லா வள்ளம்விட தெரிஞ்ச ஆட்கள் தேவை. நீ இதுக்கு வந்து விடன். நல்லா சம்பாதிக்கலாம். நீயும் எத்தனை நாளைக்குத்தான் இந்த மீன் பிடிக்கிற தொழிலைச் செய்யப் போகிறாய்? அண்டு பிடிச்சு அண்டு சாப்பிடுறதை இனி விட்டு விடலாம்."

அவருக்கு கோபம் வராத முறையில், அதை ஏற்க மறுக்க அவன் காட்டிய வினயம்.

'சரி சரி நீ போ! மற்றவங்கள் எண்டா எங்கை என்னட்டை வரலாம் எண்டு இருக்கிறாங்கள். நீ என்னடாண்டா..."

சாதாரணமாகச் சொல்வதுபோல் இருந்தாலும், அதற்குள் உள்ளோடியிருந்த கோபம் அப்படியே தெரிந்தது.

அவரின் 'வியாபாரத்தில்' இதுவும் ஒரு ரகம்!

பளையில் இருக்கும் அவருக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலத்தில் பாடுபட உபயோகப்படுத்தப்படுபவர்கள் இந்த 'இவர்கள்'.

வேலை பெற்று கொடுத்ததற்காகப் பெருந்தொகையான முன் பணத்தை, அவர்களின் சம்பளத்திலிருந்து எடுத்துக் கொண்டபின்... சம்பளம் கொடுத்தே வேலை வாங்கப்பட வேண்டுமென்ற நிலை அடைந்ததும், அவர்கள் பொலீஸில் ஒப்படைக்கப்படுபவர்கள்.

எதைக் கண்டு இவர்கள் இங்கு ஓடி வருகின்றார்கள்? தரகர்களின் வஞ்சனைச் செயல்களுக்கும், துருவும் 'சேர்ச்லைட்' டின் கண்காணிப்பிற்கும் தப்பி, இக்கரையில் வந்து ஒதுங்கும் இவர்களுக்கு, இத்தகைய இன்னும் இதைவிட மோசமான,அடிமை நரக வாழ்வுதானே காத்திருக்கின்றது.

அவனுக்கே புரிபடாத தவிப்பு நிறைந்த ஆதங்கம், அவன் நெஞ்சை ஆக்கிரமித்துப் பிசைந்து கொண்டிருக்கின்றது.

அதன் வேகத்திலே, துடிக்கும் மீனைக் கையில் ஏந்தும் பொழுது படபடக்கும் விரல்போல் உள்ளம் படபடக்கின்றது.

ஏன் இந்தத் தவிப்பு அவனுக்கு மட்டும்? ஒரு மனிதனின் நிலை கண்டு மற்ற மனிதனிடம் பீறிடும் இரக்கத் துடிப்பா இது? அப்படியானால் இந்த மனிதத் துடிப்பு, கடலில் தள்ளி, துடுப்பால் அடித்த அந்தப் படகுக்காரனுக்கும், சம்பளமின்றி வேலை வாங்குவிக்கப் போகும் அந்தப் பிரமுகருக்கும் ஏன் ஏற்படாது இருக்கின்றது!

இந்த அலைப்பினிடையேயும் ஒரு தீர்மானம்.

'நாளைக்கு இவர்களைத் தர்மலிங்கத்தாரிடம் போக விடக்கூடாது. அந்த வாழ்க்கை இவர்களுக்கு வரவேண்டாம். போலீஸிலே ஒப்படைத்துத் திரும்ப அவர்களின் நாட்டிற்கே அனுப்புவதுதான் சரி'

◈ ◈ ◈

விடிகின்றது.

மன உளைச்சலில் சோர்வினால் அப்பொழுதுதான் லேசாகக் கண்ணயர்ந்திருந்த கந்தையன் விழிக்கின்றான்.

படலைக்கு வெளியே யாரோ கூப்பிடுகின்றார்கள்.

எழுந்து வெளியே வருகின்றான். அவன் முன்னால் சில போலீஸ்காரர்கள்.அப்பகுதிக் கிராமசேவகர், அவர்களோடு தர்மலிங்கத்தார்.

"சில கள்ளக் குடியேற்றக்காரர்களுக்கு நீ அடைக்கலம் குடுத்திருப்பதாய் கேள்விப்பட்டோம். உன்ரை வீட்டை சோதினை போடவேணும்." தொடர்ந்து படலைத் தள்ளிக் கொண்டு சப்பாத்துக் கால்கள் உள்ளே போகின்றன.

விறைத்தவனாய் நிலைத்துவிட்ட கந்தையன் தர்மலிங்கத்தாரைத் திரும்பிப் பார்க்கின்றான்.

'இவர் ஏன் இங்கு?' எண்ணப் புதிர் வலையாய் பின்னலிடுகிறது.

'கிராம சேவகர்' விளக்குகின்றார்.

"படகில் பத்துப் பேர் வந்ததாகத் தெரியுது. கரையில் காத்து நிண்டு நீந்தி வந்த எட்டுப் பேரை பிடிச்சுப் போட்டம். மற்ற ரெண்டு பேரும் உன்னிடம் இருப்பதாக இவர்தான் சொன்னார்..."

கந்தையன் தான் கரைக்கு வந்த பொழுது, மனைவியோடு கூட நின்ற கனகலிங்கத்தை நினைத்துக் கொள்கின்றாள். சிக்கல் தெளிவாகின்றது.

அவன் மூலம் செய்தி அறிந்த தர்மலிங்கத்தார், அதனால் ஆபத்து வருமென அஞ்சி தானே போலீஸிற்குத் தகவல் கொடுத்து, மற்ற எட்டுப்பேரையும் பிடிக்க உதவியதோடு, போலீஸை இங்கும் அழைத்து வந்திருக்கின்றார்.

இதனால், அன்று வலிய அழைத்த பொழுது மறுத்த கந்தையனை பழி வாங்கிய திருப்தியும் கூட.

போலீஸ்காரர்கள் திரும்பி வருகின்றார்கள். அவர்களின் நடுவே அந்த இருவரும். பின்னால் ஒப்பாரி வைத்து அரற்றும் அவன் மனைவி.

"சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு உதவி, பாதுகாப்பு அளித்த குற்றத்திற்காக உன்னைக் கைது செய்யுறோம்."

கந்தையன் அதிர்ந்து நிற்கின்றான். அவனிலா குற்றச் சுமை?

எல்லாவற்றுக்கும் காரண கார்த்தாவாக இருந்த ஒருவர் நல்ல வேஷம் போடுகின்றார்.

வெறும் மனித நியதியின் உந்தலினால், கடலில் தத்தளித்த இருவரைக் காப்பாற்றி, ஒரு இரவு அவர்களுக்குத் தன் குடிசையில் ஒய்வளித்த குற்றத்திற்காக ... அவனுக்கு?

எண்ணப் பொருமலில் கொதி நிலை அடைந்த பாலாய் அவன் குமுறும் வேளையில்...

ஏமாற்றுக்காரர்களை நம்பிய குற்றத்திற்காகக் 'கள்ளத்தோணி' என இழிவு படுத்தப்படும் அந்தப் பரிதாபகரமானவர்கள் அவன் கண்ணில் படுகின்றனர்.

நேற்று, மூச்சுத்திணறி நீர் குடித்துத் துவண்ட அவர்களுக்குத் தான் உயிரளித்த காட்சி பளிச்சிடுகின்றது.

அவர்களை, அவன் நிராதரவான அண்டை நாட்டார் என்பதற்காகவோ, தம்மினத்தவர் என்பதற்காகவோ காப்பாற்றவில்லை. வாழத் துடிக்கும் இரு மனித உயிர்கள் என்ற மனிதாபிமானத்திற்காகத்தான் காப்பாற்றினான்.

மனித இயல்பு அற்றுப் பேயாட்டம் போடும் அரக்கர் மத்தியில் அவன் தன் மனிதத் தன்மையைக் காட்டியிருக்கின்றான்.

அவன் இரு ஜீவன்களுக்கு 'உதவி' இருக்கின்றான். உயிர் அளித்திருக்கின்றான்.

இந்நினைவு. அகப்பையாகி அவன் கொதிப்பை ஆற்றுகின்றது.

மனைவியை ஆத்திரத்துடன் பார்த்துவிட்டு போலீஸ் வானில் ஏறிக்கொள்ளுகின்றான்.

வாகனம், வல்வெட்டித்துறைப் போலீஸ் நிலையத்தை நோக்கி விரைகின்றது. கந்தையன், பெரும் ஆட்டம் கண்டு ஓய்ந்த நெஞ்சினனாகின்றான்.

*நன்றி: காலத்தின் குரல்கள், 1964. பல்கலை வெளியீடு.*



சிறுகதை

# குடியும் குடித்தனமும்

## முனைவர் பீ. பெரியசாமி

சரசு வேகமாக தயாராகிக் கொண்டிருந்தாள். பெருமாளின் ஏக வசனங்களை கண்டுகொள்ள அவள் சற்றும் தயாராக இல்லை.

அடியே சரசு நாம் பாட்டுக்கு இங்க கத்திக்கிட்டு இருக்கேன் நீ கொஞ்சமும் சட்ட செய்வதாக தெரியலியே.

நல்லா பேசுற மனுஷன் கிட்ட பேசலாம். கத்துகிட்டு இருக்குற மனுஷன் கிட்ட என்னத்த சொல்ல.

ஓ...! உனக்கு அவ்வளவு ஆயிடுச்சோ...

ஆமா ...! எத்தனை நாளைக்கு என்னையும் நான் கட்டுப்படுத்தி வச்சுக்கிட்டு உன்னோட வாழறது.

அதுக்கு.... உங்க அப்பா வூட்டுக்கு போறியோ?

அப்பன் வீட்டுக்கு எல்லாம் போறது அந்த காலம். எனக்கென்ன படிப்பில்லையா? தனியா வாழ்ந்து காட்ட தெம்பு இல்லையா? நான் எதுக்கு என் அப்பன் வீட்டுக்கு போகணும்?

அப்போ எங்க போக போற? எதுக்கு துணிமணிகளை இவ்வளவு வேகமா எடுத்து வச்சிக்கிட்டு இருக்க?

நான் எதுனா ஹாஸ்டலுக்கு போய் தங்கி ஏதாவது ஒரு வேலையை பார்த்து பொழைக்கப் போறேன். இதுநாள் வர உன்னோட நான் பட்டதெல்லாம் போதும்.

ம்.... போ.... போ... தனியா போயி பொழைப்பு நடத்திக்கிற அளவு உனக்கு தைரியம் வந்துடுச்சு....

வேற நீ செய்வதற்கு எல்லாம் காலமெல்லாம் அடங்கி போயிட்டே இருப்பேன்னு நினைச்சு புட்டியோ...!

அப்படி என்னடி ஆத்தா ஊர் உலகத்துல இல்லாதத நான் உனக்கு செஞ்சு புட்டேன்...

நீ என்னத்த செஞ்ச. எதையுமே தான் செய்யலையே... எதை கேட்டாலும் எரிஞ்சு எரிஞ்சு விழுற... பொழுது போனா போதும் அந்த சாக்கடையை வாயில ஊத்திக்கிட்டு வந்து போற வரவங்க கிட்ட வம்ப இழுக்குற ஊரெல்லாம் வேடிக்கை பாக்குது. எனக்கு மானமே போகுது.

ஏன்டி ஊர்ல எவனுமே குடிக்கறது இல்லையா என்ன? ஆம்பள நான் அப்படி இப்படித்தான் இருப்பேன். அதெல்லாம் நீ தான் அனுசரிச்சு போகனும். அவ தான் பொம்பள... இது கூட தெரியாத நீ எல்லாம் என்னடி பொம்பள...?

ஆமாய்யா ஆம்பளனா குடிக்கனும், கூத்தியா வச்சுக்கனும், ஊர் மேயனும், வம்பு இழுக்கனும், பொம்பளைன்னா நீங்க இழுத்த இழுப்புக்கு எல்லாம் வரனும், இது நல்லா இருக்குதுய்யா உங்க நியாயம். அப்படிப்பட்ட பொம்பள நான் இல்ல நான் உன்னை திருத்த உன் கூட வாழ பெரும்பாடு பட்டுட்டேன். நீயும் திருந்துறா போல தோணல என்ன விட்டுடு நான் போறேன்.

நீ போயிட்டா இந்த ஊர்ல என்னை யாருடி மதிப்பா? பொண்டாட்டி வச்சி பிழைக்க வக்கில்லாதவன்னு பேசமாட்டானுங்களா..?

பேசட்டுமே நல்லா பேசட்டும். அப்படியாவது உனக்கு மான ரோஷம் வந்து இந்த குடி எல்லாம் விட்டுவிட்டு ஒழுங்கா திருந்து வாழறையானு பாப்போம்.

நான் என்னடி செய்ய டாஸ்மார்க் கடை பக்கம் போனா... தன்னால கால் கடைக்கு கூட்டிட்டு போடுது.

அப்போ அந்த கடை இருக்கிற தெருவுல போகாத...

நீ வேற விவரம் தெரியாதவளா இருக்க ஊர்ல எந்த தெருவிலடி கடையில்லாமல் இருக்கு. மளிகை கடை இல்லாத தெரு கூட இருக்கும். டாஸ்மார்க் இல்லாத இடமே இல்லடி.

இதெல்லாம் பொழப்புக்கு ஆகாது நீ திருந்துற மனுஷனா எனக்கு தோனல நான் கிளம்புறேன்.

கல்யாணம் ஆகி நாலு வருஷம் ஆச்சு. நமக்குன்னு சொல்லிக்க ஒரு புள்ள குட்டி தான் இருக்கா. இப்படியே இருந்தா எல்லாம் ஒரு மாதிரி பேசுறாங்க. நீ வேற தனியா போட்டா பெருமாளுக்கு ஏதோ கோளாறு அதான் அவன் பொண்டாட்டி அவனை விட்டுட்டு போயிடானு பேசி அசிங்கப் படுத்துவாங்கடி சரசு. எதுவானாலும் பேசி தீர்த்துக்கலாம். என்ன விட்டு போயிடாதடி.

ஓ... இதெல்லாம் தொரைக்கு இப்பதான் நினைவுக்கு வருதோ... இத்தனை நாள் என்னை கோமாவுலயா இருந்த..? நல்லா வாய்பூரா சாராய நாத்தம் அடிச்சா உன் கூட யார் படுப்பா..? புள்ளையை பெத்துப்பா ..? கண்ணு மண்ணு தெரியாம குடிச்சுபுட்டு விழுந்து கிடந்தா எப்படி புள்ள பொறக்கும்..? நான்தான் தனியா புள்ள பெத்துக்கணும் எதுனா ஆஸ்பத்திரிக்கு கீஸ்பத்திரிக்கு போய்... நீ அதுக்கு ஒன்னும் சரிப்பட்டு வர மாதிரி தெரியல எனக்கு.


என்னடி இப்படி பேசுற..?

வேற எப்படி பேச சொல்லுற..? ஒரு நாளைக்காவது நிதானமா வீட்டுக்கு வந்து இருக்கியா நீ?

நீ என்ன மன்னிச்சிடு சரசு. இந்த குடி இப்படியெல்லாம் நம்ம குடியை கெடுக்கும்னு தெரியாமலேயே குடிச்சுட்டு இருந்துட்டேன். இனி உன் மேல சத்தியமா குடிக்க மாட்டேன். என்ன நம்பு... இந்த ஒரு முறை நீ போறத நிறுத்திப்புட்டு உள்ள போயி வேலைய பாரு.....

இந்த பாருய்யா... இந்த ஒரு முறை தான் பார்ப்பேன். இதுக்கு மேலயும் குடிச்சிட்டு வந்தனா சொல்லாம கொள்ளாம போயிட்டே இருப்பேன் தெரிஞ்சுக்க.

சரி சரசு நான் இனி குடிக்கவே மாட்டேன்.....




# `மாமழை

**மணிமாலா மதியழகன்**

செருப்பில் கால்களை நுழைத்தபோது ஓர் அன்னியமான உணர்வு தோன்றியது. 'ரெண்டு மாசத்துல என்னை மறந்துட்டியா?' என்பதைப்போலச் செருப்பு பார்த்தது. கண்களை மூடி ஒரு வினாடி அசையாமலிருந்தேன். அடுத்த கணம், முனையில் நான்கு கால்களுள்ள கைத்தடியைக் கைகள் இறுக்கமாய்ப் பற்றின. பதினைந்தாவது தளத்திலிருந்த மின்தூக்கி கீழே இறங்கியது. குறைந்து வரும் எண்களை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்ததில் உள்ளுக்குள் சிறு ஆர்வம் கூடியது.

மின்தூக்கியினுள் அங்குமிங்கும் தென்பட்ட சிமென்ட் பூச்சுகள், யார் வீட்டிலோ புதுப்பிப்புப் பணி நடப்பதைக் காட்டின. 'ம்... எப்படியாவது மனசை சமாதானப்படுத்திக்க வேண்டியதுதான்...' ஏழாவது தளத்தில் மின்தூக்கி திறக்க, சிந்தனை தடைபட்டது. காரிடாரில் காற்பந்தை எத்திக்கொண்டிருந்த சிறுவன், என்னைப் பார்த்தவுடன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

'நாளும் பொழுதும் விடாம மழை தூறிட்டேயிருக்கு. எங்க போய் விளையாடுவான்?' எண்ணம் தலைதூக்கியது. மூக்குக் கண்ணாடியை அழுத்திவிட்டவாறு என்னைப் பார்த்தான். குறுநகையுடன் பார்த்தேன். அவனது கவனமும் குறைந்து வருகிற எண்களின் மீது விழுந்தது. 'ம்... எல்லாத்தையும் எண்ணி எண்ணியே...' மின்தூக்கியின் கதவு திறந்தவுடன் சில்லென்ற காற்று மோதியது. பார்வையிலிருந்து சிறுவன் எப்போது மறைந்தான் என்று தெரியவில்லை.

ஓர் இளம் தம்பதியர் கைபேசியைப் பார்த்தபடி அவ்வழியே சென்றனர். 'அவரும் நானுமாய் வீட்டைவிட்டு வெளியே போய் எவ்வளவு நாட்களாகிவிட்டன? ம்... எதற்காகப் போனோம்? கேள்விகளுக்குப் பதில் உடனே நினைவுக்கு வரவில்லை. அவரது வலது கையிலிருந்த குடையும் எனது இடது கையிலிருந்த கைத்தடியும் பூமியை ஊன்றிச் செல்ல இருவரும் கை கோர்த்துச் சென்று ஆறாண்டுகள் ஆகிவிட்டனவா?' வலியைப் பரவவிட விரும்பவில்லை.

'எங்கு போவது?' பார்வையைச் சுழற்றினேன். காற்றுடன் சேர்ந்து பறந்த தூறல் கீழ்த்தளத்தை முழுதுமே நனைத்திருந்தது. வெயில் தலைகாட்டி மூன்று வாரங்களுக்கு மேலாகியதால் பூமி குளிர்ந்து கிடந்தது. 'சிங்கப்பூர் மண்ண மிதிச்ச இந்த அறுபத்திரண்டு ஆண்டுல இப்படி இருந்ததேயில்ல' கால்களைக் கவனமாக ஊன்றினேன். 'ம்... அவர் படுக்கையில விழுந்த நாள் முதலா எச்சரிக்கையா நடந்து நடந்து நடையின் வேகமும் பாதியாப் போச்சி...' மனத்தை மேலும் தளர விடக்கூடாதென அடியை எட்டி வைத்தேன்.

"ஊருக்குப் போயிட்டீங்களோன்னு நினைச்சேன்..." குரல் கேட்டது. பக்கத்துப் புளோக்கிலுள்ள பெண்மணி கையில் பையுடன் நின்றிருந்தார்.

'போயிருக்கணும்!' கண்கள் கட்டுப்பாட்டை இழக்கத் தயாராகின.

"ரொம்ப நாளா காணலையா அதான்..."

"இல்ல, கொஞ்சம் உடம்புக்கு முடியல."

"கோவிட்டா?"

பேச்சைத் தொடர விரும்பாது, "ஆமாம்" என்றேன்.

"ம்... வயசாயிட்டா வர்ற பிரச்சினைய சமாளிக்கவே பெரும்பாடாப் போகுது. இது வேற புதுசா சேந்துகிட்டு... இப்பப் பரவால்லையா?"

"ம்... சரியாகிடுச்சி."

"நல்லா சத்துள்ள ஆகாரமா சாப்பிடணும்னு சொல்றாங்க. நீங்க கவுச்சிய தொடாதவங்க வேற... பருப்பு வகைங்கள நெறையா எடுத்துக்கணும். ஒடம்ப பாத்துக்குங்க."

பொய் சொல்லிவிட்ட குற்றவுணர்ச்சி உள்ளுக்குள் படர்ந்தது. "சரி... எங்கேயோ அவசரமா போயிட்டு இருக்கீங்கபோல...?"

"டின்னு மீனு முடிஞ்சிட்டு. அதான் உங்க புளோக்குலவுள்ள சீனங் கடையில வாங்கிட்டுப் போய்க்கிட்டிருக்கேன். நீங்க...?"

'என்னவென்று சொல்ல...?'

"கொட்டுற மழையில காலாற நடக்கக்கூடப் போவ முடியாதேன்னு கேட்டேன்."

“சும்மா அப்படியே புளோக்குக்கு உள்ளயே நடந்துட்டு வரலாம்னுதான்...”

“ஆமாம்... மழையால ஒரு மாசமா வீட்டுக்குள்ளவே அடைஞ்சி கிடக்கல்ல வேண்டியிருக்கு? வேல முடிஞ்சி மவ வந்துடும். வர்றதுக்குள்ள ஆக்கி வைக்கணும். இல்லாட்டிப் போனா நானும் வருவேன்.”

மெல்லிய சிரிப்புடன் நன்றி கூறிவிட்டு நகர்ந்தேன். வெள்ளந்தியான மனுசி. மகளது வாழ்க்கை சரியில்லாதக் குறையைக் கொட்டித் தீர்ப்பார். மற்றவர்களிடம் அக்கறை காட்டுவதிலும் குறை வைக்கமாட்டார். “நான் போட்டிருக்க மாதிரியான சட்டை போட்டுக்கிட்டா சின்னாங்கா இருக்குமுல்ல? ஒரு நாளு கெழமன்னா சேலை கட்டலாம்” என்பார். “இதில் ஒரு சிரமமும் இல்ல” முறுவலுடன் பதிலளிப்பேன்.

கல்யாணம் முடிந்து இங்கே வந்த புதிதில், முட்டி வரைக்குமுள்ள சட்டையை கணவர் வாங்கி வந்தார். சேலையைத் தவிர எதுவும் வேண்டாமென்றதில் அவருக்கு வருத்தம்தான்.

கால்கள் இலக்கின்றி இரண்டு புளோக்குகளைக் கடந்திருந்தன. வீட்டிலிருந்து கிளம்பும்போது, சக்கர நாற்காலியிலிருந்த கணவர் புருவத்தை உயர்த்தினார். “சும்மா வெளியே போயிட்டு வர்றேன்” என்றேன்.

“ஏதாவது வேணும்னா சுசியை அனுப்ப வேண்டியதுதான சீதா?”

‘எதுவும் வேணாம்னு எப்படிச் சொல்வது?’

“என்ன வேணும்னு சொல்லுங்க மேம்? நான் கடைக்குப் போயிட்டு வர்றேன்” சுசி ‘மலாயில்’ கேட்டாள். இந்தோனேசியாவிலிருந்து வந்த சூஜி, கணவருக்கு தன் மொழியின் மீதிருந்த பிடிமானத்தால் சுசியாகிவிட்டாள்.

“சும்மாதான் போறேன். கவனமா பாத்துக்க” அம்மொழியிலேயே பதிலளித்தேன்.

“சீதா... போனையாவது எடுத்துக்கிட்டுப் போம்மா” என்ற கணவரிடம் இடமும் வலமுமாகத் தலையசைத்துவிட்டு வெளியாகியிருந்தேன்.

‘வீட்டு போன்லயே பேசிக்கிறோம். கையில வேற எதுக்குப்பா போனுன்னு கேட்டு ரொம்ப நாளா மகனிடம் மறுப்பு தெரிவித்திருந்தோம். அப்பாவைக் காரணம் காட்டி, இனிக் கண்டிப்பா வேணும் என்ற பிறகு சொல்வதற்கு ஒன்றுமில்லை. மகன், மருமகள், பேரப்பிள்ளையெனப் பாத்துக்கிட்டே பேசுறதுக்கு நல்லாதான் இருக்கு. ஆனா கேக்கக்கூடாத சேதிகளைக் கேட்டதும் அந்தப் போனாலதான்னு சொன்னா, கேக்குறவங்க சிரிப்பாங்க. என்ன செய்ய...?’

தொடராய் இணைந்துள்ள ஆறு புளோக்குகளுக்கு கீழே ஒரு சுற்றுச் சுற்றி முடித்தாகிவிட்டது. ‘தூறலும் ஓய்வெடுக்கப் போயிருக்கோ?’ உள்ளடங்கியிருந்த இருக்கையில் அமர்ந்தேன். அங்குமிங்குமாகத் தலையைத் திருப்பிப் பார்த்தவாறு சாம்பல் நிறப் பூனை ஒன்று குரல் கொடுத்துக்கொண்டே நான் இருந்த பக்கமாக வந்தது. என்ன நினைத்ததோ என் கால்களுக்கு அருகிலேயே சுருண்டு படுத்துக்கொண்டது.

‘பசியா இருக்குமோ?’ என்ற எண்ணத்தை ‘சிங்கப்பூரில் பூனையைப் பசியோடிருக்க விட்டுடுவாங்களா என்ன?’ என்ற கேள்வி மடக்கியது. ‘பூனைங்கள இப்படிக் கொஞ்சுறாங்க!’ இங்கு வந்த புதிதில் ஆச்சரியப்பட்டதும் நினைவுக்கு வர, பாவாடை தாவணியிலிருந்து சேலைக்கு மாறிய நினைவுகளில் அமிழ்ந்தேன். சிங்கப்பூர் மாப்பிள்ளை என்ற பேச்சைக் கேட்டவுடனே அம்மாவிடம் அடம்பிடித்து அழ, “அப்பா சொல்றேம்மா!” எனும் சொற்கள் வாயடைக்க வைத்தன.

“உன்னோட போட்டோவ பாத்தவுடனே இந்தப் பொண்ணைத்தான் முடிக்கணும்னு பையன் ஒத்தைக் கால்ல நிக்குறானாம்” அம்மா சிரித்துக்கொண்டே மாப்பிள்ளையின் புகைப்படத்தை நீட்டினார். கல்யாணம் முடியும் மட்டும் அதைப் பார்க்கவேயில்லையே!

“காலையிலிருந்து நின்னுக்கிட்டேயிருக்கே. கால் வலிக்குதா?” முதன்முதலில் கேட்ட கணவரது கேள்வி மனத்தைக் கரைக்கத் தொடங்கியது. “என்னல்லாம் பிடிக்கும்னு சொல்லு, அதுக்குத் தகுந்த மாதிரி என்னை மாத்திக்கிறேன்” அவர் சொன்னபோது, ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை வேண்டாம்’ என உள்ளுக்குள் கொதித்துக்கொண்டிருந்தது ஆவியானது.

“நாம்பாட்டுக்கு மணிக்கணக்கா பேசிக்கிட்டிருக்கேன், வாயே திறக்கமாட்டியா?” என்று கேட்டதும் நான் லேசாகத் தலையை உயர்த்திப் பார்த்ததும் நேற்றைப்போலிருக்கிறது. “உங்களுக்கு என்ன பிடிக்கும்?” கேட்டு முடிப்பதற்குள் நடுக்கம் பரவ, வியர்த்துக்கொட்டியது!

“அசைவ உணவு ரொம்ப பிடிக்கும்” அவர் சொல்ல ஆடிப் போய்ச் சட்டென தலை உயர்த்த “ஏன்... உனக்குப் பிடிக்காதா?” என்றார். அதன் பக்கம் பார்வையே செலுத்தாதவள் என்பதைத் திணறலுடன் சொல்ல, “அதனாலென்ன? இனி நானும் அப்படியே இருந்துக்கிறேன்” மிகச் சாதாரணமாக சொல்லிவிட்டார். அடுத்த நாளே தம்பியிடம், ‘அசைவ சமையல் செய்வது எப்படி?’ என்கிற புத்தகத்தை வாங்கி வரச் சொன்னதைக் குடும்பமே பார்த்துச் சிரித்தது.

“நீ கதறுன கதறல்ல வங்கக் கடலே பெருக்கெடுத்ததே!” நாகப்பட்டினத்தில் கப்பலேற வந்தபோது கலங்கியதை கணவர் கிண்டலாகச் சொல்வார்! வீட்டைவிட்டு ஒருநாள்கூட வெளியே சென்று தங்கியறியாதவள் அம்மா, அப்பா, இரு

தம்பிகள், தங்கை, மற்ற சொந்த பந்தங்களைப் பிரிந்து அதுவும் கடல்தாண்டி வருவதென்றால் சும்மாவா?

சில நாட்களுக்குப் பிறகு வாந்தி, மயக்கம் மட்டுப்பட்டபோதும் சோறு, தண்ணி உள்ளே இறங்குவேனா என்றாக, சீக்காளியைப்போல சிங்கப்பூருக்கு வந்து இறங்கியது பெரிய கதை. அம்மா, அப்பாவிற்கு கடிதம் எழுதுவதன் வழி சுமை நாளடைவில் குறையத் தொடங்கியது.

மாமியாரின் உதவியால், சில மாதங்களில் அசைவ உணவு வகைகள் அத்துப்படியாயின. "இவ்ளோ ருசியா சமைச்சிட்டு அதைச் சாப்பிடமாட்டேங்கிறியே சீதா?" ஆதங்கத்துடன் கேட்கும் கணவருக்கு புன்னகையையே பதிலாக்குவேன்.

அப்பாவின் நம்பிக்கையை கணவர் பொய்யாக்கி விடவில்லை என்பதில் மனத்தில் என்றுமே தனிக் கர்வம்தான். கொஞ்ச நேரம் பார்வையில் இல்லாவிட்டால்கூட "சீதா... என்னம்மா செய்றே?" இன்றும் குரல் கொடுத்துவிடுவார்.

உடன் பிறந்தோருடைய கல்யாணத்துக்கென இந்தியாவுக்கு கிளம்பிப் போனது மறக்க முடியாதவை. அந்தக் கல்யாண போட்டோக்களைப் பார்த்துப் பார்த்தே அவை மங்கினவோ என்னவோ?

அப்பாவுக்கு உடம்பு சரியில்லையெனத் தந்தி வந்தபோது ஐந்து வயது மகனை அழைத்துக்கொண்டு மூவருமாகக் கிளம்பியதை மறக்க முடியுமா? பதற்றம், கவலை எல்லாம் சேர்ந்துகொண்டதில் முதல் முறை விமானப் பயணம் என்கிற எண்ணம் துளிக்கூட ஏற்படவில்லையே!

ஊருக்குப் போய் இறங்கியபோது எல்லாமே முடிந்திருந்தது. அம்மாவுடன் கொஞ்சநாள் தங்கியிருக்க வேண்டும் எனத் தயங்கிக்கொண்டே கணவரிடம் கேட்டதும், "நானே சொல்லணும்னு இருந்தேன் சீதா. எவ்வளவு நாள் வேணுமானாலும் தங்கியிருந்து வா" என்றது நினைத்துக்கூடப் பார்க்காதது.

"சீதா... அம்மாவுக்கு நீதான ஆறுதல் சொல்லணும். நீயே இப்படியிருந்தா என்னாவது?" கணவர் சிங்கப்பூருக்கு கிளம்பும்போது கேட்டார்.

அவரது கண்டிப்பானச் சொற்களைப் பற்றிக்கொண்டேன். ஆனாலும் என்ன செய்ய? அப்பாவைத் தொடர்ந்து சில மாதங்களில் அம்மாவும் போனது சொல்ல முடியாத் துயரம்தான். அம்மாவின் இறுதி நாட்களில் உடன் தங்கியிருந்ததுதான் பெரிய ஆறுதல்.

அம்மாவின் முப்பதாம் பூசையை முடித்துவிட்டு சிங்கைக்கு வந்தோம். அதன் பின் நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்தியாவுக்குப் போகும் சூழல் ஏற்படவேயில்லை.

தேசிய சேவையிலிருந்த மகன் மேற்படிப்புக்காக ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல வேண்டும் என்றபோது, 'இங்கேயில்லாத படிப்பா என இவரும் அழுத்தம் கொடுத்துச் சொல்லியிருக்கலாமே' என முதன்முறையாய் கணவர் மேல் கொஞ்சம் வருத்தம் உண்டானது. "பிள்ளைங்களோட விருப்பத்துக்கு மதிப்பு கொடுக்கணும் சீதா" என வாயைக் கட்டிப் போட்டுவிட்டார். சில மாதங்களில் படித்து முடித்து மகன் வரப் போகிறான் எனக் காத்திருந்தவேளையில் மனத்துக்கு பிடித்தவளைப்பற்றிக் கூறினான். "குடும்பத்தோடு செலவழிக்க இங்க நிறைய நேரம் கிடைக்குதும்மா" என்ற மகனது பேச்சில் கணவர் மீதிருந்த சிறு மனத்தாங்கலும் மறைந்தே போனது.

"பொண்ணுக்குக் கல்யாணம் பேசியிருக்கேன் அக்கா, மாமாவால எப்ப வர முடியுமோ அப்ப கல்யாணத்தை வச்சுக்கலாம்னு இருக்கோம்" பெரிய தம்பி கடிதம் எழுதியிருந்தான். கணவர் ஒரு மாதம் விடுப்பு எடுத்துக்கொண்டார். வெகுநாள் கழித்து உடன்பிறந்தோரைப் பார்க்கும் ஆவலில் இருப்புக்கொள்ளவில்லை.

அளவிலா கொண்டாட்டத்தில் கல்யாண வீடு இருக்க, காலனுக்கு என்ன அவசரமோ? வாகன விபத்தில் தம்பியைப் பறித்தான். "ஒரே பொண்ணு கல்யாணத்தை நீங்கதான் நடத்தணும் அக்கா" என என்ன நினைத்து எழுதினானோ? கல்யாணத்தை நடத்திவிட்டு வந்த நினைவுகள் கண்களை நனைத்தன.

காலடியில் சுருண்டிருந்த பூனை 'என்ன?' என்பதைப்போல லேசாகத் தலையைத் தூக்கிப் பார்த்தது. கொஞ்ச நேரம் விட்டிருந்த மழை மீண்டும் தூறத் தொடங்கியது.

காலியாயிருக்கும் தள்ளுவண்டியை அம்மா உருட்டிக்கொண்டு வர, அப்பாவின் கையைப் பிடித்துக்கொண்டு குழந்தை ஒன்று கால்களை அங்கும் இங்கும் வைத்து தளிர்நடையில் வந்துகொண்டிருந்தது. "ஆன்ட்டி" என்று சொல்லிச் சிரித்தது. புன்னகையுடன் நான் கையசைக்க, பதிலுக்குக் கையசைத்தது.

இரண்டடி முன்னால் எட்டி வைத்த குழந்தை மறுபடி திரும்பி என்னை நோக்கி வந்தது. "மியா... மியா..." என்று அழைத்துக்கொண்டே வந்த குழந்தை, பூனையின் அருகில் அமர்ந்தவாறு அதன் தலையைத் தன் குட்டிக் கைகளால் தடவ, என் உதடுகளில் புன்னகை அரும்பியது. பெற்றோரும் குழந்தையைப் பார்த்து ரசித்தவாறு நின்றிருந்தனர். சில நிமிடங்களுக்குப் பிறகு குழந்தை "பை... பை... மியா..." எனச் சொல்லிவிட்டு அப்பா, அம்மாவின் கைகளுக்குள் தன் கைகளைக் கோர்த்துக்கொண்டது. மறக்காமல் "ஆன்ட்டி பை.. பை..." எனச் சொல்லிவிட்டுப் போனது.

படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரி எனப் பேரெடுத்த பேத்தியின் நினைவு வந்தது. மூன்றாண்டுகளுக்கு முன் குடும்பத்துடன் வந்த மகன் "எல்லாரும் இந்தியாவுக்குப்

போயிட்டு வரலாமா?'' எனக் கேட்டான். பள்ளிக்கூடம் படிக்கும் காலத்திலிருந்தே இந்தியாவுக்குப் போகணும் என்றால் முகத்தைச் சுளிப்பவன், இப்படியொரு கேள்வியைக் கேட்டால் ஆச்சரியப்படாமல் என்ன செய்ய முடியும்?

''முன்னல்லாம் சொந்தக்காரங்களிடம் அவங்களைப்போலச் சரளமாப் பேச முடியலையேன்னு தோணும். இப்ப அப்படியில்லையேம்மா'' என்றான்.

''மூணு மாசத்துக்கு ஒருவாட்டி, இங்க இருக்குற ஆசுபத்திரிக்கிப் போயிட்டு வர்றதுக்கே பெரும்பாடு பட வேண்டியிருக்கு. இதில் இந்தியாவுக்கா?''

''எந்தச் சிரமமும் இல்லாமப் பாத்துக்கிறது எங்களோட வேலை. ரெண்டு பேரும் சரின்னு மட்டும் சொல்லுங்க.''

'எப்படிச் சொல்ல முடியும்?' பலநாள் கேட்டும் பிடிகொடுக்காமல்தான் இருந்தோம்.

''அப்பா... நம்மளோட சொந்த ஊருக்குப் போய்ட்டுத் திரும்புறதுன்னாதான் சிரமம். சென்னையில் இறங்கி, சொந்தக்காரங்களை எல்லாம் அங்கேயே அழைச்சு பாத்துட்டு வந்துடலாம்'' என்றான்.

அந்த யோசனை எங்களுக்குப் பிடித்திருந்தது. தம்பி, தங்கையுடன் பேசிக் களித்த அந்தப் பொன்னான ஐந்து நாட்களையும் மறக்கவியலாதே!

''சென்னையில் இருக்கும்போது உன் முகத்துல தனிக் களை தெரிஞ்சது சீதா'' கணவர் சொல்வதைக் கேட்கையில் உள்ளுக்குள் பூரிப்பாய் இருக்கும்.

திடீரென நெஞ்சுவலி வந்து சின்ன தம்பி இவ்வுலகைவிட்டுப் பிரிந்து ஒரு வருசம்கூட ஆகாத நிலையில் தங்கையைப் புற்றுநோய்க் கொண்டு சென்றது. 'அடுத்தடுத்து இப்படிப்பட்ட சோதனைங்க வந்தால் தாங்க முடியுமா? ம்... தாங்கித்தானே நாளை ஓட்டிக்கிட்டிருக்கேன்... நான்கு சுவற்றுக்குள் கலங்கித் தவித்து...' கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்தேன்.

தங்கைக்கு உடம்பு சரியில்லையெனக் கேள்விப்பட்டதிலிருந்தே பார்க்க வேண்டுமென மனம் துடித்தது. 'கொவிட் 19' நோய்த்தொற்றின் காரணமாய் மகனாலும் உடனடியாக இங்கே வர முடியவில்லை. 'சுசிதான் இருக்கிறாளே. நீ போயிட்டு வா சீதா' அவர் சொல்வதற்காகக் கிளம்ப முடியுமா?

அவ்வளவு சீக்கிரம் அவளது முடிவு வருமென யாருமே நினைத்துப் பார்க்கவில்லையே. செய்தியைக் கேட்ட அதிர்ச்சியில் விழுந்து புரண்டு அழுததோடு சரி. என்னாலதான உனக்கு இந்தக் கஷ்டம் என்பதைப்போலப் பார்க்கும் கணவரது கண்களைக் காணும் சக்தியும் எனக்கில்லை.

மெல்ல எழுந்த பூனை உடம்பை ஒரு குலுக்கு குலுக்கியது. நிமிர்ந்து என்னைப் பார்த்து ''மியா...'' எனக் குரல் கொடுத்துவிட்டு நகர்ந்தது. அது நடந்து போவதையே பார்த்துக்கொண்டிருந்தேன். தபால் பெட்டியின் அருகே சென்ற அது அங்கிருந்தவாறு திரும்பிப் பார்த்தது.

'இப்போல்லாம் கணவர் சொன்னால், சுசி தபால் பெட்டியைப் பார்த்துட்டு வருகிறாள்!'

இங்கு வந்த அன்றே கடிதம் எழுதத் தொடங்கியது, உடனுக்குடன் கருத்துப் பரிமாற்றம் செய்யும் வசதி வந்தும் மாற்றமில்லை. தொலைக்காட்சியில் பார்த்த படத்திலிருந்து தொலைவிலுள்ள பேத்தி பேசுகிற மழலைச் சொற்கள் யாவும் கடிதத்தில் பறந்தன. பெற்றோரின் பிரிவுக்குப் பின், கடிதப் போக்குவரத்து தம்பி, தங்கைக்கு எனத் திசை மாறின. பெரிய தம்பிக்கு, கடிதம் எழுதும் அளவுக்கு பொறுமையெல்லாம் கிடையாது. எல்லாக் கடிதங்களையுமே பொக்கிசம்போலச் சேர்த்து வைத்திருந்தாலும் அவன் எழுதிய ஒன்றிரண்டு கடிதங்களைக் கூடுதல் பாதுகாப்போடு வைத்துள்ளது நினைவுக்கு வந்தது.

சின்ன தம்பியிடமிருந்து இரண்டு மூன்று கடிதங்களுக்குப் பிறகுதான் ஒரு பதில் வரும். ''போன்லயே பேசிடுறோம். லட்டர்ல எழுத என்ன இருக்கிறதுக்கா?'' என்பான். 'என்ன இருக்கிறதுன்னுதான் கிளம்பிட்டானோ?' கண்ணீர்த் துளிர்த்தது.

அன்றைக்குச் சமைத்ததில் தொடங்கி, அலுவலகத்தில் நடந்தவை, அக்கம் பக்கத்து விவகாரம் என ஒன்றுவிடாமல் தங்கை எழுதுவாள். ஏற்கனவே கேட்ட செய்தியாகயிருப்பினும் கடிதத்தில் பார்க்கும்போது பரவசமாகும்.

'இனி யார் எனக்கு எழுதப் போறாங்க? நான் இனி யாருக்கு எழுதுவேன்?'

'ரெண்டு மாசமா வீட்டுக்குள்ளவே கிடந்து தவிச்சதை தாங்க முடியாமதான் வெளியே வந்தேன். அப்படியும் விரட்டுதே. ஒவ்வொருவரது பிரிவும் ஒவ்வொருவிதமான ரணத்தை உண்டாக்கி... ம்... எல்லாத்தையும் மரத்துப் போக வைக்கிற காலமே கிளறிவிட்டு வேடிக்கை பார்க்குதே!'

மழை வலுக்கவும் நான் மட்டும் சளைத்தவளா என்பதைப்போலக் காற்றும் கைகோர்த்தது. 'வீட்டைவிட்டுக் கிளம்பி வந்து ஒரு மணி நேரத்திற்கும் மேலிருக்கும். இவ்ளோ நேரம் சீதா மந்திரத்தைச் சொல்லாம அவர் உதடுகள் நொந்திருக்குமே' சட்டென எழுந்தேன்.

மின்தூக்கியை நெருங்குகையில் ஓர் அறிவிப்பு கண்களில்பட்டது. 'நினோ' என்ற பச்சைக்கிளியைக் காணவில்லையாம்!



### கவிஞர் சாய்சக்தி சர்வி


தெரு முனை பெட்டிக்கடையில் கையை பிசைந்து
கொண்டு நிற்பவளின் பார்வையில் எப்போதும்
நிறைந்திருக்கும் எனக்கான நலவிசாரிப்பு

ஒருமுறை பால்காரியிடமும்
ஒருமுறை கடன்காரரிடமும் கையை பிசைந்து
கொண்டிருக்கையில் எட்டிப் பார்த்தது அதே
நலவிசாரிப்பு

யாரேனும் கையை பிசைந்துக் கொண்டிருந்தால்
கண்முன்னே தோன்றி மறையும் அவள் முகம்

இன்று என்னிடம் கையை பிசைந்து
கொண்டிருக்கிறாள்

இரண்டாயிரம் ரூபாய் கடனுக்குள் நலவிசாரிப்பை
புதைத்துவிட்டு.



### ரகுநாத் வ, மதுரை

வலிய அகற்றப்பட்ட
கொல்லைப்புற அம்மிக்கல்லில் புண்பட்ட
கண்களிருந்தது

கயிறு நீங்கிய
கிணற்று வாளியில்
மடங்கியிருந்தன செவிகள்

சுருண்டு கிடந்த
கொடிக்கயிறுகளில் அறுந்து தொங்கின நரம்புகள்

கிரையம் பேசி
வெளியேறுகையில்

தோலுரிந்த வீட்டுச் சுவரில்
குடும்பப் புகைப்படம்
புன்னகை செய்ய

கிரையம் பேசிய வீட்டினை
இறுகப் பிடித்திருக்கிறது
துருப்பிடித்த ஆணியின் இதயம்.

**நேசன் மகதி**

## மழைவிடு தூது

இரவில்
பெய்யும்
இந்த மழை
தவளைகளுக்கு
காதல் மொழியாகிறது!

---



**கவிஜி**

## புறக்கணித்தலின் விதி

அவளுக்கு சரியாக செல்பி
எடுக்கத் தெரியவில்லை
எப்போதும்
விரைத்தே நிற்கிறது பாவனை
பல படங்கள் ஆடியபடியேதான்
இருக்கின்றன
தனது பருத்த உடல் பற்றிய
ஒளிவு மறைவின்றி
ஒவ்வொரு புகைப்படத்திலும்
மலங்க விழித்துக்
கொண்டிருக்கிறாள்
முக நூல் அறிமுகம்
சமீபமாகவே அவளுக்கு
வந்திருக்க வேண்டும்
அதீத ஆர்வத்தில் எல்லாருக்கும்
ஓடி ஓடி லைக் போடுகிறாள்
தப்பும் தவறுமாக கருத்திடும்
அவள் மொழி அவளை
தமிழின் தூரத்து பிள்ளை என்கிறது
சரிந்தபடியே எடுத்த புகைப்படத்தில்
முறைத்தபடியே இருக்கும் அவளை
நெடு நேரமாக
பார்த்துக்கொண்டே இருக்கிறேன்
புறக்கணித்தலின் விதியை
உடைக்கப்போகும்
அந்த ஒரு லைக்
என்னிடம் இருக்கிறதா...!

*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்

தவளை பாய்ந்ததும்
திடுக்கிட்டு விழிக்கிறது
உறங்கிய குளம்

◈

நிலம் முழுவதும் கவிதைகள்
எழுதியிருக்கும்
மர நிழல்கள்

◈

வானம் ரசிப்பதற்கோ?
மேலும் நான்கு விழிகள்
பட்டாம்பூச்சி சிறகுகளில்

◈

தேய்வுறும் அந்தி
வளர்ந்து நிறைகிறது
மன அமைதி

◈

மரத்தடி நிழல்
பசிக்கும் யாசகனுக்கு
மடியுதிரும் பழம்

◈


குனியும் தாய்
நிமிர்ந்து வளரும்
குழந்தைகள்

◈

கனமழை
அடித்துச் சென்று விட்டது
பெண்ணழும் ஓசையை

◈

வாங்கிய பலூன்
ஒவ்வொரு கணமும்
பறவையாகும் சிறுவன்



மரண ஊர்வலமோ?
சுமந்து செல்கிறார்
தலையில் விறகுக்கட்டு

◈

கட்டுமானப் பகுதி
மௌனமாய் அழுதபடி
குறிஞ்சியும் முல்லையும்

◈

வெய்யில் பட்டும்
கறுத்துப்போகவில்லை
கிளை விரித்த மரம்

◈

நதியை ருசிக்கிறேன்
ஒவ்வொரு முறையும்
மீன் உண்ணும் போது

◈

பெய்யும் மழை
ஈரலித்து விடுகிறது
இரவு

◈

கொளுத்தும் வெயில்
குடத்தில் பெண் சுமக்கிறாள்
கானல் நீர்

அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

# ஒரு மௌனக் காத்திருப்புக்குப் பின்...

உணர்வுகள்
மரத்துவிட்ட மனதுக்குள்
நிரம்புதலற்று இருக்கின்றன சொற்கள்.

ஆழ்ந்து சிந்திக்க முற்படுகையிலும்
புலப்படுவதாயில்லை
வார்த்தைகளின் அடிமுடியனைத்தும்.

வெற்றுத்தாள்களில்
ஏதோ கிறுக்குவனவெல்லாம்
சங்கமமாகின்றன ; அருகிலுள்ள
கழிவுகள் நிரம்பிய கூடைக்குள் கழிவுகளாக.

சொற்களை வலிந்தெடுத்தெழுதின்
நாளை நசிபடலாமவை
பார்வையாளர்களின் கண்களுக்குள்
பரிகாசமாக.

உறங்கட்டும் யாவுமென
காத்திருந்து... காத்திருந்து...
ஒரு மனதாய் கொண்டபோது
கலங்கிய அனைத்தும் தெளிவாகின
பல நிமிட இடைவெளியின் பின்பு.

இப்போ காட்சிகள் தெரிகின்றன!
கவிக்கு
கருக்களும் உருவாகின்றன!
வெற்றுத்தாள்களிலவை விழுகின்றன
வீரியம்மிக்க சொற்களாக...!

ஒரு
மௌனமான காத்திருப்புக்குப் பின்
பெருக்கெடுக்கிறது
கற்பனையூற்று!

நடேஷ் கன்னா

# புதுக்கவிதைகள்

இங்கு தொலைபேசி நோயாளிகள்
சாலையை கடக்கிறார்கள்
எனவே வாகன ஓட்டிகள்
மெதுவாக செல்லவும்

◈

ஆயுதங்கள் இன்றி வாங்கிய
சுதந்திரம் இன்று
ஆயுதங்களுடன் சுதந்திரமாக

◈


உண்மை செருப்பு அணிந்து
வருவதற்குள் பொய் இந்த
உலகத்தை சுற்றி வந்து விடும்

◈

ராமனை தேடாதே அவன்
உன் கற்பை நிரூபிக்க தீயில்
இறங்கச் சொல்வான்
ராவணனை போன்று தேடு
அவன் உன் அனுமதி இல்லாமல்
உன்னை தொட மாட்டான்
கடைசியில் உனக்காக
உயிரையும் விடுவான்.

◈

வலிக்கும் போதே அழுது விடுங்கள்
வாழும் போதே சிரித்து விடுங்கள்
வலி போனால் அழவும் முடியாது
வாழ்க்கை போனால் சிரிக்கவும்
முடியாது




# அவள் வீடு

## உஷாராணி சம்பந்தன்

படிமங்களாகத் தங்கிப் போகின்ற சில குழந்தைப் பருவ நினைவுகளை மேலடுக்கில் கொண்டு வர நிறையக் கால தாமதமாகி விடுகிறது. சமயங்களில் அந்தப் படிமங்களை மீட்டெடுக்க முடியாமல் சூழல்களின் கட்டாயங்களில் அடிமைப்பட்டு அடி ஆழத்திலேயே தேக்கியும் விடுகிறோம். இந்த நினைவுகள் வாழ்வின் இறுதியில் நிறைவேறாத ஏக்கங்களாக மேலெழும்பிக் குமைய வைத்து விட்டு நம்மோடு மாண்டும் போகின்றன.

அப்படி ஏக்கம் அல்லது குற்ற உணர்வு என் கடைசி நிமிடத்தில் ஏற்பட்டு விடக்கூடாதென்று தான் நான் அவள் முகவரியைத் தேட ஆரம்பித்தேன். அதுவும் முப்பத்து மூன்று வருடங்கள் கடந்து ஒரு வாரமாக அலைந்து கண்டு பிடித்தேன். வருடத்தில்

மறக்க முடியாத இந்த நாளில் அவள் வீட்டிற்குப் போயே ஆகவேண்டும் என்று இதோ போய்க்கொண்டிருக்கிறேன்.

அவள் என்றால் முனியம்மா. என்னோடு ஆறாவதிலிருந்து ஒன்பதாவது வரை படித்த முனியம்மா. நான் பல வருடங்கள் கழித்துச் சொந்த வாழ்வின் கடமைப் பக்கங்கள் தீர்ந்த பிறகு வளர்ந்த மண் தேடிச் சென்னை வந்திருக்கிறேன் என் கணவரோடு. அதற்குப்பிறகுதான் இந்தத் தேடல்.

முனியம்மாவைப் பெற்றவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். தாம்பரம் காமராஜபுரத்தில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் இரண்டாம் தளத்தில் இருப்பதாக அறிந்தேன். வயது எழுபதைத் தாண்டியிருக்கலாம்.

இத்தனை காலமாக முனியம்மாவின் நினைவு ஒரு எலி பிறாண்டுவது போல் மனதைக் கரண்டிக்கொண்டே இருந்தது. நிம்மதியான வாழ்க்கை, மகளின் திருமணம் என அன்றாடக் கடமைகளைத் தாண்டி மனதை அறுக்கும் இழையாக அவள் நினைவு நெருடிக்கொண்டே இருந்தது.

எனக்குக் கல்வி தந்தது ஒரு கிருத்துவப் பள்ளி. அப்பாவுக்கு வேலை மாற்றல் ஆனதும் என்னுடைய ஆறாவது வயதில் அரக்கோணத்திலிருந்து சென்னைக்கு வந்தோம். தாம்பரம் நகராட்சித் துவக்கப் பள்ளியில் ஐந்தாவது வரை படித்து விட்டு அந்தக் கிருத்துவப் பள்ளிக்கு ஆறாவதில் மாறினேன். சிறிய கிராமத்திலிருந்து சடாரெனப் பட்டண வாழ்க்கைக்கு மாறியது போல் மிகப்பெரிய வித்தியாசம். இரண்டு மாடிகள் கொண்ட பள்ளி வளாகம். தனி விளையாட்டு மைதானம். அங்கங்கே மரங்கள். ஓடு வேய்ந்த பள்ளியிலிருந்து வந்த எனக்கு அது பிரமிப்பூட்டும் கட்டிடமாக இருந்தது. ஆனால் கல்விக்கட்டணம் குறைச்சல் என்பதால் அங்கே சேர்த்தார் அப்பா.

செல்வத்தைக் காட்டும் தோலின் மினுமினுப்பு. பளிச்சென்ற சீருடை. தமிழ்க்கலப்பின்றி ஆங்கிலம் பேசித் திரிந்த மாணவிகள். பார்த்துப் பயந்து போனேன். அப்போது ஆங்கிலம் எனக்கு அன்னிய மொழி. ஒரு வார்த்தை கூடப்பேசி அறியாதவள் நான். பயமும் தயக்கமும் தாழ்வு மனப்பான்மையும் கலவையாகி யாரிடமும் நெருங்க விடாமல் தனித்து நின்றேன். வேறு பள்ளியில் சேர்ந்து விடலாமா என்கிற அளவிற்கு அச்சம்.

என் அச்சத்தை உணர்ந்து தமிழ் மீடியத்தில் மாற்றி விட்டார் அப்பா. அந்த வகுப்பு புதிதாகச் சேர்ந்த என்னைப் போல் சிலரும் முதல் வகுப்பிலிருந்து அதே பள்ளியில் படிக்கும் பலருமாகக் கலந்து நின்றது. செல்வச் செழிப்பும் மத்தியதரமும் ஏழ்மையுமாகப் பலமுகங்கள். அங்கும் யாருடனும் சட்டெனக் கலக்க முடியாமல் ஒதுங்கியிருந்தேன்.

ஒரு நீள இருக்கையில் மூன்று மாணவிகள். நான், என் பக்கத்தில் வசந்தி அடுத்து சுவர் ஓரமாக ஜன்னல் அருகே முனியம்மா. முதலில் என்னிடம் பேசியது முனியம்மாதான். நடுவிலிருக்கும் வசந்தியின் தலையைப் பின்னுக்கிழுத்து எட்டி எட்டிப் பார்த்துப் பேசுவாள். வசந்தியும் அவளும் முதல் வகுப்பிலிருந்து அதே பள்ளியில் படிப்பவர்கள் என்று அறிந்தேன். சில நாட்களிலேயே டீச்சரிடம் சொல்லிவிட்டு வசந்தியை ஓரத்தில் தள்ளி, நடுவில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். பயமின்றி ஆசிரியையிடம் எப்படிப்பேசி அனுமதி பெற்றாள் என்பதுதான் எனக்கு ஆச்சர்யமேற்படுத்தியது.

இடைவேளைகளிலெல்லாம் என்னுடன் ஏதாவது பேச முயற்சி செய்தபடி இருந்தாள் முனியம்மா. நட்பு பாராட்ட விரும்பும் அவள் அணுகுதலை அலட்சியம் செய்தபடி இருந்தேன். அதற்கான தகுதி அவளுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. காரணம் அவள் தோற்றம்.

வறண்ட சருமம். வாரி இரட்டைப் பின்னலிட்டு மடித்துக் கட்டியிருந்தாலும் எண்ணெய் இல்லாத கூந்தல் அங்கங்கே சிலும்பிக் கொண்டு நிற்கும். நீல வர்ண ரிப்பன் சாயமிழந்து வெள்ளையாய்ச் சிரிக்கும். அதில் ஒரு பின்னல் முன்புறமாகத் தொங்கிச் சட்டையின் கிழிசலை சாமர்த்தியமாக மறைக்கும். வாய் ஓரப் புண்கள். (அந்தக் காலத்தில் அந்த வயதில் அது வைட்டமின் குறைபாடு என்று எனக்குத் தெரியாது). சில நாட்களில் காலில் செருப்பணியாமல் வருவதைப் பார்த்திருக்கிறேன். அவளின் நீலப் பாவாடையின் உயரப்போதாமையை வெள்ளைப் பட்டை ஈடு செய்திருக்கும்.

மேலும் அவள் உணவு இடைவேளையில் பள்ளியின் இலவச மதிய உணவைச் சாப்பிட்டு வருவாள். நாங்களும் வறுமையில் வாடிய காலம்தான் அது. இருந்தாலும் என் தலையில் எண்ணெயும் சாயமிழக்காத நீல ரிப்பனும் செருப்பணிந்த கால்களும் புண்ணற்ற வாய் ஓரங்களும் இடையில் பட்டை இல்லாத சீருடையும் பழைய சாதமாக இருப்பினும் வீட்டிலிருந்து அம்மா தரும் உணவும் அவளிடமிருந்து நான் வேறு பட்டவள் என்ற மமதையை எனக்குள் விதைத்திருந்தன.

அவள் படிப்பிலும் வெகு சுமார். கணக்கைத் தவிர. எனக்கு அவளின் கணக்குத் திறமையைக் குறித்துக் கொஞ்சம் ஆச்சர்யமாகவும் வெளிக்காட்டமுடியாத பொறாமையாகவும் இருந்தது. என் வெறுப்பையும் பொறாமையையும் அவள் உணராமல் ஒளித்து வைத்திருந்தபடியால் என்னிடம் தோழமை காட்ட முயன்று கொண்டே இருந்தாள்.

எல்லாவற்றையும் மீறி அவளின் எதற்கும் பயமற்ற தன்மை தனித்துத் தெரிந்தது. தோற்றமோ ஏழ்மையோ சுமாரான படிப்போ அவளை யாரிடமும் பேசத் தயங்க விடவில்லை. அத்தனை ஆசிரியைகளிடமும் அவள் பயமின்றிப் பேசுவதையும் நான் நெருங்கத் தயங்கிய சில ஆங்கிலப் பிரிவு மாணவிகளிடம்கூட சகஜமாகப் பேசுவதையும் பார்த்துப் பொறாமைப் பட்டாசு எனக்குள்

வெடித்தபடி இருந்தது. ஆமை ஓடு சுமப்பதுபோல் எப்போதும் எதற்கும் அச்சத்தைச் சுமப்பவளாக நான் இருந்ததால் அவளின் பயமற்ற தன்மை எனக்கு எரிச்சலேற்படுத்தியது.

ஆங்கிலத்தில் பேசமுடியாததும் எதற்கும் தயங்குவதுமே என் பலவீனமாக இருந்தது. மற்றபடி நகராட்சிப் பள்ளியின் பலமான அடித்தளத்தால் நானெடுத்த மதிப்பெண்கள் என்னை வகுப்பில் முதலிரண்டு இடத்தைப் பெற வைத்தது. வகுப்புத் தலைவியுமானேன். நான் படித்தது தமிழ் மீடியத்தில் என்றாலும் ஏதாவது வேலை நிமித்தம் ஆங்கில மீடிய வகுப்பிற்கு செல்ல நேரும்போது உதறல்தான். தலை நிமிர்த்தாமல் இட்ட வேலையைச் செய்து விட்டு ஓடி வருவேன். அத்தனை மினுமினுப்புத் தோலும் ஆங்கிலத்தில் பேசிக் கிண்டல் செய்து சிரிப்பது போல் ஒரு தாழ்வு மனப்பான்மை. அந்த வகுப்பிற்குப் போக மாட்டேன் என்று ஆசிரியைகளிடம் சொல்வதற்கும் பயம்.

என் பயத்தைக் கூர்ந்து கவனித்தபடி இருப்பாள் முனியம்மா. என் பயத்தை நீக்க உதவி செய்வது போல் பேச முயற்சிப்பாள். ஆனால் அவளைப் புறக்கணித்தபடி இருந்தேன்.

“பயப்படாமப் போ அந்த க்ளாஸுக்கு. இல்லாட்டிப் போமாட்டேன்னு தைரியமாச்சொல்லு வரி. நீதான் நல்லாப் படிக்கிறியே.. என்ன பயம்” என்று இரகசியக் குரலில் சொல்வாள். வரலக்ஷ்மி என்ற என் பெயரைச் சுருக்கி ‘வரி’ என்று அழைக்க நீ யார்? என்று நினைத்து முகம் சுளித்தேன்.

“ம்.. நான் பாத்துக்கறேன்” என்று அவளைக் கத்தரித்தேன்.

வகுப்பில் முதலிரண்டு இடத்தில் நான் இருந்ததில் சுமாரான மாணவிகளுக்குக் கற்றுத்தர நேர்ந்தது. குழுவாகப் பிரிந்து படிப்போம். முனியம்மா என் வெறுப்பை மீறி என் குழுவில் சேர்ந்து கொண்டாள். அவள் சந்தேகம் கேட்க வருவதற்கு முன்பே தவிர்க்க ஏதோ ஒரு காரணம் உருவாக்கியபடி இருந்தேன். ஆனால் நான் எவ்வளவு அலட்சியம் செய்தும் என்னிடம் தனிப் பிரியம் காட்டியபடி இருந்தாள் அவள்.

ஒருமுறை வேக வைத்த பனங்கிழங்குத் துண்டுகளை அவள் பையிலிருந்து எடுத்து நீட்டியபோது நான் வாங்கி ஒளித்துக் குப்பையில் போட்டதை அவள் கவனித்திருக்க வாய்ப்பில்லை. என் வகுப்பு ஆசிரியை “அட பனங்கிழங்கா” என்று சிரித்தபடி வாங்கித் தின்றதை அதிசயித்துப் பார்த்தேன். அடிக்கடி உப்புக் காரமிட்ட மாங்காய்த் துண்டுகள், களாக்காய், ஆரஞ்சு மிட்டாய், ஜவ்வு மிட்டாய் என்று ஏதாவது தின்பண்டங்கள் புத்தப்பையிலிருந்து எடுத்துத் தந்தபடி இருப்பாள். எதையும் மறுக்கும் என் நாக்கின் சுவை நரம்புகள் மிட்டாய்களை மட்டும் மறுக்கவில்லை. அவளின் தோற்றமும் அச்சமற்ற தன்மையும் எனக்கு உறுத்தியபடியே இருந்தது. .

அடுத்த வருடம் அரையாண்டுப் பரீட்சைக்கு முன் மழையில் நனைந்து காய்ச்சலில் படுத்தேன். நாலு நாட்கள் பள்ளி செல்ல முடியாமல் வீட்டில் ஜன்னலின் ஊடே மழையை வெறித்துக்கொண்டிருந்த என்னைப் பார்க்க வந்த ஒரே மாணவி அவள்தான். அடுத்தநாள் சனிக்கிழமை விடுமுறை என்று தன் நோட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாள். கூடவே கசந்து வழிந்த என் நாவிற்குப் பொட்டலத்தில் பொதிந்து ஆரஞ்சு மிட்டாய்.

என் அம்மா அப்பாவிடம் வெகு சகஜமான உரையாடல். அவர்களும் அதே அன்புடன் அவளோடு பேசியபோது அந்தத் தோற்ற வித்தியாசம் தோற்றுப்போனது. அந்த நாளிற்குப்பிறகு நான் அவளிடம் சாதாரணமாகப் பேச ஆரம்பித்தேன். அவளின் அன்பு, அந்த ஏழ்மைத் தோற்றத்தையும் சுமாரான படிப்பையும் புறம் தள்ள வைத்தது. நாங்கள் நல்ல தோழிகளானோம்.

அவளின் தைரியம் எனக்கும் தொற்றிக்கொள்ள எல்லாரிடமும் தயக்கமின்றிப் பேசத்தெளிந்தேன். போட்டிகளில் பங்கேற்கத் தயங்கும்போதெல்லாம் “வரி உன் பேரக் குடு.. போ போ” என்று அவள்தான் குரல் கொடுப்பாள். ஆசிரியைகளின் அறைக்கு நோட்டுப் புத்தகங்களை தானும் பாதி சுமந்து என்னுடன் வருவாள். எப்போதும் உதவிகள் செய்யக் காத்திருக்கும் ஒரு தேவதையாக என்னைச் சுற்றி வந்தபடி இருப்பாள் முனியம்மா. மாலையில் வகுப்பறையை சுத்தம் செய்ய என் முறை வரும்போதெல்லாம் “உன் வீடு ரொம்ப தூரம் வரி.. நீ போ.. என் வீடு பக்கத்துலதானே இருக்கு.. நான் முடிச்சுட்டுப் போறேன்” என்று என்னை அனுப்பிவிடுவாள்.

முனியம்மா என் அன்புக்குரியவளாகி ஒன்பதாவது வந்து சேர்ந்தோம். என் அப்பா வாங்கித் தந்த வைட்டமின் மாத்திரைகளால் அவளின் வாய் ஓரத்துப் புண்கள் கூடக்காணாமல் போயிருந்தன. என்னைப் போல் படிக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்ல ஆரம்பித்தாள். முன்னேற்றமும் தெரிந்தது.

அவளது குடிசை வீடு பள்ளிக்கு மிக அருகில் இருப்பதாகச் சொன்னாள். இன்னும் நான் அங்கே போகாமலிருந்தது மிகப் பெரிய குறை அவளுக்கு.

“எங்க வீட்டுக்கு எப்போ வரே ? பரீட்சைக்கு எங்க வீட்ல படிக்கலாம்பா” என்று தினமும் கேட்க ஆரம்பித்திருந்தாள். அவள் ஆயாவின் கைமணத்தில் கேப்பைக் களி சாப்பிடவும் எனக்கு ஆர்வமேற்படுத்தியிருந்தாள்.

பரீட்சை நேரம். மாதத் தேர்வு முடிந்து அப்பா அம்மாவின் அனுமதி பெற்று வருவதாகச் சொல்லியிருந்தேன்.

உணவு இடைவேளையில் படித்துக் கொண்டிருந்தோம். மத்தியானம் அறிவியல் பரீட்சை. மழையான மழை. அசுரமழை. மரத்தடியில் படிக்கும் நாங்கள் வகுப்பறைக்குள் ஒண்டிக் கிடந்தோம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் மாதத் தேர்வுக்கெனத் தனித்தனியாக ஒரு நாற்பதுபக்க நோட்டு. பரீட்சை நேரத்தில் மறக்காமல் கொண்டு வர வேண்டும். மீறினால் பரீட்சை எழுத முடியாது. அந்த விடைத் தாளை ஐந்து முறை எழுதும் தண்டனையும் கிடைக்கும். முனியம்மா அவசரத்தில் நோட்டை மாற்றிக் கொண்டு வந்திருந்ததை அப்போதுதான் சொன்னாள்.

கனமழை விட்டுச் சாரலாகப் பெய்து கொண்டிருந்தது.

"வீட்டுக்குப் போய் நோட்டை கொண்டு வந்துர்ரியா முனியம்மா?" என்றேன்.

"வேணாம்பா.. வீட்டைச் சுத்தி மழை வெள்ளமாட்டம் நிக்கிது.. போனா மாட்டிக்குவேன்.. டீச்சர்கிட்ட சொல்லிட்டு பேப்பர்ல எழுதறேன்.. அப்புறமா நோட்டுல ஒட்டிக்கிறேன்" என்றாள். அவள்தான் அஞ்சாத சிங்கமாயிற்றே.

"உங்க வீடு மொட்டை மாடிலேருந்து தெரியுமே. மழைல எப்படியிருக்குன்னு பாத்துட்டு வரலாமா?" என்றேன்.

"போலாம் வரி.. வா" என்று கைப்பிடித்து இழுத்தாள். நாங்கள் படியேறுவதற்குள் என்னை ஸ்டாஃப் ரூமில் அழைப்பதாகச் சொன்னார்கள். அவள் கையை உதறி விட்டு ஓடினேன்.

"யே வேற யாராச்சும் வரீங்களாப்பா எங்க வீடு காட்றேன். " என்று அவள் குரல் கொடுத்ததும், பானுவும், வசந்தியும் அவள் பின்னே ஓடியதையும் பார்த்தேன்.

"ஏய்.. டீச்சர் வரதுக்குள்ள வந்துருங்க " என்றேன்.

"சரி.. இதோ வந்தர்றேன்" என்று ஓடினாள். அதுதான் கடைசியாக அவள் குரலை நான் கேட்டது. அவர்கள் போன வேகத்திலேயே பானுவும் வசந்தியும் கிலியடித்து ஓடி வந்தார்கள். ஆசிரியைகள் அறைக்குள் ஓடிப்போய் ஜமுனா டீச்சரை அழைத்துக் கொண்டு மாடிக்கு விரைந்தார்கள்.

ஐந்து நிமிடத்தில் மாடியில் நடந்தது எங்களுக்குத் தெரிந்து போயிற்று. வீட்டைக் காட்டும் ஆர்வத்தில் ஓடிப்போய் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்த இரண்டு மின் கம்பிகளுக்கிடையில் தலையை நுழைத்திருக்கிறாள் முனியம்மா. விநாடியில் கனவு கருகிப்போனாள்.

சாயமிழந்த நீல ரிப்பனும் இரட்டைப் பின்னலுமாக அவள் தலை மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரைத்தாண்டி பூமியை நோக்கித் தொங்கிக்கொண்டிருந்ததை வகுப்பிற்கு வெளியே வந்து அனைவரும் பார்த்தோம். அதுதான் அவளைக் கடைசியாகப் பார்த்தது. மரணம் என்பது அந்த வயதில் நான் பார்த்தறியாத ஒன்று. அவளை அதற்குப்பின் பார்க்கும் தைரியம் அற்றவளாகிப்போனேன். மற்ற மாணவிகளும் ஆசிரியைகளும் அவள் வீட்டிற்குச் சென்ற போது தனிமையில் என் வீட்டில் நடுங்கி அழுது படுத்திருந்தேன்.

அவள் மரணத்திற்கு ஒரு வகையில் நானும் காரணம் என்கிற உறுத்தலில் தான் காலம் கடந்தும் அவளை நான் மறக்காமல் இருக்கிறேனோ? சாகாமல் இருந்திருந்தால் ஒருவேளை அவளை நான் மறந்திருக்கவும் கூடும். இறப்பதற்குச் சில வருடங்கள் முன்பு வரை அவளைப் புறக்கணிக்காமல் இருந்திருந்தால் இப்படி முப்பத்து மூன்று வருஷங்கள் கடந்தும் அவள் என் நினைவில் தேயாமல் இருந்திருப்பாளா? அவளைப் பெற்றவர்களையாவது பார்க்கலாம் என்ற நம்பிக்கையில் முகவரி தேடி அலைவேனா?

காரை நிறுத்தி விட்டு, இரண்டாவது மாடிக்குப் படியேறினேன். வலது பக்க வீடு. திறந்திருந்தது. அது முனியம்மாவின் வீடுதான் என்று ஊர்ஜிதம் செய்வதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. நேர் சுவரில் கருப்பு வெள்ளைப் புகைப்படம். வெள்ளை நீலச் சீருடையில் தலை சிலும்பிக்கொண்டு இரட்டைப் பின்னலிட்ட முனியம்மா.

பக்கத்தில் இன்னொரு புகைப்படம். எங்கள் ஏழாவது வகுப்பில் எடுத்தது. முதல் வரிசையில் ஆசிரியைக்குப் பக்கத்தில் நான். முனியம்மா எங்கே என்று தேடினேன். சரியாக எனக்குப் பின்னே நிற்கிறாள். நான் அவளைப் புறக்கணித்த காலமது.

1992ல் அவர்கள் மகளோடு படித்தவள் என்று அந்த வயதான பெற்றோரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். விழிப்பள்ளத்தில் நீர் கசிய என் கைகளைப் பிடித்துக் கொண்டார் அந்தக் கிழவர்.

"நீதானாம்மா அது.. உன்னாட்டம் படிக்கணும்னு சொல்லிக்கினே இருக்கும். ம்மா..இங்க வா" என்று உள்ளிருந்த ஒரு இருபது வயது மதிக்கத்தக்க பெண்ணை அழைத்தார்.

"இப்போ இதான் எங்க மக.. சுனாமில அப்பனாத்தா இல்லாத பூடுச்சி.. நாங்க எடுத்தாந்து வளக்கறோம்.."

"உன் பேர் என்ன" என்றேன்.

"முனியம்மா" என்றாள்.

"இன்னிக்கு அக்காவோட நினைவு நாள்.. இந்தாங்க அவங்களுக்குப் பிடிச்சது" என்று தட்டில் அவள் கொண்டு வைத்த கேப்பைக் களியைக் கண்ணீர் உப்பிட்டுச் சாப்பிட ஆரம்பித்தேன்.

## மு.ஆறுமுகவிக்னேஷ்

# முளைக்கொட்டு

அதுவரை இடிக்கும் உரல்களாக
வெறும் கற்களாக கிடந்தவை
கவிழ்த்துப் போட்டு
குலவையிட்டு கும்மி அடிக்க
நிலையில் வைத்த பின்
தொட்டு உணரும் தெய்வமாகிறது

குமரிகள் வட்டமிட்டு
கும்மி கொட்டுவதைக்
காணும் குழந்தைகள்
தாங்களும்
கும்மி அடிக்கிறோம் என்று
அவர்களுக்கு இடையில் புகுந்து கொண்டு முரண்டு பிடிக்கிறார்கள்

அப்போது ஒருவட்டம்
இரண்டு வட்டங்கள் ஆகிறது

இப்போது
வெளிவட்டம் குமரிகளுக்கு
உள்வட்டம் குழந்தைகளுக்கு

கும்மிக்கல்லைச் சுற்றும்
குழந்தைகளின் உள்வட்டம் நிலவு
குமரிகளின் வெளிவட்டம்
நிலவைச் சுற்றும் ஒளிவட்டம்

வட்டங்களுக்கு வெளியே
உட்கார்ந்து கொண்டு
வேடிக்கைப் பார்க்கும்
பேரிளம் பெண்கள் எல்லாம்
கருமுகில்கள் போல்
தங்களது இளமைக்கால நினைவுகளைச் சுமக்கும் வானம்

தன்ன நன்னே நான நன்னே
தன்னேனே தான தன்னானே
என்ற இரண்டு மெட்டுக்கள் தான்
அனைத்துப் பாடல்களுக்கும்



மெட்டு மொட்டாக
வளை குலுங்க கைக்கொட்டும்போது
பாட்டு பூவாகிறது

மற்ற பாடல்களுக்கு எல்லாம்
ஒருமுறை மட்டுமே
கைக்கொட்டும் பெண்கள்
ஆனிப்பொன்
பாட்டுக்கு மட்டும்
இருமுறை தொடர்ச்சியாக கொட்டி
கொஞ்சம் இடைவெளி விட்டு மூன்றாம் முறையாக கொட்டுகிறார்கள்

வாராலம்மா வாராலே
வடிவழகி வாராலே
வட்ட வட்ட பொட்டழகி
வடக்குத்தெரு மாரியாத்தா
என்று கணபதி பாட்டி படிக்கும் போது
உறங்கச் சென்றால்
ஆனிப்பொன் மண்டப ஊஞ்சலிலே
செல்வ முளைமாரி ஆடுகிறாள்
என்ற பாட்டு பாடும் போது
உண்மையிலே ஊஞ்சலில் வைத்து
தாலாட்டியதைப் போன்று
இந்த ஆடிக்காற்றுக்கும் அதுக்கும்
உறக்கம் சொக்கிக் கொண்டு
வந்து சேரும்.


பாவலர் கருமலைத்தமிழாழன்

# எச்சிலுக்குக் கையேந்தும் வாழ்வும் வாழ்வா

*கண்களைநீ கண்டாயா கருணை தன்னைக்*
*காண்கின்ற பார்வையிலே காட்டும் பெண்ணை*
*மண்காட்டும் பொறுமையினை மனத்துள் வைத்த*
*மாண்பான பண்புதன்னைக் கொண்ட பெண்ணை*
*எண்ணத்தில் நேர்மையினைக் குறிக்கோ ளாக*
*ஏற்றதிலே மாறாமல் நடக்கும் பெண்ணை*
*பெண்பார்க்க வந்துபொருள் கேட்கும் கீழ்மைப்*
*பேடியனே ஆண்மகனா நீசொல் தூதூ!*

*அக்காலச் சிற்பமெனும் வடிவம் கொண்டே*
*அழகொளிரும் ஓவியமாய்த் திகழும் பெண்ணை*
*முக்காலத் திருக்குறளின் காமப் பாலை*
*முகத்தினிலே காட்டுகின்ற கருத்துப் பெண்ணை*
*திக்கெட்டும் செல்வதற்குக் கல்வி பெற்ற*
*திருமகளைப் பெண்பார்க்க வந்து நின்று*
*கொக்கரித்துப் பொருள்கேட்கும் கீழ்மை நெஞ்சம்*
*கொண்டவனே ஆண்மகனா நீசொல் தூதூ!*

*விற்பனைக்குக் காட்டுகின்ற பொருளா பெண்கள்*
*விலையில்லா அன்பாலே வார்த்தெ டுத்த*
*பொற்சிலையை மணமுடித்துத் துணையாய் ஆக்கப்*
*பொன்பொருளை விலையாகக் கேட்கும் மூடா*
*குற்றம்தான் எனத்தெரிந்தும் அதனைச் செய்யக்*
*கூசாமல் கேட்கின்ற கயமை யோனே*
*எற்றுக்கு ஆணென்று சொல்லு கின்றாய்*
*எச்சிலுக்குக் கையேந்தும் வாழ்வும் வாழ்வா!*



துங்கன்

# உயரம்தான்

நேற்று வரை
எந்த நேற்றென்று தெரியவில்லை.

நிமிர்ந்து நடந்ததில்லை
நடக்கவும் முடியவில்லை
நன்னடத்தையில் நடந்து,
அறிவுரைக் கூறியது
எல்லாம் பித்த நிலையில்தான்.

பிராந்தி புட்டியை
அலுங்காமல் எடுக்க முடியவில்லை.
கண்ணாடியை எத்தனை
முறைத் துடைத்தும்
அத்தனை முறையும்
மங்களாகவேத் தெரிகிறது.

செய்தித்தாளின் எழுத்தெல்லாம்
கல்வெட்டாக சிதலடைந்து
வரலாற்றின் என்பக்கம் கிழிக்கப்படுகிறது.


அந்த நாற்காலிதான்
இருக்கை
படுக்கையெல்லாம்
உரையாடலும்
அதனுடன்தான்.

ம்ம்ம்....
மறக்காமல் நினைவில்
தொக்கிக்கொண்டு இருக்கிறது.
புத்தகம் ஒன்றும்
எழுதுகோலொன்றும் இன்னமும்.

எந்த பக்கம் என்று தெரியாது
எத்தனை முறை வாசித்தேன்
என்றும் தெரியாது
அத்தனை முறை வாசித்தும்
அதனை முழுமையாக முடிக்கவில்லை.

இன்னும் எவ்வளவு காலம்
இப்படியே போகும்?
என் காலம் போகும் வரை
இப்படியே போகும்
அது மட்டுமல்ல
நினைவு இருக்கு பிரக்ஞை முழுவதும்.

## கண்ணன் விஸ்வகாந்தி, தாரமங்கலம்




கண்களின் வழியே பால்யம் வழிய
காலைப் பிரார்த்தனையில்
பிள்ளைகளோடு கடவுள் வாழ்த்தையும்
திருக்குறளையும்
கூடவே திரும்பச் சொல்கிறான்
காலை உணவு வண்டியின்
கதவைப் பிடித்தபடியே
பள்ளியை பாதியில் விட்ட
வண்டியின் கிளீனர் சிறுவன்
நகரும் பட்டியில்
மனிதனும் மந்தையும்
நாளை ஞாயிறு

◈

அவர் அதைச் செய்தார்
அவர் இதைச் செய்யவில்லை
என்று நித்தம் திண்ணையிலமர்ந்து
ஊர்க் கதை பேசிவிட்டு
இன்று என்ன செய்ய வேண்டும் என்பதை வசதியாக
மறந்து விடுகிறோம்
காலையில் குளியலறையில்
கண்டேன் கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு கொசுவை
வலை பின்ன ஆரம்பித்த ஒரு சிலந்தியையும்
ஒரு கணம் யோசித்தேன்
பின் தண்ணீரை பீய்ச்சினேன்
உயிர் போனாலென்ன
சுத்தம் தானே முக்கியம்
இன்று உறவினர் வருகை வேறு

◈

மனசிலும் உடம்பிலும்
வலி வந்து சூடினும்
ஓடித்தான் ஆகவேண்டும்
ஓய்வாக உட்கார்ந்தால்
சோம்பேறியும் கையாலாகாதவனும்
ஒன்று சேர்ந்து நம் தோளில்
அடமாக அமர்ந்து கொள்வர்
விரட்டவே முடியாது
மூளையில் வலைபின்னும் சிலந்தி
உடம்பெல்லாம் கரையான் அரித்து விடும்
யாரேனும் வந்து கைதூக்கி விடுவர்
ஒரு முறை இரு முறை
என்றாலும்
தினந்தோறும் நம் உடலை
நாம் தானே சுமக்க வேண்டும்?



# நாட்டுக் கோழி

மூதூர் றிஸ்வின்

நிப்ராஸ் கொஞ்சம் வசதியானவன். பிறருக்கு உதவும் மனப்பான்மை உடையவன். அன்று ஒரு நாள், அவனது நண்பர்களை பார்த்து, நான் சோறும் கறியும் சமைத்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் முடியுமான அளவு பணத்தை தாருங்கள் என்றான்.

நண்பர்களும் வசதிக்கேற்ப கூட்டிக் குறைத்து கொடுத்தார்கள். ஒரு சிலர் ஒன்றும் கொடுக்க வில்லை. அது பரவாயில்லை. நிப்ராஸும் கூடுதலான பணத்தை செலவழித்து சோறும், கறிகளும் ஆக்கிக் கொண்டு மேலதிகமாக பொறியல்களும் பழங்களும் இனிப்புகளுடன், அனைத்தையும் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்தான்.

சாப்பாட்டில் இருந்து விதவிதமான வாசனைகள் மூக்கைத் துளைத்தது. ஆத்தோரத்து மரநிழலும், காற்றோட்டத்தில் குளுமையும் அருமையே. அங்கே உள்ள பசுமையான புல்வெளி பஞ்சு போல் இருந்தது. அந்தப் புல்லின் மேலே பாய்களும், படங்குகளும் விரிக்கப் பட்டன.

கொண்டு வந்த சாப்பாட்டை, சாப்பிடுவதற்காக தயார் செய்யப்பட்டது. எல்லோரும் சாப்பிட்டார்கள். சாப்பிட்டார்களா? என்றதொரு கேள்வி நிப்ராஸுடைய மனதில் எழுந்தது. சோற்றை முற்றாக சாப்பிட்டு முடித்தார்கள். அதற்கு முதலில் பொறியல்களை விரும்பி உண்டார்கள். ஒருவர் வாழைப் பழங்கள் மருந்தடிக்காதது. அதனால் மிகவும் ருசியாகவும், இனிப்பாகவும் உள்ளது என்றார். பக்கத்திலிருந்த நண்பனுடைய பழங்களில் ஒன்றை மேலதிகமாக எடுத்தும் சாப்பிட்டார்.

யாருமே சாப்பாட்டை பற்றி எந்த ஒரு குறையும் சொல்லவில்லை. ஆனால் நிப்ராஸின் கண்கள் ஏதோ! ஒன்றை மட்டுமே அவதானித்துக் கொண்டே இருந்தது. சாப்பிட்டு முடிந்த இடத்தில் எச்சில்கள் கிடப்பது வழமைதான். அந்த எச்சில்களில் பெரும்பாலும் கொச்சிக்காய், கருவேப்பில்லை , ரம்பை, கறுவாப்பட்டை, ஏலங்காய் போன்றன கிடக்கும். இதுதான் வழமை. இன்னும் கொஞ்சம் யோசித்தால் தவறுதலாக கீழே விழுந்த மீன் துண்டுகள் இறைச்சிச் துண்டுகள் கிடப்பதும் சகஜம்.

ஆனால் சாப்பிட்டவர்களில் முக்கால்வாசிப் பேரின் எச்சில்களிலும் கோழி இறைச்சி முழுச் சதையோடும் , நுனிப் புல் மேய்ந்தாற் போலும் அப்படியே கிடந்தது. நிப்ராஸும், இன்னும் ஒரு சிலருமே கோழி இறைச்சியை முற்றாகச் சாப்பிட்டு, முள்ளையும் சூப்பித் திண்டார்கள். எல்லோரும் சாப்பாட்டை பாராட்டிக் கொண்டே இருந்தார்கள். இந்தப் பாராட்டை விட கோழி இறைச்சி கொஞ்சம் அவிஞ்சும், கொஞ்சம் அவியாமலும் இருந்திருக்குமோ! என்ற சந்தேகம்தான், நிப்ராஸை நிலை குலைய வைத்தது. எச்சாய் கிடந்தாலும் பரவாயில்லை, அதை எடுத்துக் கழுவிவிட்டாவது சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று அவனின் மனச் சாட்சி போராடியது. அத்தனை நண்பர்களும் குவிந்திருக்கும் இடத்தில் சாத்தியப்படுமா?

இறுதியாக கழிவுப் பொருட்களை வீசிவிட்டு, பாத்திரங்களை ஆற்றிலே அலசிக் கழுகிட, சில்வர் தட்டுகள் மினுங்க மினுங்க அடுக்கினார்கள். நிப்ராஸின் மனம் மட்டும் மினுங்கவில்லை. சரி எல்லாவற்றையும் சுதாகரித்துக் கொண்டு, கோப்பை சாமான்களை ஏற்றிச் செல்ல முச்சக்கர வண்டிக் காறனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த முற்பட்ட போது, நண்பர்கள் எல்லோரும் அந்த அழைப்பை நிராகரித்தார்கள். ஆளுக்கொரு கைகளில் அகப்பட்டதை எல்லாம் எடுத்தார்கள். மிச்சமாய் எதுவும் இல்லை. ஆற்றங்கரைக்கும், மரநிழலுக்கும் விடை கொடுத்து விட்டு, எல்லோரும் நிப்ராஸின் வீட்டுக்கு சென்று விட்டார்கள்.

கையிலிருந்த கோப்பை, சட்டி பாய்களை வீட்டின் படிக்கட்டில் அழகாக வைத்தார்கள். இந்த சத்தங் கேட்டு நிப்ராஸின் உம்மா குசினிக்குள்ளிருந்து வெளியே வந்ததும், குசினிக்குள்ளே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நான்கு வயதுப் பேரனின் காதில் நன்றாகக் கேட்குமாறு “ அடேய் பேராண்டி, ஆக்குனது நாட்டுக் கோழிக் கறி. கடிக்க இயலாது என்டு எச்சிக் கோப்பைக்குள்ள போட்டுடாத. நல்ல பெலமா கடிச்சித் திங்கனும் “ என்றது நிப்ராஸ் உற்பட எல்லோர் காதிலும் விழுந்தது.

அந்த வார்த்தையில் இருபது, இருபத்தைந்து , முப்பது இந்த வயதிற்கு கொஞ்சம் கூடிக் குறைந்த அத்தனை நண்பர்களும் தோற்றுப் போகிறார்கள். இறைச்சிக்காக பண்ணைகளில் வளர்த்த கோழி இறைச்சியை சாப்பிட்டு பழகியதால் நமக்குக் கிடைத்த ஆரோக்கியமான நாட்டுக் கோழி இறைச்சி எச்சில் போடப்பட்டது என வருந்தினார்கள்.

*(யாவும் கற்பனை)*

ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# “நான் மட்டுமல்ல...”

“அவன்
அவனாக இல்லை
நீயும்
நீயாகவே இல்லை

நான்
அப்படியே தான்
இருக்கிறேன் “

நான் மட்டுமல்ல
அவனும்
அவன் மட்டுமல்ல
நீயும்
அப்படித்தான்
எண்ணிக் கொள்கிறோம்

தன்னை
நோக்குவதே இல்லை
அவனையும்
உன்னையும் நோக்கும்
அதே கண்கள்...



யோகராசா கவிதா,
அன்னமலை – இலங்கை

# சுதந்திரம்


போருக்குப் பின்னால்
வேரூன்றியது
சுதந்திரம்
புயல் தாக்கிய
மண்ணில் உயிர்
நீத்தாய்

போராளிகளின்
உதிரம் நனைத்த
தியாகத்தின்
நினைவு நாள்
ஓர் இன
ஒற்றுமைக்கே
நீண்ட
இடைவெளியாய்
ஓர் பிரிவிற்கு
பின் நினைவுகளை
மட்டும் தாங்கிய
சுதந்திர பயணம்
வேண்டும்

வலையில் சிக்கித்
திரும்பிய பறவையாய்

◈

மனங்களில் மதம்
பிடித்து மனதிலே
இனப் பாகுபாடு
வேரூன்றிப் போனது
மழைத் துளிகள்
விழுவதன்றி
குருதிகள்
வீழ்கின்றது
பலர் கனவுகளும்
கல்லறை வரை
நினைவுகளும்
வரையறையாகிறது.



# நீதி கதைகள்

## A.S.கோவிந்தராஜன்

### நீதி தவறிய மன்னன்..!!

பூஞ்சோலை என்னும் நாட்டை மதியழகன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அரசரின் மனைவி ஓரளவிற்கு இசைஞானம் அறிந்தவள். தன்னைத் தவிர வேறு யாரும் இசையில் ஞானமுள்ளவர் இல்லை என அவள் நினைத்திருந்தாள்.

ஆண்டுதோறும் கோவில் திருவிழாவில் இசை நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். அத்திருவிழாவில் ராமர் என்ற இசைக்கலைஞர் மிகவும் அழகாக இசை நிகழ்ச்சி நடத்துவார். அவர் இறந்த பின், அவரது மனைவி இறைவனைப் புகழ்ந்துப்பாடுவாள். சில வருடத்திற்குப் பிறகு அரசியாரின் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. ராமரின் மனைவி தன்னை பாட அனுமதிக்காததால் மிகுந்த வேதனை அடைந்தாள். பின் சில காலம் எதிலும் கலந்து கொள்ளாமல் தனித்து நின்றாள்.

இந்த ஆண்டும் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த வருடம் எப்படியாவது இறைவனைப் புகழ்ந்து பாட வேண்டும் என முடிவு செய்தாள், ராமரின் மனைவி. வழக்கம்போல் திருவிழாவில் அரசியாரின் இசைக் கச்சேரி கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மக்கள் அனைவரும் அரசியாரின் இசையை ரசித்து கேட்டு கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென்று மக்கள் கூட்டம் குறையத் தொடங்கியது. அதைப் பார்த்த அரசருக்கு எதுவும் புரியவில்லை. எதற்காக மக்கள் அனைவரும் எழுந்துச் செல்கிறார்கள் என்று பார்க்கச் சொன்னார். அங்கு சென்று பார்த்தால் ராமரின் மனைவி இறைவனை புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட அரசியார் கோபத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார்.

அரசி தன் கணவன் மதியழகனிடம் எவ்வளவு தைரியமிருந்தால் இவள் எனக்கே எதிராக இசைப்பாடுவாள். இவளுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என கோபமாகக் கூறினாள். தன் மனைவியை திருப்திபடுத்துவதற்காக ராமரின் மனைவியை பழிவாங்க நினைத்தார், அரசர்.

அச்சமயத்தில் அரசர் இசைக்கலையில் சிறப்புப்பெற்ற மணிமேகலை என்பவளை அழைத்து இசை நிகழ்ச்சி வைத்தார். நிகழ்ச்சியின் முடிவில், என்னுடன் போட்டியிட யார் தயார்? என்றாள். உடனே மன்னன் ராமரின் மனைவியைப் பார்த்து, அம்மையே! தாங்கள் தான் நம் நாட்டின் பெருமையை நிலைநாட்ட முடியும் என்றார்.

அதற்கு ராமரின் மனைவி, அரசே! நம் நாட்டின் பெருமைக்காக கலந்து கொள்கிறேன் என்றார். உடனே போட்டி பற்றிய விதிமுறைகளை அரசர் அறிவித்தார். இப்போட்டி மூன்று நாட்கள் நடைபெறும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. மணிமேகலை வெற்றி பெற்றால் அரசவைக் கலைஞராகும் தகுதியும், ராமரின் மனைவி தோற்றால் நாடு கடத்தப்படுவதாகவும் மன்னர் அறிவித்தார்.

அரசரின் சதிதிட்டத்தைப் பற்றி புரிந்துகொண்ட ராமரின் மனைவி, இறைவனிடம் சென்று இறைவா! நீ மட்டுமே எனக்குத் துணை என்று கூறி அழுதாள். தொடர்ந்து மூன்று நாட்கள் போட்டி நடைபெற்றது. மூன்று நாட்களும் மணிமேகலையே சிறந்தவள் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

அப்போது ஒரு முதியவர் எழுந்து நடுவர்களிடம் எதன் அடிப்படையில் மணிமேகலையின் இசைதான் சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினீர்கள்? மேலும், மணிமேகலையின் இசை, ராமரின் மனைவி இசைத்த இசை இரண்டிற்கும் இடையேயான நிறை, குறைகளைத் தெளிவாக விவரித்தார். ராமரின் மனைவி இத்தனை சிறப்பாக இசைக்க, அவரை எப்படி தோற்றவர் என்று அறிவித்தீர்கள்? நடுவர்கள் மனசாட்சியோடு தீர்ப்பு வழங்காமல் பொய்யாக தீர்ப்பு வழங்குவது சரியா? என்று கேட்டார்.

இசைக்கும், இறைவனுக்கும் தொடர்பு உண்டு. இசைக்கு அநீதி செய்வதன் மூலம் இறைவனையே அவமதிக்கிறீர்கள் என்றார் முதியவர். இதைக்கேட்டு கடும் கோபத்திற்குள்ளான அரசர் அம்முதியவரை கைது செய்யுமாறு கூறினார். காவலர்கள் அவரை கைது செய்ய சென்றதும் அவர் அங்கிருந்து மறைந்து போனார். பின் கோவிலில் இருந்து பெரும் சத்தம் கேட்டது. முதியவர் இருந்த இடத்தில் இறைவன் காட்சியளித்து மறைந்தார்.

அதிர்ச்சியடைந்த அரசர் தன் தவறை மன்னிக்கும்படி இறைவனிடம் வேண்டினார். தன் மனைவிக்காக தான் செய்தது தவறு எனப் புரிந்து கொண்டு, தன் மகனிடம் அரச பொறுப்பை ஒப்படைத்து அரச வாழ்வைத் துறந்து ஆன்மீக வாழ்விற்குச் செல்வதாக அறிவித்தார்.

◈

## திறமையால் உயிர் தப்பிய குரங்கு!!

ஒரு ஆற்றின் கரையோரத்தில் பெரிய நாவற்பழ மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் குரங்கு ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் ஆற்றில் வசிந்து வந்த பெரிய முதலை ஒன்று அந்த நாவல் மரத்திற்கு அருகில் வந்தது. குரங்கு முதலையை பார்த்து, முதலையே! அதிக சுவையுடைய நாவற்பழங்களை நீயும் ருசித்துப்பார் எனக்கூறி முதலைக்கு நாவற்பழங்களை கொடுத்தது.

அன்றுமுதல் முதலையும், குரங்கும் நண்பர்களாகினர். தினமும் முதலை குரங்கைப் பார்க்க ஆற்றின் கரைக்கு வந்துவிடும். இருவரும் மகிழ்ச்சியாக கதைகளை பேசியும், வாழ்க்கை பற்றிய கருத்துகளை பகிர்ந்தும் வந்தன. மேலும், தான் சாப்பிட்டது போக மீதமிருந்த நாவற்பழங்களை முதலை தன் மனைவிக்கும் எடுத்துச் செல்லும்.

ஒருநாள் முதலையின் மனைவி, அமிர்தம் போல் சுவையுடைய இந்த நாவற்பழங்கள் உங்களுக்கு எங்கே கிடைக்கிறது? என்றது. ஆண் முதலை, எனக்கு நெருங்கிய நண்பனான குரங்கு ஒன்று அன்பாக இந்தப் பழங்களை தருவதாக கூறியது. பின் முதலையின் மனைவி அமிர்தம்போல் இருக்கும் இப்பழங்களை எப்போதும் சாப்பிடும் அந்த குரங்கின் இதயமும் இதைப் போலவே சுவையாகத்தானே இருக்கும் அல்லவா? அதனால் அக்குரங்கை கொன்று அதனுடைய இதயத்தை கொண்டு வருமாறு கூறியது.

உடனே ஆண் முதலை மனைவியிடம், குரங்கு நம்மிடம் நண்பனை போல் பழகுகிறது. மேலும் நம் பசிக்கு பழங்களை கொடுத்து உதவிகளை செய்கிறது. இவ்வளவு உதவிகள் செய்யும் குரங்கிற்கு என்னால் துரோகம் செய்ய முடியாது. அதனால் இந்த எண்ணத்தை இதோடு விட்டு விடு என்று கோபமாக கூறியது.

அதற்கு முதலையின் மனைவியோ, அந்த குரங்கை

எனக்காக கொன்று அதன் இதயத்தை கொடுக்க வேண்டும் என கண்டித்துக் கூறியது. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஆண் முதலை கண்ணீர் விட்டு வருந்தியது. எனக்கு பழங்கள் கொடுத்த குரங்கை நான் எப்படிக் கொல்வது? என வருத்தத்தில் குரங்கைப் பார்க்கச் சென்றது. வெகுநேரம் கழித்து முதலை கவலையோடு வருவதைக் பார்த்த குரங்கு, நண்பனே! ஏன் சோகமாக இருக்கிறாய்? என்று கேட்டது.

அதற்கு அந்த முதலை, உன்னிடம் பழங்களை வாங்கிச் சாப்பிடும் நான் இத்தனை நாட்களாகியும் உன்னை வீட்டிற்கு அழைத்து வராததால் என் மனைவி என்னை திட்டிவிட்டாள் என்று கூறியது. அதனால் நீ உறுதியாக என் வீட்டிற்கு வர வேண்டும் என வற்புறுத்தியது. குரங்கும், சரி என ஒத்துக்கொண்டது. குரங்கும் ஆனந்தமாய் முதலையின் முதுகில் ஏறிக்கொண்டது.

முதலை நடு ஆற்றை தாண்டி சென்றதற்கு பின் குரங்கிடம் உண்மையைக் கூறத் தொடங்கியது. நண்பனே! என்னை மன்னித்து விடு. என் மனைவிக்காக உன்னை நம்பவைத்து, உன்னைக் கொல்வதற்காக வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன் என்றது. இதை கேட்டு அதிர்ச்சியடைந்த குரங்கு, நான் உங்களுக்கு என்ன தீங்கு செய்தேன்? என்னை ஏன் கொன்றுவிடுவதாக கூறுகிறீர்கள் என பயத்துடன் கேட்டது. நீ கொடுத்த நாவற்பழங்கள் அமிர்தம் போல் ருசியாயிருந்தன. ஆகவே, உன் இதயத்தை ருசித்துப் பார்க்க ஆசையாக உள்ளது என தன் மனைவி கூறியதை குரங்கிடம் முதலை கூறியது.

உடனே சமயோசித புத்தியுள்ள குரங்கு, அதை நீ கரையிலேயே கூறியிருந்தால், நாவல்மரத்தின் அடியில் மறைத்து வைத்திருக்கும் ருசி மிகுந்த நாவற்பழங்களை அண்ணிக்காக எடுத்து வந்திருப்பேனே! அந்த ருசி மிகுந்த நாவற்பழங்களை சாப்பிட்டால் நீண்ட காலம் இளமையுடன் உயிர் வாழலாம்! என்றது குரங்கு. அதைக் கேட்டதும் முதலை, நண்பனே! அந்த நாவற்பழங்களை எனக்குக் கொடு. உன்னை நாவல் மரத்தடிக்கு திரும்ப அழைத்துச் செல்கிறேன் என்று கூறி இரண்டும் கரைக்கு வந்தது.

முதலை, நாவற்பழங்களை தருமாறு கூறியது. ஆனால் குரங்கோ முதலையிடம் கோபமாக, உன்னை நல்ல நண்பனாக நினைத்தேன். ஆனால், நீ எனக்கு துரோகம் செய்துவிட்டாய். உன் குணம் என்னவென்று எனக்கு இப்போது புரிந்தது. இனி இந்த நாவல்மரத்தடிக்கு வராதே! என்றது. அதைக்கேட்டு முதலை மிகுந்த வெட்கமடைந்து அந்த இடத்தை விட்டுச் சென்றது.

நீதி :

ஆபத்தில் நேரத்தில் புத்தசாலிதனமாக நடந்து கொள்வதே சிறப்பு.

◈

## தனிச்சிறப்பு..!!

ஒரு அடர்ந்த காட்டில் நிறைய பழம், செடி, கொடி வகைகள் இருந்தன. அக்காட்டில் வளரும் அனைத்து பழங்களும் வருடத்திற்கு ஒருமுறை தனது நண்பர்களை சந்திப்பதற்காக மாநாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதை வழக்கமாக வைத்திருந்தன.

அந்த வகையில் அனைத்து பழங்களும் சேர்ந்து அந்த ஆண்டின் கடைசியில் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்தன. தன் நண்பர்களை சந்திப்பதற்கு ஆர்வமாக அனைத்து பழங்களும் தயாராகிச் சென்றன.

பின் அக்கூட்டத்தில் தலைமையேற்று பேசிய வாழைப்பழம், உலகில் உள்ள பழங்களில் எந்தப் பழம் அதிகச் சுவையுடையது மற்றும் எது சிறப்புடையது? என்ற கேள்வியைக் கேட்டவாறே தன் உரையை முடித்துக் கொண்டு அனைவரையும் மகிழ்ச்சியாக இருக்கும்படி கூறியது.

பின்னர் ஆப்பிள், தன்னை உட்கொள்பவர்களுக்கு நோய் வராமல் தடுக்கும் எதிர்ப்புத்திறன் என்னிடம் உள்ளது என்று கூறியது. உடனே, மாதுளம்பழம் தன்னை உட்கொள்பவர்களுக்கு தோல் புற்றுநோய் வளர்ச்சியைத் தடுக்கும் திறனும், குடற்புண் வருவதை தடுக்கும் சக்தியும் உள்ளது என தன்னைத்தானே பெருமைப்படுத்தி பேசியது.

பின்னர், கொய்யாப்பழம் தன்னை சாப்பிடுபவர்களுக்கு முகத்திற்கு பொலிவையும், அழகையும் தருவேன் எனவும், மேலும் மிக எளிதில் மது போதை பழக்கத்தில் இருந்து விடுதலை பெற முடியும் என்றது. பிறகு, அன்னாசிப்பழம் தன்னை உட்கொண்டால் ஜீரண சக்தியை நன்கு தூண்டக்கூடிய திறன் என்னிடமே உள்ளது என்றது. இவ்வாறு அனைத்து பழங்களும் தன்னைத்தானே உயர்த்தி பேசியது.

ஆனால், திராட்சைப்பழம் மட்டும் எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தது. அனைத்துப் பழங்களும் திராட்சைப் பழத்தை வியப்பாக பார்த்துக் கொண்டிருந்தது. திராட்சைப்பழம் ஏதாவது பேசும் என்று எதிர்பார்த்தன. ஆனால், திராட்சைப்பழமோ எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தது.

திராட்சை அமைதியாக இருந்ததைப் பார்த்த மற்ற பழங்கள் அதைப் பார்த்து இழிவாக நினைத்து சிரித்தது. அச்சமயம் பலாப்பழம் ஒன்று உருண்டு வந்து திராட்சையின் அருகில் நின்றது.

பலாப்பழம், திராட்சைப் பழத்தை பார்த்து அன்புடன் திராட்சையே! நீ ஏன் மௌனமாக இருக்கிறாய்? என்று கேட்டது. ஆனால், திராட்சை எதுவும் பேசாமலே இருந்தது.

திராட்சையே உன்னைப் பற்றி எனக்கு தெரியும். உலகில் உள்ள அனைத்து பழங்களிலும் சிறப்புப்பெற்றவன், நன்மையைச் செய்பவன், நலம் அளிப்பவன், சுவை நிரம்பியவன் நீதான் என்று! ஆனால், அதைத்தவிர ஒரு சிறப்புத் தகுதி உன்னிடம் உண்டு. அதை நீயே கூற வேண்டும். அப்போது தான் மற்றப் பழங்களுக்கும் உன் தகுதி பற்றி தெரியும் என்று கூறியது.

பின்னர், திராட்சைப்பழம் அமைதியாக மற்ற பழங்களைப் பார்த்து, நீங்கள் எல்லோருமே தனித்தனியாகவே வருகிறீர்கள். தனித்தனியாகவே விற்பனை செய்யப்படுகிறீர்கள். ஆனால், நாங்கள் அப்படியல்ல. நாங்களோ, ஒரு கூட்டமாகவும், ஒற்றுமையாகவும், கொத்தாகவும் வளர்கிறோம். நாங்கள் ஒருவர் வளர்வதற்கு இடம் தருகிறோம். விட்டுக்கொடுக்கும் எண்ணத்துடன் வாழ்கிறோம். விற்பனைக்குப் போகும்போதும் நாங்கள் ஒன்றாகவே செல்கிறோம். தனியாக நாங்கள் விலை போவதில்லை.

எங்களைச் அரைத்து சாறாக்கி குடிக்கும்போது ஒன்றாகவே அழிந்து போகிறோம். வாழும்போதும், வளரும்போதும், ஏன் மரணத்திலும் கூட நாங்கள் இணைபிரியாமல் இருக்கிறோம் என்று கூறியது. அதனால்தான் நாங்கள் சிறந்தவர்கள் என்ற அங்கீகாரத்தை அடைந்திருக்கிறோம். வேறு எதுவுமில்லை என்றது.

அப்பொழுது தான் மற்ற பழங்கள் திராட்சையை பற்றி நன்கு தெரிந்துக்கொண்டது. தாங்கள் சிரித்ததற்கு திராட்சையிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டது.

நீதி :

ஒற்றுமையாக இருப்பதே தனிச்சிறப்பு. மற்றவர்களை காட்டிலும் நாம் தனிச்சிறப்புடன் இருக்க வேண்டுமானால் திராட்சையை போல் ஒன்றுப்பட்டு இருக்க வேண்டும்.

◈

## சுயநலத்துடன் பழகிய நண்பன்!!

ஒரு ஊரில் மோகன், சூர்யா என்ற இரு நெருங்கிய நண்பர்கள் இருந்தனர். மோகன் எந்தவொரு எதிர்பார்ப்பும், சுயநலமின்மையும் இல்லாதவர். ஆனால், சூர்யா கொஞ்சம் சுயநலம் உள்ளவர். மோகன் இதை அறியாமல் சூர்யாவை முழுவதுமாக நம்பினார். சூர்யா அடிக்கடி மோகனிடம் ஐம்பது, நூறு என்று கடன் வாங்குவார். ஆனால், திருப்பித் தராமல் காலம் கடத்துவார்.

மோகனின் மனைவி, ஏன் உங்கள் நண்பர் கேட்கும் போதெல்லாம் கடன் கொடுக்கிறீர்கள். அவரோ திருப்பித் தருவதில்லை. நாம் என்ன வசதியாகவா இருக்கிறோம்? நாமும் கஷ்டத்தில் தானே இருக்கிறோம். நான் இப்படிச் சொல்வதால் உங்கள் நண்பரை குறை சொல்வதாய் நினைக்க வேண்டாம் என்பாள். மோகன் அதை கண்டுகொள்ள மாட்டார். மோகன் மனைவியும் அதற்கு மேல் எதுவும் பேச மாட்டாள்.

வழக்கம்போல் ஒருமுறை சூர்யா, மோகனிடம் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டார். மோகனிடம் அவ்வளவு பணம் இல்லை. தன்னிடம் பணம் இல்லையென்று கூற முடியாமல் இருந்தார். மோகன் தன் மனைவியிடம் கூறியபோது அவள், நம்மிடம் ஆயிரம் ரூபாய் இல்லை என்று உங்கள் நண்பரிடம் கூறிவிடலாம் என்றாள்.

உடனே மோகன், அப்படி எல்லாம் கூற முடியாது என்றான். பின் தன் நண்பனுக்காக வீட்டிலிருந்த உடைந்துபோன தங்க மோதிரம் ஒன்றை அடகு வைத்து ஆயிரம் ரூபாயை வாங்கி நண்பன் சூர்யாவிடம் கொடுத்தார். மோதிரத்தை அடகு வைக்க இருவருமே சென்றனர். இதனால் மோகனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டையே வந்துவிட்டது.

பல மாதங்களாகியும் சூர்யா மோகனிடம் வாங்கிய பணத்தை திருப்பித் தரவில்லை. மோகனும் அவனிடம் கேட்கவில்லை.

மோகனின் மனைவி, பணத்தை திருப்பி கேட்காவிட்டால் தன் தாய் வீட்டுக்குப் போய்விடுவதாக பயமுறுத்தியதால், மிகவும் பணிவாகவே தன் நண்பனிடம் பணம் பற்றிக் கேட்டார். கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டதும் சூர்யாவிற்கு கோபம் வந்துவிட்டது. ஆனால், கோபத்தை வெளிக்காட்டாமல் பணத்தை திருப்பித் தருவதாகக் கூறினார். அப்போது சூர்யாவிடம் பணம் இருந்தது. ஆனால், பணத்தை திருப்பித் தர மனம் வரவில்லை.

ஒருநாள் இருவரும் இரவு படம் பார்த்துவிட்டு நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்த பாதையில் ஆள் நடமாட்டமே இல்லை. திடீரென ஒரு திருடன் அவர்கள் எதிரே வந்து கத்தியைக் காட்டி கையில் உள்ள பணத்தை தரும்படி கூறினான்.

மோகனிடம் பத்து ரூபாய் மட்டுமே இருந்தது. ஆனால் சூர்யாவிடம் ஆயிரம் ரூபாய் இருந்தது. உடனே சூர்யா தனது பாக்கெட்டிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து உனக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாயை வாங்கிக்கொள் என்றார். உனக்குக் கொடுக்கவேண்டிய கடனை இப்போதே அடைத்துவிட்டேன் என்று கூறி அப்பணத்தை மோகனின் கைகளில் வலுக்கட்டாயமாக கொடுத்துவிட்டார். திருடனும் மோகனின் கையிலிருந்து பணத்தைப் பிடிங்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

நல்ல வேலையாக நான் பிழைத்தேன். எப்படியும் திருடன் நம்மிடமிருந்து ஆயிரம் ரூபாயைப் பறித்துச்

சென்றிருப்பான். நமக்கு நஷ்டமாகியிருக்கும். நல்லவேளை பணத்தை மோகனிடம் கொடுத்ததால் நமது கடனும் தீர்ந்தது என்று நிம்மதியாக இருந்தான். மோகனின் பணம்தானே திருடுப்போனது. நமக்கொன்றும் நஷ்டமில்லையே. தான் நன்றாக சிந்தித்து செயல்பட்டோம் என தன்னைத்தானே புகழ்ந்து கொண்டார், சூர்யா.

அப்போது தான் மோகன், சூர்யாவின் மோசமான எண்ணத்தை புரிந்து கொண்டார். அச்சமயம் தன் மனைவி கூறிய சொற்கள் எல்லாம் நினைவுக்கு வந்தது. நீயெல்லாம் ஒரு நண்பனா? உன்னைப் பற்றி இப்பொழுது நன்றாக புரிந்து கொண்டேன். உன்னைப் போல் ஒரு சுயநலமான நண்பன் இனி எனக்குத் தேவை இல்லை. ஆயிரம் ரூபாயை இழந்ததன் மூலம் எனக்கு நல்ல பாடம் கிடைத்தது. இனி உன் பொய்யான நட்பு எனக்குத் தேவையில்லை என்று சொல்லி வேகமாக வீடு வந்து சேர்ந்தார், மோகன்.

நீதி :

யார் நல்லவர் என்பதை நமது கடினமான சூழ்நிலையில் தான் புரிந்துக்கொள்ள முடியும்.

◈

## அழகைப் பார்த்து ஏமாந்த மீன்!!

இயற்கை எழில் நிறைந்த அழகான ஊர் தான் புதூர். அங்கு ஏரி, குளங்கள் என நீர் நிலைகள் நிறைந்திருக்கும். அங்குள்ள ஒரு குளத்தில் பல வகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. அக்குளத்தில் உள்ள மீன் குட்டிகள் எப்பொழுதும் கூட்டமாக விளையாடிக் கொண்டிருக்கும்.

அதில் ஜானி, பட்டு என்ற இரு குட்டி மீன்கள் விளையாடிக் கொண்டிருந்தன. ஜானி, ஏய்! பட்டு எங்கே என்னைப் பிடி பார்க்கலாம் என்றது. அதற்கு பட்டு, என்னிடமே சவால் விடுகிறாயா? இப்பொழுது பார். ஒரு நொடியில் உன்னை பிடிக்கிறேன் என்று கூறி விளையாடிக் கொண்டே கரையோரம் வந்தன.

அச்சமயம் கரையில் ஒரு காகம் புழுக்களைக் கொத்திக் கொண்டிருப்பதை பார்த்து, 'ஏய் ஜானி, அங்கே பார் அவன் எவ்வளவு கருப்பாக இருக்கிறான்.'' மேலும் அவன் குரலை நீ கேட்டிருக்கிறாயா? அருவருப்பாக இருக்கும். அவனை பார்த்தாலே பயமாக இருக்கிறது. வா! ஜானி நாம் உள்ளே சென்று விடலாம் என்று கூறியதும், எல்லா மீன்களும் குளத்திற்குள் வேகமாக சென்றுவிட்டன.

வேக வேகமாக மீன்கள் உள்ளே சென்றபோது, குட்டிகளா! ஏன் இப்படி அவசரமாக ஓடி வருகிறீர்கள்? என்று அங்குள்ள ஒரு பெரிய மீன் கேட்டது. கரையோரத்தில் ஒரு காகம் இருக்கிறது. அக்காகத்தின் நிறம் மற்றும் குரலைக் கேட்டால் பயமாக இருக்கிறது. அதனால்தான் வேகமாக ஓடி வந்தோம் என்றது, பட்டு.

அதற்கு அந்த பெரிய மீன் காகத்தால் நமக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றது. 'உருவத்தை மட்டுமே வைத்து ஒருவரைப்பற்றி தவறாக நினைக்கக்கூடாது'' என்று பெரிய மீன் கூறியது. மற்ற மீன்குட்டிகள் இந்த தாத்தாவுக்கு வேறு வேலையே இல்லை. எப்பொழுதுமே உபதேசம் தான் என்று கூறிவிட்டு சென்றன.

தினமும் காகத்தைப் பார்த்து கரைக்குச் செல்லாமல் குளத்தினுள்ளேயே விளையாடிக் கொண்டிருந்தன, மீன்கள். சில நாட்களுக்குப் பிறகு குளத்தின் கரையில் கொக்கு ஒன்று அமர்ந்திருந்தது.

அதை பார்த்த மீன் குஞ்சுகள், ஏய்! அங்கே பாருங்கள். வெள்ளை நிறத்தில் எவ்வளவு அழகாக இருக்கிறது. அதன் அலகு நீளமாக மட்டுமில்லாமல் கூர்மையாகவும் உள்ளதே! அதனுடைய நடையைப் பார் என்று கொக்குவை வர்ணித்துக் கொண்டிருந்தது.

மீன் குஞ்சுகள் பேசும் சத்தம் கேட்டு குளத்தை நெருங்கியது, கொக்கு. உடனே மீன் குட்டிகள் கொக்குவைப் பார்த்து நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள், உங்களது அலகை தொட்டுப் பார்க்கலாமா? என்று ஒரு மீன் குட்டி கேட்டது.


அக்குட்டிமீன் அவ்வாறு கேட்டதும் கொக்கு மகிழ்ச்சியில் மூழ்கியது. உடனே, கொக்கு தொட்டுப் பார் என்று கூறியது. ஒரு மீன் குட்டி கொக்கிடம் சென்றதும், கொக்கு அந்த மீனை கவ்விக் கொண்டது. நன்றாக மாட்டிக்கொண்டாயா? என்றது.

கொக்கிடம் மாட்டிய மீன் ஆ! என்னை விட்டிவிடுங்கள்! என்று கெஞ்சியது. இதை பார்த்த மற்ற மீன் குட்டிகள் ஆபத்து ஆபத்து வேகமாக ஓடுங்கள் என்று அனைத்து மீன்களும் குளத்திற்குள் சென்றன. ஆனால், அந்த கொக்கு கவ்விய மீனுடன் வானத்தில் சென்று மறைந்தது. மற்ற மீன் குட்டிகள் அந்த தாத்தா மீன் சொன்னது சரிதான்.

அழகை மட்டும் பார்த்து ஒருவருடன் பழகக்கூடாது என்று அனைத்து மீன்களும் உறுதியெடுத்துக் கொண்டன. அன்று முதல் அனைத்து மீன் குட்டிகளும் கவனமாக இருந்தன. மகிழ்ச்சியாக குளத்தில் வாழ்ந்து வந்தன.

நீதி :

அழகற்று இருப்பது எல்லாம் தீயதுமல்ல. அழகாக இருப்பது எல்லாம் நல்லதுமல்ல.


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023